# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:6 வள்ளுவர் ஆண்டு2028புரட்டாதி18சனிக்கிழமை(04-10-1997) SANJEAVY-Regenerative Tamil Weeklyசிகரம்:18


# இணைப்பைத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பா?

## தமிழ்க் கட்சிகள் கடுஞ் சீற்றம்

கொழும்பு, ஒக்ரோபர் 4

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக் குறித்துத் தீர்மானிப்பதற்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது என அரசு தீர்மானித்திருப்பது தமிழ் அரசியல் கட்சிகளை கடுஞ் சீற்றமுற வைத்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்க் கட்சிகள் அனைத்துமே கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தைக் கடுமையாக எதிர்ப்பதாகத் தெரிய வருகின்றது.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு தென்கிழக்கு மாகாண அலகு ஒன்றை அமைப்பது என்ற திட்டம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கனவே உடன்பாட்டுக்கு வந்திருப்பது தெரிந்

(8ஆம் பக்கம் பார்க்க)

### புளியங்குளம் மோதலில் இறந்த

## புலிகள் - படையினர் சடலங்கள் செஞ்சிலுவை மூலம் கையளிப்பு

வவுனியா, ஒக். 4

கடந்த செவ்வாய்க்கிழமை புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதலின்போது படையினரால் கைப்பற்றப்பட்ட 16 விடுதலைப் புலிகளின் சடலங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் வன்னிக்கு புலிகளிடம் கையளிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

இந்த மோதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட 13 இராணுவத்தினரின் சடலங்களை நேற்று முன்தினம் மாலை மல்லாவியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் புலிகள் கையளித்தனர். அவற்றை நேற்று முன்தினம் இரவே வவுனியாவில் படையினரிடம் செஞ்சிலுவை அதிகாரிகள் கையளித்தனர். அச்சடலங்களில் மூன்று அடையாளம் காணப்படமுடியாத அளவுக்கு பழுதடைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## கந்தரோடை சம்பவம்: படைத்தரப்பு அறிக்கை

கடந்த புதன்கிழமைகாலை 10-00 மணிக்கு கந்தரோடையில் விடுதலைப் புலிகளின் வலிகாமம் பொறுப்பாளர் கண்ணனையும், வேனிலான் என்பவரையும் படையினர் சுட்டுக்கொன்றதாக 51 ஆவது படையணி வட்டாரங்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது:-இரண்டு கண்ணிகள், ஒரு தற்கொலைக் குண்டு, 5 கிரனேட்டுகள், 5 எலக்ட்ரிக் வெடி கருவிகள், ஓர் எக்ஸ்புளோடர், 9 எம். எம். ரவை ஒன்று, எஸ்.எம். ஜி. மகஸின் இரண்டு, டைமருடன் கூடிய மணிக் கூடு ஒன்று, ஒருபெல்ட், ஒரு ரேடியோ செற், ஒரு சயனைட் குப்பி. (உ)

## செல்வா நினைவாலயத்தில் நேற்றுக்காலை மலரஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 4

தந்தை செல்வநாயகத்தின் நினைவாலயத்தில் நேற்றுக் காலை மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

தந்தை செல்வா நினைவுக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் கணிசமானோர் பங்கு பற்றினர்.

மில்க்வைற் அதிபர் சிவதர்மவள்ளல் கலாநிதி க. கனகராசா, அண்ணாகோப்பி நிறுவன உரிமையாளர் எஸ். பி. நடராசா, முன்னாள் யாழ். நகர துணை முதல்வர் பீ. எவ். சேவியர், தமிழரசுக்கட்சிப் பிரமுகர் பழனியப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் சு. க. பிரமுகர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஒக். 4

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணப் பிரமுகரும், லேக்ஹவுஸ் பத்திரிகைகளின் யாழ். முகவருமான தர்மலிங்கம் நேற்றிரவு 9-00 மணியளவில் அரியாலை — கொழும்புத்துறைப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவந்தது. (உ)

## திருமலை சுற்றிவளைப்பு

திருகோணமலை, ஒக். 4

திருகோணமலை நகரை அண்டிய பிரதேசத்தில் அநுராதபுரம் சந்தி உட்பட எட்டுக் கிராமங்கள் படையினரால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டது.

அங்கு நடந்த தேடுதலின் போது கைது செய்யப்பட்ட 18 பெண்கள் உட்பட 32 பேர் மேல் விசாரணைக்காக உப்புவெளி பொலீஸ் நிலையத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டனர். (உ-ரி-21)

## முன்னாள் அரச அதிபருக்கு பிணை அனுமதி

முன்னாள் யாழ். அரச அதிபர் செல்லையா பத்மநாதன் நேற்று ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பிணையிலும், 5 லட்சம் ரூபா சரீரப்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவர் மாதத்தில் ஒரு தடவை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சமுகமளிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் மெர்வின் காமினி விஜயதுங்க நேற்று இந்தப் பிணை அனுமதியை வழங்கினார். (உ-3-21)

## மன்னாரில் கிளைமோர்

மன்னாரில் தாழ்வுபாடு பகுதியில் நேற்றுக் காலை 9-30 மணிக்கு இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த ஒரு லெப்டினன்ட் உட்பட நான்கு படையினர் படுகாயமடைந்தனர்; அருகில் சென்றுகொண்டிருந்த மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர்; மற்றும் இருவர் காயமுற்றனர்.

படுகாயமுற்ற தமது சகாக்களை மீட்பதற்கு இராணுவ ட்ரக் ஒன்றில் சென்றுகொண்டிருந்த நான்கு படையினர் அவ்விடத்தில் அந்த ட்ரக் தடம்புரண்டதில் காயமுற்றனர். (உ-21)

### காணாமற்போனோர் விடயம்:

## 10 சம்பவங்கள் குறித்து சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஒக். 4

யாழ். குடாநாட்டில் காணாமல் போனோர் விடயத்துக்குப் பொறுப்பானவர்கள் என அடையாளம் காணப்பட்ட படையினருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை அல்லது சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற கொலைகள் என்று கூறப்படும் பத்து சம்பவங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் ஏற்கனவே சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ். குடாநாட்டில் காணாமல் போனோர் தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவென பாதுகாப்பு அமைச்சால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் செயற்பாடு குறித்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

வன்னியிலும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலும்— யாழ்ப்பாணம் வருவதற்கு போக்குவரத்து வசதியின்றி— இன்னும் 70 ஆயிரம் பேர் சிக்குண்டிருப்பதாக சில செய்திகள் தெரிவிக்கின்றன.

காணாமல் போனோர் என்று கருதப்படுவோரில் சிலர் இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களாக இருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

தனது உறுப்பினர்களை இழந்து வருவதால் விரக்தியுற்றுள்ள விடுதலைப் புலிகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஐவரின் விவரம் நேற்று வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ். குடாநாட்டில் கைதாகித் தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி வந்த பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு மேலும் ஐவரின் தகவல்களை நேற்று வெளியிட்டுள்ளது.

இந்தக் குழு கடந்த சில நாள்களுக்கு முன்னர் 176 பேரின் விவரங்களை வெளியிட்டிருந்தது.

அந்தக் குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ள ஐவரின் விவரம் வருமாறு:

★ தங்கவேலு பிரேமநாத் — வாரியப்புலம், சுன்னாகம்.

★ மாயகிருஷ்ணன் சுரேஷ்குமார் — சுழிபுரம் மத்தி.

★ மார்க்கண்டு சதீஸ்குமார் — பெரியமாவடி, சாவகச்சேரி.

★ நிக்சன் ஜெரால்ட் — பிள்ளையார் கோயிலடி, நெடுங்குளம்.

★ செல்வத்துரை குணரத்தினம் — சுழிபுரம்.

(உ-3)

## திருமலையில் நேற்று உண்ணாவிரதம்

திருகோணமலை, ஒக். 4

யாழ். குடாநாட்டில் கைதான பின்னர் காணாமல் போனோர் குறித்து தகவல் தரக்கோரி, யாழ். மாவட்டத்தில் நடத்தப்படும் சாத்வீகப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து, நேற்று திருமலை சிவன் கோயில் முன்றலில் அடையாள உண்ணாவிரதம் இடம்பெற்றது.

தமிழ்ப்பகுதி எங்கும் புளொட் அமைப்பு நடத்தி வரும் தொடர் உண்ணாவிரதத்தின் ஓர் அங்கமாகவே நேற்று திருமலையில் உண்ணாவிரத நிகழ்வு இடம்பெற்றது. சுமார் ஐம்பது பேர் வரை அதில் கலந்து கொண்டனர்.

வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் பி. பாலச்சந்திரன், திருமலை நகர சபைத் தலைவர் சூரியமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-21-ரி-3)

## கொழும்பிலும் ஆர்ப்பாட்டம்

காணாமல் போனோர், கைதானவர்களின் குடும்பத்தவர்கள், உறவினர்கள் இரண்டாவது நாளாக நேற்றும் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றகைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் இதில் பங்குபற்றினர்.

தென்னிலங்கையில் உள்ள மனித உரிமைகள் அமைப்புக்கள் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

05-10-1997 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 19-10-1997 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- செயலாளர்

(சி/1689)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் அம்பலம் சின்னத்தம்பி

(முன்னாள் ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, ஓய்வுபெற்ற அதிபர் உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை)

மண்ணில்: 04 – 02 – 1932
விண்ணில்: 04 – 10 – 1996

திதி: 24 – 09 – 97 அட்டமி


ஆண்டு ஒன்று போனாலும் ஆறவில்லை என் துயரம். நித்தம் நினைந்து நெக்குருக வைத்து விட்டு காலன் வந்து கவர்ந்தானே உன் உயிரை. பன்றித் தலைச்சி அம்மாளின் அருளால் உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறேன்.

சி. பவளராணி
(மனைவி)

''பவளகிரி''
உடுப்பிட்டி.
(50210)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்: 11 — 08 — 1941



மறைவு: 04 — 09 — 1997

### அமரர் கந்தையா இராசலிங்கம்

(ஈழநாடு)

அன்பின் மணிவிளக்கே! ஆருயிர் அப்பாவே!
எம்மைக் கதற வைத்து எங்குதான் சென்றனையோ?
இல்லமதில் அன்பு வளர்த்து நீராண்ட பண்பு
இன்றும் என்றும் இருக்குமப்பா!
இரவோடு பகலாய் திங்கள் ஒன்று கழிந்தாலும்
தீராத துயரோடு நாம்---
உலகிருக்கும் வரை உற்றதுயர் நீங்கிடுமோ
உங்கள் ஆன்மா சாந்தி பெற
ஆண்டவரை வேண்டுகின்றோம்.

எமது குடும்பவிளக்கு நோயுற்ற வேளை அயராது உழைத்த வைத்திய கலாநிதி, வைத்தியர்கள், தாதிகள் அனைவருக்கும் மறைந்த செய்தியறிந்து உடன் நின்றும் ஏனையவற்றில் பங்கு பற்றி உதவிகள் புரிந்தோருக்கும் எங்கள் அனைவரினதும் உள்ளங் கனிந்த நன்றிகள்.

- குடும்பத்தினர்.

61 (02) குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம்.
(50278)

## சமய சந்நிதியில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் சனி தோத்திரப்பாடல் விரிவுரை இடம்பெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவில் இன்று மாலை 4.30 மணிக்கு ''அமைதியின் தெய்வமே இறைவா'' என்ற தலைப்பில் ஆலயப் பங்குத் தந்தை உரையாற்றுவார். (ஐ-30)

★ ★ ★

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு சந்தன முதலிச்சி புலம் ஸ்ரீ நடராச முருகமூர்த்தி தேவஸ்தான — மண்டலப் பூர்த்தி விழாவும்— மகாசங்காபிஷேகமும் நாளை காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது (உ-31)

## நாளை

வில்லிசைப் புலவர் க.நா. கணபதிப்பிள்ளையின் (சின்னமணி) 45வருடகால கலைச் சேவையைப் பாராட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மணிவிழாவும், ''கலைமலர்'' ஒளிநாடா வெளியீட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30மணி முதல் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் வீ.எஸ் மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கல்வி உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் இ.யோகநாதன் கலந்து கொள்வார். (ஐ-9-173)

★ ★ ★

மட்டுவில் வடக்கு ஐங்கரன் சனசமூக நிலைய ஆதரவில் மட்டுவில் சத்துரங்கிராய் திடலில் நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மாட்டு வண்டில் சவாரி நடைபெறவுள்ளது. சவாரியில் பங்கு பற்றும் காளைகள் ஏ.பி.சி. என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகளில் ஓட விடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-31)

## மாணவருக்கு அழைப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் வழங்கப்படவுள்ள புலமைப் பரிசில்திட்டத்திற்கு பாடசாலை அதிபர்களினால் சிபார்சு செய்யப்பட்ட மாணவர்களை இன்று சனிக்கிழமை காலை 10. மணிக்கு சாவகச்சேரி—தபாலக வீதியில்உள்ள லயன்ஸ் கழக அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி அரிமாக்கழக தலைவர் - லயன் விஜயகுமார் கேட்டுள்ளார். (உ-31)

## அதிரடிப்படை வீரர் விபத்தில் பலி!

மட்டக்களப்பு புளுக்குனாவ பகுதியில் புதன்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்து சில்லுக்குள் சிக்கி மரணமானார்.


எமது புதிய வெளியீடு!

அருண்பாண்டியன், பானுசந்தர்... நடித்த

சின்னதுரை பெரியதுரை

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(50285)


## மருத்துவ பீட மைதானத்தில் மிதி வெடிகள் அகற்றப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 4
யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட விளையாட்டு மைதானப் பகுதியில் படையினரால் கைவிடப்பட்ட காப்பரண் பகுதியில் உள்ள மிதி வெடிகள் அப்புறப்படுத்தப் படவுள்ளன.

இந்தக் காப்பரண் பகுதியிலுள்ள மிதிவெடிகளை அப்புறப்படுத்துமாறு யாழ். பல்கலைக்கழக அதிகாரிகள்யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் மெண்டிஸிடம் கேட்டிருந்தனர்.

இதனையடுத்து இப்பகுதியிலுள்ள மிதிவெடிகள் அப்புறப்படுத்தப்படவுள்ளன. ஐ-173)

## நீங்கா நினைவலையில் கண்ணீர் அஞ்சலி



### அமரர் அரியகுட்டி நாகரத்தினம் (குகன்)

(உரிமையாளர்: குகன் ஸ்ருடியோ பருத்தித்துறை)

(1936 — 1997)

வானமது சென்று வாரமொன்று ஆச்சு ஐயா நாங்கள்
வேதனையில் வாடுகின்றோம் தாங்கள் தந்த நிழலினிலே
கோலமதின் சாதனைகள் இன்றும் கொடி கட்டிப் பறக்குதையா
காலமதால் மறைந்திடுமோ தாங்கள் செய்த புண்ணியங்கள்?

துயரால் வாடும்:
ஊழியரும், குடும்பத்தினரும்
குகன் ஸ்ருடியோ

பருத்தித்துறை.
(50268)

## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் நடராசா

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த நமசிவாயம் நடராசா 02-10-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சிவக்கொழுந்தின் அன்புக்கணவரும், ஈஸ்வரி, பரமானந்தன், சிறீஸ்கந்தராசா, குணநாதன் (நோர்வே), பேரின்பநாதன் (சுவிஸ்), ரங்கநாதன் (கனடா), சறோஜினி வேலாயுதப்பிள்ளை ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
ஈஸ்வரி பரமானந்தம்
(மகள்)

சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(50282)

### டாக்டர் சி. மாசிலாமணி

வதிரி பவானியைச் சேர்ந்த, கரவெட்டி சிலம்பு வைத்தியரின் மகன் டாக்டர் சி. மாசிலாமணி அவர்கள் 03-10-1997இல் காலமாகிவிட்டார். அன்னாரின் தகனக் கிரியைகள 04-10-97 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
சோ. மகேஸ்வரன்
(மருமகன்)

பவானி
வதிரி.
(50275)

### கந்தசாமி சப்தமீரா

புற்றளை புலோலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி சப்தமீரா 02 - 10 - 1997 இல் காலமானார்.

இவர் திரு. திருமதி செல்லப்பா கந்தசாமி தம்பதிகளின் அன்பு மகளும் சப்தப்பிரியாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04- 10- 97 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புற்றளை இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. கந்தசாமி
(தந்தை)
(மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழக கிளை)

புற்றளை,
புலோலி தெற்கு,
புலோலி.
(சி/1691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது தென்னாபிரிக்கா!

ஸ்ரீ லங்காப் படைகளுக்கு என கடந்த ஜூலையில் கப்பலில் ஏற்றிவரப்பட்ட — 32 ஆயிரத்து 400 எண்ணிக்கையுடைய — 81 எம். எம். மோட்டார் ஷெல்கள் இடைவழியில் கூண்டோடு காணாமற்போயிருப்பதை, அதை கப்பலில் அனுப்பி வைத்த ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சு தற்போது உத்தியோகபூர்வமாக ஒப்புக் கொண்டிருக்கின்றது.

இந்த ஷெல்களை ஏற்றி வருகின்ற கப்பலை ஒழுங்கு படுத்துவதில் தங்களுடன் கூட்டாக இயங்கிய இஸ்ரேல் ஆயுதத் தரகர் ஒருவரே இந்த ஆயுதங்கள் இடைவழியில் காணாமற் போனதற்கு பின்னணியில் செயற்பட்டுள்ளார் என்று ஸிம்பாப்வே தரப்பு குற்றஞ் சுமத்துகின்றது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அந்த நபர், அந்த மோட்டார் ஷெல்கள் அனைத்தும் புலிகளின் கைகளில் இப்போது வீழ்ந்து விட்டன என்பதை மட்டும் ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

இந்த ஆயுத இழப்புக் குறித்த விவரங்களை ஸிம்பாப்வேயின் 'பினான்ஸியல் கஸெட்' என்ற பத்திரிகை கடந்த வாரம் விஸ்தாரமாக வெளியிட்டது.

அதன் படி —

மேற்படி மோட்டார் ஷெல்களை விநியோகிக்கும் ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சின் தொழில் பிரிவுக்கு கேணல் ரிஷிங்காடப் (Colonel Tshinga Dube) என்பவரே தலைவர்.

மேற்படி மோட்டார் ஷெல்களை இலங்கைக்கு ஏற்றிச் செல்வதற்கான கப்பலை ஒழுங்குபடுத்தி, அதனை நிறைவேற்றுவது தொடர்பாக ஸிம்பாப்வே பாதுகாப்பு தொழிற்சாலைப் பிரிவு, இஸ்ரேல் பிரஜையான ரோஷி என்பவருடன் ஒப்பந்தம் செய்திருந்ததாகவும் —

இவரையும், இவர் ஒழுங்கு படுத்தித் தந்த கப்பலையும், அதன் கப்டனையும் சர்வதேச பொலீஸார் (இன்டர் போல்) தேடிவருவதாகவும் —

கேணல் டப் கூறுகின்றார்,

ஆனால் இஸ்ரேலில் உள்ள ஓர் இராணுவ நிறுவனமான எல். பி. ஜியின் சிரேஷ்ட பிரதி நிதியான ரோஷியை இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவ் இல் உள்ள அவரது நிறுவன தொலைபேசி மூலம் எந்நேரமும் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் —

எனவே சர்வதேச பொலீஸாரால் அவர் தேடப்படுகின்றார் என்ற கூற்றில் எவ்வளவு உண்மையிருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் —

'பினான்ஸியல் கஸெட்' கூறுகின்றது.

''எமது நிறுவனம் மேற்படி மோட்டார் ஷெல்களுக்குத் தேவையான சில உதிரிப்பாகங்களை மட்டுமே ஸிம்பாப்வேக்கு விநியோகித்தது. அதற்கு மேல் இந்த விவகாரத்தில் எமக்குத் தொடர்பு எதுவுமில்லை. அந்த மோட்டார் ஷெல்கள் மிகத் தரமானவை என்பதும் எனக்கும் தெரியும். ஆனால் என்னை ஏன் இந்த விடயத்தில் தொடர்படுத்துகின்றார்கள் என்பது மட்டும் விளங்கவில்லை. கப்பலை புலிகள் கடத்திச் சென்றுவிட்டார்கள் என்பது ஸ்ரீலங்கா அதிகாரிகளுக்கே நன்கு தெரியும்'' — இவ்வாறு கூறுகின்றார் இஸ்ரேல் ஆயுதத் தரகரான ரோஷி.

''காணாமற் போனதாகக் கூறப்படும் கப்பலை வாடகைக்கு அமர்த்தியவர்கள் ஸிம்பாப்வே பாதுகாப்பு தொழிற்சாலைப் பிரிவினரே; நான் அல்லன். ஜூலை 4 ஆம் திகதிக்கும் 31 ஆம் திகதிக்கும் இடையில் மூன்று கப்பல்களை புலிகள் கடலில் வைத்துக் கடத்தியிருப்பதாக இலங்கை இராணுவம் என்னிடம் தெரிவித்துள்ளது.'' — இப்படி அவர் மேலும் சொன்னார்.

காணாமற் போன ஷெல்களின் பெறுமதி ஒருகோடி 80 லட்சம் அமெரிக்கடொலர் (சுமார் நூறுகோடி ரூபா) என்று ஸிம்பாப்வே அதிகாரி கேணல் டப் கூறுவதாகவும் —

ஆனால் ஸ்ரீலங்கா அதிகாரிகளோ அதன் பெறுமதி 3 கோடி அமெரிக்க டொலர்கள் (சுமார் 180கோடி ரூபா) என்று கூறுவதாகவும் —

'பினான்ஸியல் கஸெட்' குறிப்பிட்டுள்ளது.

சட்டரீதியானமற்றும்சட்ட விரோதமான முறைகளில் செயற்படும் மூன்று சர்வதேச சப்பல் நிறுவனங்களை வெவ்வேறு பெயர்களில் புலிகள் நடத்திவருவதாகவும் —

அத்தகைய கப்பல் ஒன்றில் இந்த ஆயுதங்களை ஏற்றி, அது தொடர்பாக விரிக்கப்

## பாசுபதன்

பட்ட வலைக்குள் ஸிம்பாப்வேத் தரப்பு சிக்கியிருக்கலாம் எனவும் —

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கின்றது.

இதற்கிடையில் —

மோட்டார் ஷெல்களை இடைவழியில் அபகரித்து, புலிகளின் வன்னித்தளத்துக்கு அனுப்பி வைக்கும் 'ஒப்பரேஷனை' புலிகளின் சர்வதேச ஆயுதக் கொள்வனவாளரான குமரன் பத்மநாதன் என்பவரே நடத்தி முடித்ததாக தற்போது நம்பப்படுகின்றது.

கொழும்பு புலனாய்வுப் பிரிவினரால் அவரது பெயரின் முதலெழுத்துகளின் அடிப்படையில் 'கேபி' எனக் குறிப்பிடப்படுபவர் குமரன் பத்மநாதன்; நேரடியாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கீழ் செயற்படுபவர் இவர்.

புலிகளுக்குத் தேவையான ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடிகுண்டுகள், ஆயுதத் தளபாடங்கள் போன்றவற்றை சர்வதேச சந்தையில் கொள்வனவு செய்து புலிகளுக்கு அனுப்பி வைக்கும் முக்கிய பொறுப்பை கே. பியே தனித்துச் செய்வதாகவும் கூறப்படுகின்றது.

புலிகளின் சர்வதேச கப்பல் நிறுவனச் செயற்பாடுகளையும் இவரே நிர்வகிப்பதாக நம்பப்படுகின்றது. அண்மையில் மீளமைக்கப்பட்ட டெல்டா (மரைன்) லிமிட்டெட், பிளைமவுத் மரைன் லிமிட்டெட், மரைன் ஷிப்பிங் அண்ட் ரேட் லிமிட்டெட் உட்பட சில கப்பல் நிறுவனங்களை இவர் மேற்பார்வை செய்து நடத்துகின்றார்.

தங்கள் வசதிக்கு ஏற்றபடி பல்வேறு நாடுகளின் கொடிகளைத் தாங்கிய குறைந்தது ஆறு கப்பல்களை புலிகள் சர்வதேச கப்பல் போக்குவரத்துத் தடத்தில் விட்டிருக்கின்றனர். அவற்றில் ஸ்வினி (மோல்ற்றா), நிவ்ளை (பனாமா), ஷோவா மாறு (லைபீரியா) ஆகிய கப்பல்களும் அடங்கும்.

உலகின் பல நாடுகளுக்கும் பொருள்களை ஏற்றிப் பறக்கும் சட்டபூர்வ செயற்பாடு மூலம் சர்வதேச ரீதியில் வலைப்பின்னல் ஒன்றை புலிகள் ஸ்தாபித்திருக்கின்றார்கள். இந்தப் பின்னணியைப் பயன்படுத்தி, சர்வதேச கப்பல் பாதையில் ஆயுதங்களைக் கொண்டுவந்து, கிழக்கு பாதை மூலம் அவற்றை நாட்டுக்குள் புலிகள் கடத்துகின்றார்களாம்.

ஸிம்பாப்வேயிலிருந்து வந்த ஷெல்களை கபளீகரம் செய்த நடவடிக்கை, பெருமளவு ஆயுதங்களை புலிகளுக்கு கடத்தி வரும் கே பியின் செயற்பாட்டில் இரண்டாவது பெரிய ஒப்பரேஷன் எனக் கணிப்பிடப்படுகின்றது.

1994 ஓகஸ்டில் — முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்திருந்த — உக்ரைன் நாட்டின் — வெடிப்பொருள் தொழிற்சாலையிலிருந்து ஒரு கப்பல் நிறைய — பெரும் அளவுடைய — உயர் வெடிப்பு வலுமிக்க ரி. என். ரி. மற்றும் பிளாஸ்ரிக் வெடிப் பொருள்களை வெற்றிகரமாகக் கடத்தி வந்து புலிகளின் தலைமையிடம் ஒப்படைத்தது கே. பியின் முதலாவது வெற்றி நடவடிக்கையாகும்.

உக்கரைனில் இருந்து பெருமளவு ஆயுதங்களை புலிகள் கடத்தி வந்தனர் என்ற செய்தி குறித்து அரச வட்டாரங்கள் அப்போது சந்தேகம் தெரிவித்திருந்த போதும், புலனாய்வு வட்டாரங்கள் பின்னர் அந்தத் தகவலை ஊர்ஜிதம் செய்தன.

தற்போது ஸிம்பாப்வேயிலிருந்து இலங்கைப் படைகளுக்கு வந்து கொண்டிருந்த பெரும் தொகை மோட்டார் குண்டுகளை வழியில் கடத்தி புலிகளிடம் சேர்ப்பித்தது அவரின் இரண்டாவது வெற்றி நடவடிக்கையாகும்.

இதற்கிடையில் —

புலிகளைப் பொறுத்தவரை சர்வதேச ஆயுதக் கொள்வனவு மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்கு தென்னாபிரிக்கா மிக வசதியான தளமாக இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த வசதி காரணமாக தென்னாபிரிக்காவை மையமாகக் கொண்டு புலிகள் தற்போது செயற்பட்டு வருகின்றார்கள்.

அங்குள்ள — தமிழீழ ஆதரவு இயக்கம், ஸ்ரீலங்க அடக்கு முறைக்கு எதிரான




மக்கள் அமைப்பு, தென்னாபிரிக்க தமிழர் சம்மேளனம், தேசிய தமிழர் சம்மேளனம் ஆகியவை பகிரங்கமாக புலிகளுக்கு ஆதரவாக இயங்கி வருகின்றதாகவும் கூறப்படுகின்றது.

புலிகளின் சீருடையில் வந்த — மூன்று பெண்போராளிகள் உட்பட 14 பேரைக் கொண்ட — புலிகளின் போராளிகள் குழு ஒன்றை தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்ஸன் மண்டேலா தலைநகர் பிரிட்டோரியாவில் வரவேற்று, சந்தித்துப்பேச்சு நடத்தினார் என்றும் [illegible] வெளியாகியுள்ளது. புலிகளுக்கு தென்னாபிரிக்கா நல்ல சரணாலயமாக அமைந்திருப்பதை இச்செய்தி ஓரளவு தெளிவுபடுத்தும்! ஆனால் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் இச்செய்தியை ஊர்ஜிதப்படுத்த மறுத்துவிட்டன.

என்றாலும் தென்னாபிரிக்காவில் புலிகளுக்கு அதிக செல்வாக்கு இருப்பதையும், செல்வாக்கு வளர்ந்து வருவதையும் புலனாய்வுத் தகவல்கள் மூலம் வெளிவிவகார அமைச்சு அறிந்துள்ளதாகத் தெரிகின்றது.

தனது படைகள் பயன்படுத்தும் — தென்னாபிரிக்கத் தயாரிப்பு — 'பவள்' கவச வாகனங்களுக்கு — சில முக்கிய உதிரிப்பாகங்களை தென்னாபிரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு அண்மையில் ஸ்ரீலங்கா அரசு எடுத்த முயற்சியை தென்னாபிரிக்காவில் இயங்கும் புலிகள் ஆதரவு சக்திகள் அங்கு தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி முறியடித்து விட்டதும் குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்கத் தேசிய காங்கிரஸில் உள்ள தீவிரவாதத் தலைவர்கள் பெரும்பாலும் புலிகள் ஆதரவுப் போக்கைக் கடைப்பிடிப்பதாகத் தெரிகின்றது.

எனினும் மறுபுறத்தில் —

அடுத்த ஆண்டு நிகழவிருக்கும் இலங்கையின் சுதந்திரப் பொன் விழா நிகழ்ச்சிகளில் அதிதிகளில் ஒருவராகக் கலந்து கொள்ளும்படி இலங்கை அரசு விடுத்த அழைப்பை தென்னாபிரிக்க அதிபர் நெல்ஸன் மண்டேலா ஏற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

★ ★ ★

## அருட்திரு. அருள்பாலன் படுகொலை!

தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த — கிளிநொச்சி கோணாவில் பகுதியில்மறைப் பணி ஆற்றிவந்த — அருட்திரு. இன்னாசி அருள்பாலன் என்ற போதகர் படுகொலை செய்யப்பட்டிருப்பது மனித உரிமை குழுக்களின் கவனத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளாகியிருக்கின்றது.

நாற்பத்திநான்கு வயதுடைய அருட்திரு. அருள்பாலன் கடந்த ஓகஸ்ட் 25 ஆம் திகதி இராணுவத்தினால் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மறைப்பணியில் ஈடுபட்டிருந்த மதகுரு ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து வண. ஏ. ஜெயக்குமாரன் கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சுடனும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடனும் தொடர்பு கொண்டார். இது வழமையான சோதனை நடவடிக்கை என்று அப்போது கூறப்பட்டதாம்.

அதற்குப் பின்னர் செப்ரெம்பர் 9 ஆம் திகதி புதுமுறிப்பு பகுதியில் உள்ளபுதைகுழி ஒன்றில் அழுகிய நிலையில் அவரது சடலமும் மற்றைய இருவரின் சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. மூவரின் சடலங்களிலும் தலை துண்டாடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்ட பின்னர் — சடலமாகக் காணப்படும் வரை — வேறு எவரும் அவரைப் பார்த்ததாகத் தகவல் இல்லை

அருட்திரு. அருள்பாலனின் மறைவு தொடர்பாக குற்றச்சாட்டுகள் இராணுவத்தின் பக்கமே சுமத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் நுழைபவர்களை 'றிஸ்க்' எடுக்காமல்



அருட்திரு. அருள்பாலன்

தாங்கள் சுட்டுக் கொல்வதை இராணுவ வட்டாரங்கள் ஒப்புக் கொள்ளுகின்றன.

இவ்வாறு ஊடுருவுபவர்கள் பெரும்பாலும் புலிகளாக இருப்பதால் தாங்கள் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அருட்திரு. அருள்பாலன் கொலையுண்ட பிரதேசத்தில் இவ்வாண்டில் இதுவரை 90 பேர் வரை காணாமற் போயிருப்பதாகக் கூறப்படுகின்றது.

★ ★ ★

## அப்பிளும் அதிகாரியும்

யாழ். நகர இராணுவப் பிரிவில் நடந்த சம்பவம் இது.

நகரப் பிரமுகர் ஒருவர் 15 அப்பிள்பழங்களை வாங்கி பை ஒன்றில் போட்டு எடுத்துக் கொண்டு படையின் பொறுப்புள்ள முகாம் அலுவலகத்துக்குச் சென்றராம். குறிப்பிட்ட படை அதிகாரி ஒருவரை பெயர் கூறி விசாரித்தார். அந்த அதிகாரி அவ்வேளை அங்கு இல்லை. எனவே அந்த அதிகாரியிடம் அந்தப் பையை கையளிக்கும்படி கூறிவிட்டுச் சென்றார் அந்தப் பிரமுகர்.

அப்பிள் பை சம்பந்தப்பட்ட அதிகாரியின் கைக்குப் போய் சேருமுன் வழியிலிருந்த பல சென்றிகள், காவலர்கள் ஒரு சில அப்பிள்களை கபளீகரம் செய்து கொண்டனர். இறுதியில் அப்பிள் பை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் போய்ச் சேர்ந்தது.

ஆனால் அதே சமயம் அது பற்றிய தகவல் பிரிக்கேட் தளபதிக்கும் போய்ச் சேர்ந்து விட்டது.

இரண்டு நாள்கள் கழிந்து பிரிகேட் தளபதி சம்பந்தப்பட்ட அதிகாரியையும் வழியில் அப்பிள்களைப் பதம் பார்த்த நான்கு படையினரையும் அழைத்தார். 'செமடோஸ்' கொடுத்தார், அவர்களுக்கு எதிராக விசாரணை

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

PURE BLACK ஆண் அல்சேஷன் நாய் மற்றும் Fiar chbrs ருவிகள் இரண்டு சோடி விற்பனைக்குண்டு. தொடர்பு:- சுகுமார், சீரணி, டச் வீதி, சண்டிலிப்பாய். [49801]

IRON SAFE 5'×3'×2' INDIAN இரும்புப்பெட்டி உறுதியானது விற்பனைக்குண்டு. தொடர்பு;- ச. கோபாலகிருஷ்ணன், பிருந்தாவனம், நுணாவில் சந்தி, சாவகச்சேரி. [50249]

WALL BRICKS 8''×6'' ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை தயாரிப்பு சுவர் கல்லுகள், உஷ்ணம், சத்தம் தணிக்க கூடங்களுக்கு உகந்தவை. தொடர்பு:- ச. கோபாலகிருஷ்ணன், ''பிருந்தாவனம்'' நுணாவில்சந்தி, சாவகச்சேரி. [50248]

பனஞ்சிலாகை, கூரை, மரம் புதியவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- ச. கோபாலகிருஷ்ணன், பிருந்தாவனம், நுணாவில்சந்தி, சாவகச்சேரி. [50250]

புதிய YAMAHA MATE 50, மைனர் 1000 கார் ரயர், ரியூப் என்பன உடன் விற்பனைக்குண்டு. காலை, மாலை வேளையில் பார்வையிடலாம். 55, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [50259]

பெரியளவிலான தோட்டங்கள், நெல்வயல்கள் என்பவற்றிற்கு டீசல் இயந்திரம் மூலம் நீர் பாய்ச்சக்கூடிய (தனி) தண்ணீர் 4'' பம் (பெல்ட்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- து. குமாரதாசன் 89, கோயில் வீதி, [I.C.R.C அருகில்] யாழ்ப்பாணம். [50261]

## மணமகன் தேவை

பூராட நட்சத்திரம், 28 வயது நிரம்பிய B. A. பட்டதாரி ஆசிரியைக்கு பட்டதாரி ஆசிரியர், டாக்டர், எக்கவுண்டன் அல்லது என்ஜினியர் பதவி உடைய மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். அத்துடன் எம்மிடம் உள்ளூர், வெளியூர் மணமக்கள் உண்டு. தொடர்பு:- முருகா திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய் [50173]

## தவறிவிட்டது

யோகேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (661561653V), விசேட அடையாள அட்டையும், வேலை அடையாள அட்டையும் வதிரிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஊற்று நிறுவனம், புலோலி தெற்கு, பருத்தித்துறை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். [50211]

புலோலிதெற்கைச் சேர்ந்த ந. கலாவதி என்பவாது 3000 ரூபா பணமும், 3½ பவுண் நகைகளும் அடங்கிய கைக்குட்டை ஒன்று 20.09.97 அன்று காலை 7.15 மணிக்கு யாழ். பருத்தித்துறை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் ஒப்படைக்கவும். [சி/1683]

**A/L 98**
**PURE / APP.**
**PAPER CLASS**
**05 — 10 — 1997**
12 - 00 மணி
Mr. S. சிவலோகநாதன்
B. Sc.
**SHAMROCK**
(50258)

## Spoken English

ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லை என்ற கவலையா? ஆங்கிலத்தில் கதைக்க விசேட பயிற்சி வாரம் நான்கு நாள்கள். ஆசிரியர்: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, (M.L.S, LODON) 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [50262]

## திருமண சேவை

எல்லா மதத்திலும், உத்தியோகத்திலும் மணமக்கள் உண்டு. புகைப்படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். [50270]

## சிங்கள வகுப்பு

06.10.97 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு புதிய வகுப்பு ஆரம்பம். தொடர்பு:- வே. குமாரசாமி (I. P. T), ஆசிரியர் வீதி, பெரியரசடி, சாவகச்சேரி. [50235]

## O/L கணிதம்

Credit, Distinction பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து வினாவிடை மூலமும் (ஆண்டு 9, 10 உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [50242]

**புலமைப் பரிசில் பரீட்சை**
**1998**
ஆண்டு 4
மாணவர்களுக்கானது.
மாதிரிப்பரீட்சை
**05 - 10 - 97**
காலை 9 மணி
**புதிய நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(50255)

## தேவை

சர்வதேச தொண்டு நிறுவனமான
**MSF இற்கு**
(வரையறையற்ற
வைத்திய சேவை நிறுவனத்திற்கு)
**யாழ். நகரில்**
பெரிய வீடு ஒன்று
வாடகைக்குத் தேவைப்படுகிறது.
தொடர்பு:
**Mr. KEITH,**
C. L S. புத்தக நிலைய ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (50245)

உ
சிவமயம்

**இந்துசமயப் பேரவை - யாழ்ப்பாணம்**
**"இந்து தர்மம்" மலர் - 15**

# வெளியீட்டு விழா

இடம்: உரும்பிராய் கற்பக விநாயகர் தேவஸ்தானம்
காலம்: **05 - 10 - 1997** ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 10-00 மணி
தலைவர்: அருட்கவி சீ. விநாசித்தம்பி
அவர்கள்
(தலைவர், இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்)

**நிகழ்ச்சி நிரல்**

முற்பகல் 9 - 00 மணிக்கு பசுவின் மேன்மைகருதி உரும்பிராய் ஞானவைரவர் ஆலயத்தில் இருந்து கோமாதா அழைத்து வரப்படல்.

மங்கள விளக்கேற்றல்;- திரு. அ. நல்லதம்பி
(தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்)

ஆசியுரை:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)
மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாத சிவாசாரியர்
(மாவை ஆதீனம்)

வாழ்த்துரை;- திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

தலைமையுரை;-

சிறப்புரை:-
1. திரு. ஆ. மகாலிங்கம்
(உபதலைவர், இந்துசமயப் பேரவை)
2. திரு. எஸ். பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)
3. ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
(செயலாளர், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை)

வெளியீட்டுரை:- பேராசிரியமணி வ. ஆறுமுகம்
(தலைவர், கல்வித்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

ஆய்வுரை:- கலாநிதி நா. ஞானகுமாரன்
(தலைவர். நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சீ. விநாசித்தம்பி, தலைவர் — சி. சக்திகிரீவன், கௌரவ செயலாளர்
**இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்.**
(சி-1678)

நியாய விலை! அதிவிசேட தரம்!
மக்களின் மகத்தான வரவேற்பைப் பெற்றது!

# மல்லிகா மிக்சர்

சுத்தமான பசுநெய் சேர்க்கப்பட்டு சுகாதார முறைப்படி அதிவிசேடமாகத் தயாரிக்கப்பட்டது. உங்கள் விருந்தினரை உபசரிக்கத் தேவையான மிக்சர், பகோடா, ஓமப்பொடி, காராப்பூந்தி, தட்டுவடை, முறுக்கு வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**மல்லிகா ஸ்ரோர்ஸ்**
மத்திய சந்தை அருகில், மானிப்பாய்.

யாழ். நகரில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
**சிறீ சக்தி ஸ்ரோர்ஸ்**
310 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1665)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 11 — 1922
மறைவு: 04 — 10 — 1996


**அமரர் மத்தேயு சுவக்கீன் பொன்னுத்துரை**
**(மூப்பர்)**

குடும்பத்தின் குல விளக்காய்த் திகழ்ந்து
எம்மை அன்போடும், பாசத்தோடும்
வளர்த்து நல்வழி காட்டிய அன்பு
ஐயாவின் வாழ்வுக்கு நன்றி கூறி
ஆத்மா சாந்தியடையச் செபிப்போம்!

இவரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

26/1 ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர். (50264)

# 8 ஆம் ஆண்டு நினைவுகள்



**அமரர் செல்லையா அரியரத்தினம்**
(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

பிறப்பு: **20 — 11 — 1926**
அமரத்துவம்: **02 — 10 — 1989**

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வை கப்படும்''

என்றும் நீங்காத நினைவுகளுடன் மனத்தகத்தே
அஞ்சலி செலுத்துகின்றோம்.

— குடும்பத்தினர்.

கோயில் வாசல்,
இணுவில். (50252)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமசுவாமி வைத்தியசாலை


எமது வைத்திய சேவை முன்பு நடைபெற்ற இடத்தில் (மாடி வீடு) மீண்டும் நடைபெறுகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

வைத்திய கலாநிதி
மகேஸ்வரி இராமசுவாமி,
வைத்திய கலாநிதி
இராமசுவாமி மகேஸ்வரன்

திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (50237)

# நீங்காத நினைவில் ஓராண்டு

மலர்வு:
14
—
04
—
1948



உதிர்வு:
25
—
10
—
1996

## அமரர் கந்தையா செல்வராசா

ஆண்டொன்று சென்றதையா
ஆறவில்லை எந் துயரம்.
கடல் நீரும் வற்றுமையா
எம் கண்ணீரோ வற்றவில்லை
மாண்ட நீர் வருவீரோ
மாறாத எம் துயர் தீர்க்க.

உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மகள்,

கோயிலாக்கண்டி,
கைதடி. (50244)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தெய்வேந்திரம் பாலாமணி

மலர்வு:
19 — 06 — 1928

உதிர்வு;
04 — 10 — 1995

ஈராண்டு சென்றதம்மா
தீரவில்லை எம் கவலை.
அன்பு முகம் பார்க்காமல்
ஆசை மொழி கேட்காமல்
ஆறிடுமோ எங்கள் மனம்.
ஆறாது ஆறாது அழுதாலும் தீராதம்மா
அறுபத்தி ஏழு வயதினிலே
இயமன் வந்து கூப்பிட கண்ணை மூடினீரோ!
உள்ளே அழுது வெளியே சிரித்து
ஊமையாய் வாழுகின்ற
உண்மையைத்தான் யார் அறிவார்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவை எண்ணி வாடும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்
அ. றோசா (மகள்)
இல. 109/1, சிவன் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (50227)

## தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 4

மக்கள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளில் முதலுதவிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான தலைமைத்துவம், உளவியல் சம்பந்தமான பயிற்சி வகுப்பு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ)

## தாக்குதலில் 8 படையினர் காயம்

வவுனியா, ஒக். 4

புளியங்குளம் விமானப் படையினரின் காவலரண் பகுதியில் பஸ்ஸில் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம்பிற்பகல் ஆர். பி. ஜி. தாக்குதலை மேற்கொண்டனர் என்று ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

இத்தாக்குதலால் 8 படையினர் காயமடைந்தனர்: ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அப்பகுதியில் இடம் பெற்ற மோதல் ஒன்றில் ஒரு படையினர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது

வியாழனன்று இடை இடையே மோதல்கள் அப்பகுதியில் தொடர்ந்ததாக வவுனியா செய்திகள் தெரிவித்தன. (இ 164-7)

## விடுதலைப்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

நடைபெற்று அவர்கள் கண்டிக்கப்பட்டனர்.

விசாரணை முடிந்த பின்னர், பிரிக்கேட் தளபதி தனது பொக்கட்டிலிருந்து காசை எடுத்துக் கொடுத்து சில அப்பிள்களை வாங்கி வருமாறு ஒரு சிப்பாயைப் பணித்தார். அப்பிள் வந்ததும் அந்த ஐவரிடம் அவற்றைக் கையளித்தார். ''உங்களுக்கு அப்பிள் மேல்தானே ஆசை. நன்றாக என்முன்னேயே—ஆசை தீரச் சாப்பிட்டு முடியுங்கள். தேவையானால் இன்னும் வேண்டித் தருகிறேன்.''—என்றாராம்.

சம்பந்தப்பட்ட ஐவரும் பிரிக்கேட் தளபதியிடம் விழுந்து விழுந்து மன்னிப்புக் கேட்டனராம்.

''பொது மக்களிடமிருந்து அப்பிள் வாங்குவதும், ஐந்து சதம் வாங்குவதும் ஒன்றுதான். பொதுமக்களிடம் எந்தப் பொருளை அன்பளிப்பாக வாங்கினாலும்—அது அதிகாரிகளாயினும் சரி, சிப்பாய் ஆயினும் சரி—தண்டிக்கப்படுவர்'' என்று எச்சரித்து அனுப்பினாராம் தளபதி.

## யுத்தமும் பேச்சும்

★ ★ ★

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை அரசு வெளியிடுவதை ஒட்டி புலிகளுடன் அரசு பேச்சு நடத்த செல்லக் கூடும் என்ற கருத்து படைவட்டாரங்களில் அடிபடத் தொடங்கியுள்ளது.

''பேச்சு நடத்துவதற்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. அரசு புலிகளுடன் பேசலாம். ஆனால் அதற்காக யுத்தத்தை நிறுத்தும்படியோ, படை கைப்பற்றிய இடங்களுக்கு புலிகள் வருவதை அனுமதிக்கும்படியோ அரசு படைகளை நிர்ப்பந்திக்கக் கூடாது. — என்று உயர் படை வட்டாரங்கள் அரசை நச்சரிக்கத் தொடங்கியுள்ளன.

'ஒரு புறம் யுத்தம்; தேவையானால் மறுபுறம் பேச்சு' என்ற கொள்கையை அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்பதே பாதுகாப்பு உயர் வட்டாரங்களின் கருத்து என்று தெரிவிக்கப்படுகின்றது. ★

யாழ்ப்பாணம்
**புனித மரியாள் வித்தியாலயம்**
(O. L. R)

பழைய மாணவர் சங்க

# பொதுக்கூட்டம்

மேற்படி சங்க பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை (04. 10. 97) மு. ப 10. 30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் யாவரையும் கூட்டத்தில் பங்கு பற்றும் படி கேட்டுக்கொள்கிறேன்.

[50276] -அதிபர்

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்

(இ. பெ கூ. தா. முன்னாள் நிறைவேற்று அதிகாரி யாழ்ப்பாணம்)
(உதவி விநியோக முகாமையாளர் கொழும்பு)


30 - 09 - 97 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிப்பதுடன் அன்னாருக்கு எமது இதய அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணியாளர்கள்,
வடபிராந்திய இலங்கை
பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

(50257)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:
02
—
10
—
1935



மறுமைப் பிரவேசம்:
01
—
09.
—
1997

## அமரர் முருகுப்பிள்ளை விஜயதுங்கன்

உடுப்பிட்டியைச் சேர்ந்த 1-9-97 இல் மறுமைக்குள் பிரவேசித்த முருகுப்பிள்ளை விஜயதுங்கன் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முருகுப்பிள்ளை (தலைமை ஆசிரியர்) ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ் சென்ற மு. வரத்துங்கன் (முன்னாள் உப அதிபர்). திருவாளர்கள் மு ஜெயதுங்கன் (Estate Suprenterdent), மு. குலோத்துங்கன் (கனடா), திருமதி ம. இராஜரத்தினம் (முன்னாள் அதிபர் - யாழ். வல்லை மகளிர் கல்லூரி), காலஞ் சென்ற மு. பரமேஸ்வரி, திருமதி இ. இம்மனுவேல் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருள்திரு வ. இராஜ்குமார் (தென்னிந்திய திருச்சபை உடுவில்), திருவாளர்கள் ஜெ. வர்ணதுங்கன் (இரத்தினபுரி), ஜெ. சூரியதுங்கன் (லண்டன்), திருமதிகள் இ. பிறேமினி (ஆஸ்திரேலியா), இ. அனிற்றா (இலங்கை), த. சாந்தினி (கனடா), ந ஜெயந்தினி, (கனடா), சி. வசந்தினி (கனடா), அ. விநோதினி (கனடா), இ. டுஷாந்தினி (கனடா), திரு. கு. பாஸ்கரதுங்கன் (இலங்கை) ஆகியோரின் சித்தப்பாவும், அன்ரன் இராஜதுங்கன் (Production& Management Engineer - London), செல்வி டர்ஷினி இம்மனுவேல் (Accountant - Fund Management, John Keels , திருமதி ந. அமிர்தினி (கனடா), திரு. இ. வசீகரன் (Accountant, Maldives Airlines) ஆகியோரின் மாமனாருமாவார்.

நாம் யாவரும் எங்கள் அன்புக்குரிய இவரை நினைவு கூருகிறோம். இவரது வாழ்க்கைக்கான நன்றி செலுத்தும் வழிபாடு ஞாயிற்றுக்கிழமை 05-10-97 காலை 11.00 மணிக்கு உடுப்பிட்டியில் அவரது ''பரம்'' இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ் வழிபாட்டில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவரது அந்திய காலத்திலும், இறுதி ஆராதனை நல்லடக்கத்திலும் பங்கு பற்றி பல வழிகளிலும் உதவி புரிந்த யாவருக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.

திருமதி ம. இராஜரத்தினம்
சகோதரி.
(முன்னாள் அதிபர் யா/ வ. ம. கல்லூரி)

'பரம்'
உடுப்பிட்டி. (50263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமேலாவது தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுமா?

இனப்பிரச்சினை தொடர்பாக அரசின் தீர்வுத்திட்ட விவகாரம் சற்று அசையத் தொடங்கியிருக்கின்றது.

தமிழ் மக்களால் ஏற்கக் கூடியதோ, ஏற்க முடியாததோ — சிங்கள மக்களால் ஏற்கக் கூடியதோ, ஏற்க முடியாததோ — ஏதோ ஒன்றை முன்வைத்து அரசு காய்நகர்த்தலைத் தொடங்கியிருக்கின்றது.

புலிகளின் எதிர்ப்புக் காரணமாக தீவிரவாதப் போராட்ட வடிவத்திலிருந்து — விரும்பியோ, விரும்பாமலோ — தங்களை விலக்கி — அல்லது விலக்கியதாகக் கூறிக்கொண்டு — ஜனநாயக வழிக்கு வந்துள்ள தமிழ் இயக்கங்களும், ஏனைய தமிழ்க் கட்சிகளும் உண்மையில் இப்போதுதான் தமது செயல் திறமையை — தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகச் செயற்பட தங்களுக்கு அருகதை உண்டா என்பதை — தங்கள் கொள்கை, இலட்சியப் பிடிப்பு போன்றவற்றை — காட்டுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

தமிழ்க் கட்சிகளை — குறிப்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளை — பொறுத்தவரை அவை அடுத்து வரும் மாதங்களில் ஓர் 'அஸிட் டெஸ்ட்டையே' எதிர்கொள்ளப் போகின்றன.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை அவர்களது சுயநிர்ணய உரிமைக்கு முதலில் அவர்கள் வேண்டுவது 'தமிழர் தாயகம்' என்ற கோட்பாட்டை அங்கீகரிக்க வேண்டும் என்பதையே.

இதன் அடிப்படையில் விளக்கப்படுவதுதான் வடக்கு —கிழக்கு இணைப்பு.

புதிதாக இணைப்பு எதனையும் ஈழத் தமிழர்கள் கோரவில்லை, வடக்கு — கிழக்கு என்ற பெயரில் தமிழர் தாயகத்தை துண்டாடாதீர்கள் என்பதுதான் தமிழர் கோரிக்கை. ஆகவே தமிழர் கோருவது இணைப்பை அல்ல; இணைந்திருப்பதை துண்டாட வேண்டாம் என்பதையே.

இனப்பிரச்சினைக்கு அரசு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது உண்மைதான். ஆனால் அது முழுப் பிரசவமோ — சுகப் பிரசவமோ இல்லை. அரை குறைப் பிரசவம்.

தீர்வு யோசனைகளில் முக்கியமாக இடம் பெற்றிருக்க வேண்டிய விடயங்கள் இல்லாமலேயே யோசனைகளை அரசு வெளியிட்டது. இன்னமும் முக்கியமான விடயங்கள் பல சேர்க்கப்படவில்லை.

என்றாலும் எதிர்வரும் 8 ஆம் திகதி அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான திட்ட வரைவு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் —

தீர்வு யோசனைகளைக் கொண்ட புதிய அரசமைப்பு வரைபு அடுத்த மாத நடுப் பகுதியில் நாடாளுமன்றத்துக்கு வரும் என்றும் —

அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

தமிழருக்கு வழங்கப்படப் போகின்ற அதிகார அலகின் வடிவம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பது இப்போதுதான் அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

ஒன்றன் பின் ஒன்றாக மூன்று சர்வஜன வாக்கெடுப்புக்களை கிழக்கில் நடத்தித்தான் தமிழர் தாயகம் இணைந்திருப்பது குறித்து தீர்மானிக்கப் போகின்றார்களாம்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, பெரும்பான்மை மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது தீர்வாகப் போவதில்லை; அது நியாயமானதாக இருந்தால்தான் தீர்வாகும்.

ஆகவே தீர்வு என்பது வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படாமல் நீதி, நியாயத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்படுவதாக இருக்க வேண்டும்.

தீர்வு யோசனைகளை முன்வைத்த அரசாங்கம் அதை ஒரு முடிந்த முடிவான திட்டமாகக் காட்டி அதற்கு மக்களிடம் ஆதரவு திரட்டவில்லை; அதற்கு மாறாக, விவாதத்துக்குரிய விவகாரம் போல அதைக்காட்டி மக்கள் விருப்பத்துக்கு ஏற்ப மாற்றும் ஓர் ஆவணமாகவே ஆரம்பம் முதல் அதை சித்திரித்தனர்.

அதாவது பெரும்பான்மைச் சிங்களவர்கள் எதை விரும்புகின்றார்களோ அதையே தீர்வாக தமிழ்மக்களிடம் சமர்ப்பிக்கப் போகின்றோம் என்ற தொனியையே அரசுத் தரப்பு பின்பற்றி வந்திருக்கின்றது.

அரசின் இந்தக் கபடநாடகத்துக்கு தமிழ்க் கட்சிகள் எடுபட்டு விடக் கூடாது.

" நீங்கள் தமிழ் ஈழம் கேட்டு ஆயுதம் ஏந்தியவர்கள்; தமிழீழமே எமது இறுதி இலக்கு என்று முழங்கியவர்கள்; தமிழ் ஈழத்துக்காக தமிழ் மக்களிடம் தேர்தல் மூலம் ஆணை பெற்றவர்கள். உங்களால் தமிழீழம் பெற முடியாமல் போனால் விட்டு விடுங்கள். அதற்குக் குந்தகம் செய்ய வேண்டாம் என்று உங்களைக் கேட்கவில்லை. ஆகக் குறைந்தது தமிழர் தாயகம் துண்டாடப்படுவதற்காவது இணக்கம் கொடுக்காதீர்கள். தமிழர் தாயகம் துண்டாடப்படுவதை உங்களால் தடுக்க முடியாவிட்டாலும் அதற்கு நீங்கள் துணை போகாமல் இருந்தால் அதுவே பெரிய காரியம்."—இதுதான் தமிழ் மக்கள் இன்று தமிழ்க் கட்சிகளிடமும் தமது பிரதிநிதிகள் என்ற பெயரில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்களிடமும் விடுக்கும் மனப்பூர்வமான கோரிக்கையாகும்.

## உள்ளும் புறமும்

குறுமணி

ஆனால் தீர்வை ஏற்றுக் கொள்ள வேண்டிய தமிழர் தரப்பை மட்டும் — அவர்களில் பெரும்பான்மையினர் எதை வேண்டுகின்றார்கள் என்று பார்க்காமல் — வடக்கு மக்கள், கிழக்கு மக்கள், மட்டக்களப்பு மக்கள், திருகோணமலை மக்கள், கல்முனை மக்கள் என்று துண்டாடிப் பிரித்துப் பார்க்கின்றது அரசு.

ஈழத் தமிழர்கள் தங்களுக்கு உரிமை வேண்டிப் போராடினார்கள்; ஆயுதம் ஏந்தினார்கள். அதற்கு மாற்றாக அவர்களுக்கு உரியதைக் கொடுத்து இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமே தவிர, அவர்களைத் துண்டாடி, பிரித்தாள முயற்சிக்கக் கூடாது.

இதில் விட்டுக் கொடுப்புகளுக்கு இடமில்லை என்பதைத் தமிழ்க் கட்சிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அற்ப விவகாரங்களுக்காக-சலுகைகளுக்காக — விட்டுக் கொடுத்தால் இதுவரை தமிழ் சமூகம் செய்த தியாகங்கள் கேலிக் கூத்தாகி விடும் என்பதை சம்பந்தப்பட்ட தமிழ்க் கட்சிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழர் தாயகம் ஒன்றிணைந்ததான தீர்வையே தமிழ் மக்கள் கேட்டனர். ஆனால் வடக்கை தனியாகவும், கிழக்கை மூன்று துண்டுகளாகவும் பிரித்து, தேவையானால் கிழக்கில் ஒரு துண்டை (மட்டக்களப்பு—திருகோணமலை மாவட்டங்கள் சேர்ந்த பகுதியை) அங்குள்ள மக்கள் சம்மதித்தால் வடக்குடன் இணைக்கலாம் என்ற ஒரு தீர்வை அரசு முன் வைக்கின்றது.

(மட்டக்களப்பு-திருகோணமலை மாவட்டங்களில் தான் நினைக்கும் ஒரு தேர்தலை —அல்லது சர்வஜன வாக்கெடுப்பை— அரசாங்கத்தால் நடத்த முடியுமா? என்பது கேள்விக்கும் சந்தேகத்துக்கும் உரிய வேறு விடயமாகும்.)

ஒரு புறம் புலிகள் ஆயுதம் ஏந்தி போராடிக் கொண்டிருக்கிறார்கள். அது அரசியல் களத்துக்கு அப்பால் நடந்து கொண்டிருக்கின்றது.

அரசியல் களத்தில் —இனப் பிரச்சினை மிக முக்கிய கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் — தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய கட்டாய — அவசிய — அவசர — சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இப்போது தமிழ்க் கட்சிகள், தமது கட்சி நலன் கருதி பிளவுபட்டு நின்றால் அதைப் பயன்படுத்தியே பெரும்பான்மை சமூகம் தமிழர்களை — தமிழர் தாயகத்தை — பிளவுபடுத்தித் துண்டாடி விடும்.

தெற்கில் இனவாத சக்திகள் ஒன்று திரளத் தொடங்கியிருக்கின்றன.

1950 களில் முதலாவது சிங்கள ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு இனவாதம் கக்கத் தொடங்கியது. அதன் பின்னர் பிரதமர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டார நாயக்கா 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொண்டு வந்து இனப் பிரச்சினையை நாட்டின் நிரந்தரப் பிணி ஆக்கினார்.

அன்று பண்டாரநாயக்கா சிங்கள மட்டும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அப்போதைய சிங்கள ஆணைக்குழுவின் அழுத்தமும் ஒரு காரணமாகும்.

இப்போது பண்டார நாயக்காவின் மகள் சந்திரிக்கா ஆட்சியிலிருக்கிறார் — பண்டாரநாயக்கா போல பிரதமர் பதவியில் அல்ல; அதற்கு மேல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக.

இப்போதும் ஒரு சிங்கள ஆணைக்குழு முளைத்திருக்கின்றது. சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்துக்கு ஆப்பு வைக்கும் — இனவாதம் க்க்கும் — பிரசாரங்களை அது தொடக்கி வைத்திருக்கின்றது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

'ரௌடியிஸம்' (Rowdyism)— காவாலித்தனம்-போக்கிலித்தனம் — முரட்டுத்தனம் — 1980களுக்குப் பின்னர் குடா நாட்டைப் பொறுத்தவரை தெரியாத ஒன்றே.

அதற்கு முன்னர் ஊர்ச் சண்டியர்கள், நகர தாதாக்கள், குறிச்சி அடியாள்கள் என்று பல்வேறு சண்டியர்களையும், முரடர்களையும், வெட்டுக் குத்துக்களையும் கண்டு நமது சமூகம் பொறுக்க முடியாமல் சகித்துக் கொண்டிருந்ததும் —

இயக்கங்களின் எழுச்சியுடன், அட்டகாசம் புரிந்த ஊர்ச்சண்டியர்களின் கொட்டம் அடங்கிப் போனதும்—

இப்போது முப்பத்தைந்து வயதுக்கு மேல் இருக்கும் — வளர்ந்தவர்களுக்கு — நன்கு தெரிந்த விடயங்களாகும்.

மீண்டும் 'ரௌடியிஸம்' முளைவிடத் தொடங்கியுள்ளதா என்ற கேள்வி எழுந்திருக்கின்றது. ஆங்காங்கே ஊர்ச்சண்டியர்கள் உருவாகத் தொடங்கியிருக்கின்றார்கள்.

கசிப்பு, சட்டம் — ஒழுங்கைப் பேண சரியான் அமைப்பு முறை இல்லாமை, போர் நலிவு, வறுமை, சமூகக் கட்டுப்பாட்டின் வீரியம் குறைந்தமை போன்றவை புதிய ஊர்ச்சண்டியர்கள் உருவாவதற்கு உரமிடுபவையாக அமைந்துள்ளன.

'தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டைப் பிரசண்டன்' என்ற முதுமொழி குடாநாட்டு நிலைமைக்கு கனகச்சிதமாகப் பொருந்துகின்றது.

இவ்வார முற்பகுதியில் நல்லூர் கோயிலை அண்டிய பிரதேசத்தில் வசிக்கும்— பிரபல வர்த்தகப் பிரமுகரான—இளைஞர் ஒருவர் இரவு 8 மணியளவில் ஆலய முன்றல் பகுதியில் வைத்து ஸ்குருட்ரைவரால் குத்தப்பட்டு படுகாயமடைந்தார்.

இரவு ஆறு மணிக்குப் பின்னர்—கோயில் சுற்றாடலில் ஆள்கள் இல்லாமல் போகும் நிலையைப் பயன்படுத்தி— கோயில் முன்றலை—தெய்வ சந்நிதானத்தை—அசிங்கப்படுத்தும் காமுகர் கூட்டம் ஒன்றே அந்தப் பிரமுகரை குத்தியதாகக் கூறப்படுகின்றது. தங்கள் அட்டகாசத்தை அயலில் உள்ளோர் பார்த்தும் பார்க்காமலும் இருக்க வேண்டும் என்று அந்தப் காவாலிக் கும்பல் எதிர்பார்க்கிறது போலும்.

திருட்டு, கொள்ளை, அச்சுறுத்தல் போன்ற சமூகச் சீரழிவுகளில் ஈடுபடும் கிரிமினல்களை திருத்துவது எப்படி? சாதாரண சட்டங்களினால் அவர்கள் திருந்துவார்களா? இப்போதைய சட்டம் - ஒழுங்கு மெலிந்து போயுள்ள நிலையை தமது கைக்குள் போட்டுக் கொள்வார்களா?

★ ★ ★ ★

இந்தப் பத்தியில் கடந்த காலத்தில் நாம் குறிப்பிட்ட சில விடயங்களுக்கு விரைந்து தீர்வு காணப்பட்டிருக்கின்றது.

யாழ். மருத்துவபீட மாணவர்களுக்கு அவர்களுக்குரிய விரிவுரையாளர்களைப் பெற்றுத் தரும் விடயத்தில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் இயன்றதை— விரைந்து—செய்ய இணங்கியது.

தபாலகங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியூர்த் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்கு தபால் அதிகாரிகள் இயன்றதைச் செய்திருக்கிறார்கள்.

பாடசாலைக்கு அருகில் மினிசினிமா ஓடுபவர்களை பாடசாலை நேரத்தில் மினிசினிமா காட்டக் கூடாது என அதிகாரிகள் அறிவுறுத்தியிருக்கின்றார்கள்.

இந்த விடயங்களில் பிரச்சினைகளுக்கு முழுத் தீர்வு கிட்டா விட்டாலும் இடைக்காலத் தீர்வை ஏற்படுத்தி — அதற்கும் இடைஞ்சல் தராமல் — செயற்பட்ட அதிகாரிகளுக்கும், தீர்வுக்காக உழைத்த சம்பந்தப்பட்ட வட்டாரங்களுக்கும் பாராட்டுக்கள்.

★ ★ ★

நவராத்திரிக் காலம் இது. இந்துக்களின் வீடுகளில், ஆலயங்களில் மட்டுமன்றி, பாடசாலைகள், திணைக்களங்கள், தொழிற்கூடங்களிலும் நவராத்திரி விழா கொண்டாடப்படுவது வழக்கம்.

இந்து மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பயிலும் கிறிஸ்தவ பாடசாலைகளிலும் சரஸ்வதி பூசை, விஜயதசமி கொண்டாடப்படுவது ஒன்றும் புதியது அல்ல. இந்த வகையில் குறிப்பிட்ட பிரபல பெண்கள் பாடசாலையிலும் வருடந்தோறும் நவராத்திரி விழா நடப்பது உண்டு.

அப்போதெல்லாம், நவராத்திரி பூசை நிகழ்வுக்கு கிறிஸ்தவ மாணவிகள் சமுகமளிக்காவிடிலும், அதன் பின்னர் தமது தோழிகள் வகுப்பறைகளில் வைத்து வழங்கும் பிரசாதங்களை உண்டு நட்புப் பாராட்டுவர். சகோதரத்துவத்தை வளர்க்கும் இந்தப் பகிர்ந்துண்ணுதலை தடுப்பதற்கு இம்முறை புதிய உத்தி ஒன்று கையாளப்பட்டிருக்கிறது.

நவராத்திரி விழா நடக்கும் அதே நாளில் கிறிஸ்தவ மாணவிகளை சுற்றுலாவுக்குக் கூட்டிச் செல்ல ஏற்பாடாகியுள்ளது! மாணவிகளிடையே நிலவும் சகோதரத்துவ உணர்வைக் கெடுப்பதற்காகவா இந்தத் தந்திரம்? — என்று கிறிஸ்தவப் பெற்றார் ஒருவரே மின்னலிடம் கேட்டார்.

விசாரித்ததில் இந்து மத நிகழ்வுகளை நடத்துவதற்கோ அல்லது அம்மதத்துக்குரிய (பூரண கும்பம் வைப்பது, தோரணம் கட்டுவது, பொட்டு வைப்பது) போன்ற மரபுகளைக் கைக்கொள்ளவோ அந்த மதத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு எவ்வித தடையையும் உயர் நிர்வாகபீடம் விதிக்கவில்லை என்று தெரியவந்தது.

அப்படியானால் சம்பந்தப்பட்ட பாடசாலையில் நடக்கும் மதத்துவேச ஏற்பாடுகளுக்கு யார் காரணமோ......?

- மின்னல்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அறணை கடித்து இறந்ததாக கருதப்பட்டவர் உயிருடன்!

## மிருசுவில் பகுதியில் சம்பவம்

அறணை கடித்து மரணமானதாகக் கருதப்பட்ட ஒருவர் உயிருடன் இருந்த சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

இரவு படுக்கையில், அறணை கடித்ததாகக் கூறப்படும் இளம் பெண் ஒருவர் மரணமாகி விட்டதாகக் கருதப்பட்டு இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. சடலத்தை குளிக்க வார்த்த போது சடலத்தின் கால் சிறிது ஆடி மூச்சு வருவதைக் கண்ட உறவினர்கள் உடனடியாக அப்பெண்ணை வாகனம் ஒன்றில் ஏற்றி சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

இப்பெண் யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டு ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அறணை கடித்த பின்னர் இப்பெண்ணுக்கு மயக்க நிலை ஏற்பட்டதாகவும் —

பாதுகாப்பு அரணுக்கு வெளியே இது நிகழ்ந்ததால் அவரை ஆஸ்பத்திரிக்கு உடனடியாகக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சோரன்பற்றைச் சேர்ந்த இப்பெண் இடம்பெயர்ந்து மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் வசித்து வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-117)

# சமுர்த்தி நியமனம் குறித்து புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 4

''வடமராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி நியமனங்களை இரத்துச் செய்யக் கோரும் விவகாரத்துக்கும் எமது அமைப்புக்கும் எந்தவித சம்பந்தமோ, உடன்பாடோ கிடையாது.

புளொட் அமைப்பு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிககையின் முழுவிவரம் வருமாறு:-

இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜயரட்னாவின் வேண்டுகோளுக்கிணங்க வடமராட்சியில் வழங்கப்பட்டிருந்த சமுர்த்தி நியமனங்களை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இறுதியாக நடைபெற்ற வடமாகாண புனரமைப்பு பற்றிய மாநாட்டில் தமிழ்க் கட்சிகள் கோரி இருந்ததாக வெளிவந்த பத்திரிகைச் செய்தி தொடர்பாக எமது அமைப்பின் நிலைப்பாட்டினை குடாநாட்டு மக்களுக்கு — குறிப்பாக வடமராட்சி மக்களுக்கு —தெளிவுபடுத்த வேண்டியவர்களாகவுள்ளோம்.

சமுர்த்தி நியமனங்கள் இன்னமும் வடக்கு கிழக்கில் படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் கூட முழுமையாக நடைமுறைப் படுத்தப்படாதது குறித்து ஜனாதிபதியினதும் சம்பந்தப்பட்ட அமைச்சரினதும் கவனத்துக்குக் கொண்டு வந்ததோடு நடைமுறைப்படுத்த பல தடவைகள் கோரிக்கையும் விடுத்திருந்தோம்.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த சமுர்த்தி நியமனங்களை இடைநிறுத்தக் கோரும் எண்ணம் எச்சந்தர்ப்பத்திலும் எமக்கு இருந்ததில்லை. மேற்குறிப்பிடப்பட்ட மாநாட்டில் எமது பிரதிநிதிகளால் இவ்விடயம் குறித்து பேசப்படவுமில்லை, இந்த நிலையில் வடமராட்சியின் பல பிரதேசங்களைச் சேர்ந்த பொது மக்களும் பல அமைப்புகளின் பிரதிநிதிகளும் பருத்தித்துறை அலுவலகத்தில் தொடர்புகொண்டு சமுர்த்தி தொடர்பான பத்திரிகைச் செய்தி குறித்து தமது அதிருப்தியை தெரிவித்ததன் காரணமாகவே எமது நிலைப்பாட்டை தெரிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

சமுர்த்தியின் பேரிலோ அல்லது வேறு எந்த வழியிலோ புதிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். நியமனங்கள் வழங்குபவர்கள் யார் என்பதை விட நியமனத்தைப் பெறுபவர்கள் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் என்பதையே நாம் முன்னிலைப் படுத்திப் பார்க்கின்றோம்.

அண்மையில் அரச அதிபரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்திய வேளையிலும் கூட வடமராட்சியை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய பிரதேசங்களிலும் சமுர்த்தி நியமனங்களை வழங்க துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கோரியிருந்தோம்.

எனவே வடமராட்சிப் பிரதேச சமுர்த்தி நியமனங்களை இரத்துச் செய்யக் கோரும் விவகாரத்துக்கும் எமது அமைப்புக்கும் எவ்வித சம்பந்தமோ, உடன்பாடோ கிடையாதென்பதை மீண்டும் தெளிவுபடுத்திக் கொள்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## திருமறைக் கலாமன்றம்

## அன்னை தெரேசா நினைவு அஞ்சலி

நாள்: 5 - 10 - 1997 ஞாயிறு
நேரம்: மாலை 4 30 மணி

தொடக்க உரை:
திருமதி நவாலியூர் நாயகி

அஞ்சலி உரை:
கலாநிதி S. சிவலிங்கராஜா
(தலைவர், கிறிஸ்தவ நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலர்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/1681)


# ஆசிரியர் தினத்தைப் பகிஷ்கரிக்க மட்டக்களப்பு ஆசிரியர் சங்கம் முடிவு

மட்டக்களப்பு, ஒக். 4

எதிர்வரும் 6 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச ஆசிரியர் தினத்தைப் பகிஷ்கரிப்பது என்று மட்டக்களப்பு ஆசிரியர் சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், பொதுக் கல்விச் சேவை ஊழியர் சங்கம், மாவட்ட அதிபர்கள் சங்கம் ஆகியன கூட்டாக இந்த முடிவை எடுத்துள்ளன.

1995/ 96 ஆம் ஆண்டுக்கான பயங்கரவாத நடவடிக்கை இடர்கால அலவன்ஸ் வழங்காமை —

ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடு தீர்க்கப் படாமை —

பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் படாமை — ஆகிய கோரிக்கைகளை வைத்தே இந்தப் பகிஷ்கரிப்பு இடம்பெறுகிறது. (இ-21-3)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், ஒக். 4

மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நாளை ஞாயிறு காலை 9 மணிமுதல் நவராத்திரி விழா நடைபெறவுள்ளது. (ஐ)

## இனிமேலாவது...

(ஆறாம் பக்கத் தொடர்)

சிங்களத் தீவிரவாதக் கட்சிகளான மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே. வி. பி., பூமிபுத்ர இயக்கம் மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு). ஐக்கிய தேசியக்கட்சி போன்றவை சிங்கள ஆணைக்குழுவின் இனவாதப் பிரசாரத்துக்கு முழு அளவில் ஒத்து ஊதப்போகின்றன; அதற்குத் தயாராகி வருகின்றன.

இந்நிலையில்—

தமிழர்களின் முழு அபிலாசைகளையும் தீர்க்கக் கூடிய தீர்வுத்திட்டம் ஏதும் தமிழருக்குக் கிடைக்கும் என்பது பகற் கனவே.

என்றாலும் கிடைக்கக் கூடிய தீர்வில்—

தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஒரு சிறிய அம்சம் இடம்பெற்றாலும் கூட அது தமிழர்களின் உரிமைக்கான எதிர்காலப் போராட்டத்துக்கு ஒரு சாதகமான விடயமாகவே அமையும்.

எனவே இத்திட்டத்தின் மூலம் பெறக்கூடிய உச்ச பயனைப் பெறுவதற்கு தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் இருக்கும் குத்துவெட்டுக்களை மறந்து விட்டு ஓரணியாக— ஒருபாதையில் — செயற்பட வேண்டும்.

தீவிரவாத சிங்கள அமைப்புகள், கட்சிகள் ஓரணியில் திரள்வதுபோல —

ஈழத்தமிழர்களின் கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும். அப்போதுதான் சிங்களத் தீவிரவாதிகளின் முயற்சிகளை முறியடிக்க முடியும்; தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய —தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிக்கக்கூடிய— விடயங்களை பேரம் பேசியாவது பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுமா? அல்லது அது பகற்கனவாகுமா? —இதுதான் இன்று தமிழ் மக்கள் முன்னுள்ள கேள்வியாகும்.

## நாளை

**புரட்டாதி 19**

ஞாயிற்றுக்கிழமை
திதி: சதுர்த்தி
பின் இரவு 3 26 வரை
நட்சத்திரம்: விசாகம்
முன் இரவு 9.30 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 9 02-10 32
ராகுகாலம்: 4 32-6 02

# இன்று நடப்பவை

அராலி இந்துக் கல்லூரியில் இளைப்பாறிய அதிபர் நா. ச. செல்வராசாவின் சேவை நலம் பாராட்டு விழாவும், புதிய அதிபர் ம. மகாதேவாவை வரவேற்கும் வைபவமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் வைத்தியக் கலாநிதி செ. பரமசிவம் பிள்ளை தலைமையில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை பழைய மாணவர் சங்கமும், நாடக மன்றமும் இணைந்துஏற்பாடு செய்துள்ள நாடக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் சபாரட்ணம் கலையரங்கில் நடைபெறும். (ஐ)

★ ★ ★

கார்மேல் சபையைச் சேர்ந்த அருட் சகோதரி பரமேஸ் துறவற வாழ்வின் 25 வருட சேவையை நிறைவு செய்வதை ஒட்டி தாளையடி பங்கு மக்கள் ஏற்பாடு செய்துள்ள வெள்ளி விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டுவரும் மீசாலை மேற்கு முன்பள்ளி நிலைச் சிறார்களின் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் இன்று சனி மீசாலை- வீனஸ் சனசமூக நிலைய முன்றாக பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் திருமதி ஆ குழந்தை மனோகரி தலைமையில் நடைபெறவுள்ளது பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ நாகேஸ்வரனும், சாவகச்சேரி பனைதென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்க தலைவர் சி. பூபாலசிங்கமும் கலந்து கொள்வர். (ஐ-31)

★ ★ ★

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் யாழ். சேகரமும், கட்டைவேலி சேகரமும் இணைந்து நடத்தும் சிறுவர் பாசறைவிழா இன்று சனிக்கிழமைகாலை முதல் மாலை வரை கட்டைவேலி சிற்றாலயத்தில் நடைபெறவுள்ளது. சுமார் பத்து வருடங்களின் பின்னர் 500 சிறுவர்கள் ஒன்றிணைந்து நடத்தும் இவ்விழாவில் கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை போதகர் அருட்திரு பி.ஜே. மேதர், வட—கிழக்கு மறை மாவட்ட முதல்வர் அருட்திரு. எஸ். எஸ் கருணைராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-109)

★ ★ ★

கண்டியில் நடைபெறவுள்ள 5 ஆவது தேசிய ஜம்போறியில் பங்குபற்ற விரும்பும் சாரணர்கள், குருளைச் சாரணர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று சனிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மாவட்டச் சாரண ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## இன்று நேர்முகப் பரீட்சை

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வலயம் I ஐ சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் சமுகளிக்குமாறு கோரப்படுள்ளனர். (இ)

# சிறுவர் உளநலம் - 04

## கற்றலுக்கு உதவும் காரணிகள்

- ★ பிறந்த நாள்முதற்கொண்டே பிள்ளையின் கற்றல் தொழிற்பாடு நிகழ்கிறது.
- ★ வாழ்வில் வருகின்ற பல்வேறு நிலைமைகளையும் எதிர்கொண்டு, அவற்றுக்கான சரியான அணுகு முறைகளையும், துலங்கல்களையும், தீர்வுகளையும் மேற்கொண்டு, அதனால் வருகின்ற அனுபவங்களை, எதிர்காலப் பயன்பாட்டுக்காகச் சேமித்துக் கொண்டு செல்கின்ற ஒரு படிநிலை வளர்ச்சியே கற்றலாகும்.
- ★ 'படிப்பை'ப் பொறுத்தவரையில், குடும்பத்தில் பெரும்பாலானவர்களேனும் படிப்பில் ஈடுபடுகின்றவர்களாக அமைகின்ற ஒரு சூழல், பிள்ளையைப் படிக்கத் தூண்டும்.
- ★ பிள்ளைக்குரிய நூல்களை பிள்ளையோடு சேர்ந்து பெரியவர்கள் வாசிப்பதன் மூலம், பிள்ளையிடத்து புத்தகம் படிக்கும் ஆர்வத்தைத் தூண்ட முடியும்.
- ★ பிள்ளை படிப்பதற்கான தூண்டல்கள் மிக இன்றியமையாதவை; ஆயினும் பெரியவர்கள் தமது அதீத ஆசையின் காரணமாக படிப்பைத் திணித்து, பிள்ளைக்கு அதனைச் சுமையாக்காமல் விடுவது மிக விரும்பத்தக்கது.
- ★ பிள்ளையைத் தண்டிப்பதை விடுத்து, அதன் சிறு சிறு வெற்றிகளையும் இனங்கண்டு பாராட்டுவதன் மூலம் பிள்ளைக்குத் தன்னம்பிக்கையையும் கற்றலில் ஆர்வத்தையும் ஏற்படுத்த முடியும்.



ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரும் உலக உளநல நாளை ஒட்டி இக்குறிப்பு பிரசுரமாகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பைத்...

(முதலாம் பக்கத் தொடர்)

ததே.

இதன் காரணமாக — கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி தென்கிழக்கு மாகாண அலகு ஒன்றை அமைப்பது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்காது என்று கூறப்படுகின்றது.

ஆனால் புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, ஈரோஸ் ஆகிய இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை அதிகாரப் பரவலாக்கல் அலகு தொடர்பாக கிழக்கில் நடத்தப்படத் திட்டமிடப்படும் சர்வஜன வாக்கெடுப்புகள் அனைத்தையும் அடியோடு எதிர்ப்பதாகக் கூறப்படுகின்றது.

எந்த வித நிபந்தனைகளுமின்றி வடக்கு - கிழக்கு பூரணமாக இணைக்கப்பட்டு, அதன் அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கல் அலகு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என இக் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

### கூட்டணி - ரணில் சந்திப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டக் குழு ஒன்று இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசவுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசு முன்வைத்துள்ள யோசனைகள், வடக்கு - கிழக்கு இணைப்பு, அது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு அரசு வகுத்துள்ள திட்டம் ஆகியவை குறித்து இச்சந்திப்பின் போது ரணிலுடன் கூட்டணித் தலைவர்கள் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரணில் தெரிவிக்கும் பதிலை அறிந்து கொண்ட பின்னர், கூட்டணித் தூதுக்குழுவினர் நாளை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்துத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் அரசின் திட்டத்துக்கு தங்களின் கடும் ஆட்சேபத்தை கூட்டணித் தூதுக்குழு ஜனாதிபதியிடம் தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு அடுத்த நாள் — அதாவது நாளை மறுதினம் — கூட்டணியின் அரசியல் குழு கூடுகின்றது.

அக்கூட்டத்தின் பின்னரே அதிகாரப் பரவலாக்கல் அலகு தொடர்பான அரசின் அறிவிப்புக் குறித்து கூட்டணியின் நிலைப்பாடு என்னவென்பது வெளியிடப்படும் எனக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

### புளொட் கருத்து

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்துத் தீர்மானிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தை புளொட் கடுமையாக எதிர்ப்பதாக அக்கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு இணைப்பில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது.

வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்கும் என்ற உறுதியை இலங்கை-இந்திய ஒப்பந்தம் தராததாலேயே அதை புளொட் அப்போது எதிர்த்தது. புளொட்டின் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

சர்வஜன வாக்கெடுப்பு தேவையற்றது என்பதே எமது கருத்து.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். கருத்து

'இணைப்பைத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவது, ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல' என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

''இணைப்பு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயம்

''கிழக்கில் தேர்தல்நடத்தி அந்த மக்களின் சம்மதத்துடன்தான் அதனை வடக்குடன் இணைக்க முடியுமென்று அரசு கருதினால் —

வடக்கில் தனிநாடு அமைக்கலாமா என்றதொரு சர்வஜன வாக்கெடுப்பை அரசு நடத்திப் பார்க்கலாமே!

'' கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அதிகாரப்பகிர்வு அலகு அமைப்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இது முஸ்லிம் காங்கிரஸும் கூட்டணியும் இணைந்து நடத்திய நாடகத்தின் விளைவு''— என்றார் பிரேமச்சந்திரன்.

### ஈ.பி.டி.பி. கருத்து

ஈ.பி.டி.பியும் இதே போன்ற கருத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

சர்வஜன வாக்கெடுப்பை அக்கட்சி முழுமையாக எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது.

### காங்கிரஸ் கருத்து

''புதிய அரசமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வந்தபின்பே அதன் கீழ் கிழக்கை குறித்து சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியும்.

''ஆனால் சட்ட ரீதியாக புதிய அரசமைப்பு நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான பலம் அரசுக்கு நாடாளுமன்றத்திலோ அல்லது நாடாளுமன்றத்துக்கு வெளியிலோ இல்லை என்பது தெளிவு.

''ஆகவே புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரப்போவதும் இல்லை; அதன் கீழ் இணைப்பு குறித்த சர்வஜன வாக்கெடுப்பும் நடக்கப்போவதுமில்லை — என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (உ-21)

## 10 சம்பவங்...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைப்பு சில இளைஞர்களையும் யுவதிகளையும் பலவந்தமாக தமது அமைப்பில் சேர்த்து வருகின்றது. காணாமல் போனதாகக் கூறப்படும் ஆள்களில் சிலர் இவ்வாறு சேர்க்கப்பட்டிருக்கலாம்.

சில இளைஞர்களும், யுவதிகளும் இரகசியமாக யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்று நாட்டின் ஏனைய பகுதிகளில் வேலையாகியிருக்கலாம்; அல்லது வெளிநாடு சென்றிருக்கலாம்.

என்றாலும் இன்னும் காணாமல் போயிருப்பதாகவே கூறப்படுவோரைக்கண்டு பிடிப்பதற்காக விசாரணைக் குழு தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது. — இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

(அறிக்கையின் முழு விவரம் பின்னர் உதயனில் வெளியாகும்)

## செல்வா...

(முதலாம் பக்கத் தொடர்)

பன், புளொட் அமைப்பின் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் செ. கிருபைராசா தலைமையிலான பிரதிநிதிகள் உட்பட மற்றும் பலர் மலரஞ்சலி செலுத்தினர். நினைவுக் குழுவின் இணைச் செயலாளர்களான க. சச்சிதானந்தன், சா. ஆ. தருமரத்தினம் ஆகியோர் நிகழ்வை முன்னின்று நடத்தினர்.

தந்தை செல்வாவின் ஜனன நூற்றாண்டை ஒட்டி கலாநிதி கனகராசாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வேப்பங்கன்று ஒன்று நினைவாலயச் சூழலில் அவரால் நடப்பட்டது.

தந்தை செல்வா தமது தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்பதவியை அப்போதைய அரசுக்குச் சவால்விடும் வகையில் ராஜினாமாச் செய்த 25 ஆவது வருட நினைவாக மேற்படி மலரஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.


ஓவியர்களின் கவனத்திற்கு!

உலக உளநல நாளையொட்டி சாந்திகமும் உதயனும் இணைந்து நடத்தும் ஓவியப் படைப்பாக்கக் களத்தில், ஓவியங்களை ஒப்படைப்பதற்கான திகதி 25-10-97வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு:

16-09-97 ஆம் திகதி உதயனில் பார்க்கவும்.

எமது ஒரிஜினல் வெளியீடுகள்!

அருண்பாண்டியனின்

() போலீஸ் அட்டாக்

செல்வா, கீர்த்தனா, கவுண்டமணி, செந்தில்

() மண்ணை தொட்டு கும்பிடணும்

ரமேஷ்அரவிந், ரேவதி

() சின்னபுள்ள

வீடியோ CD வெளியீடுகள்!

() பகைவன்

() கல்கி

() முத்து

CD பிரதிகள் உடனுக்குடன் பதிவுசெய்து தரப்படும்.

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/1692)

யாழ் WESCO

மருந்தகத்தின் சேவைகள்

- போட்டோ பிரதி (Photo Copy)
- கவரிடுதல் (Laminating)
- றோணியோ
- தமிழ், ஆங்கில தட்டச்சு

– குறைந்த விலை!

– நிறைந்த தரம்!!

– துரித சேவை!!!

மொத்த விலைக்கு விசேட கழிவு

470 (250), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். O.P.D. முன்பாக)

மருந்து ✠ பால்மா ✠ பல்பொருள்

(சி/1686)

லலிதா புடைவை மாளிகை

இன்று 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணியில் வரும் சுபவேளையில் எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

ஆடவரும், பெண்டிரும், ஆடிவரும் குழந்தைகளும் அணிந்து ஆனந்தமடைய ஆயிரக்கணக்கான துணிவகைகள்.

சிறந்த ரகம்! நிதான விலை!

லலிதா புடைவை மாளிகை

கொண்டாட்ட புடைவைகளுக்கு குடும்பத்துடன் நாடுங்கள்!

கிளை:

லலிதா புடைவை மாளிகை
5, 6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

லலிதா புடைவை மாளிகை
B, 3, சந்தை வீதி,
வவுனியா.

விளம்பர அமைப்பு:

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்,
பெரியகடை.

(50207)


## மரண அறிவித்தல்

### திருமதி ஆசை - செல்லம்மா

ஓவியர் ஆ. இராசையாவின் அன்புத் தாயார் திருமதி ஆசை செல்லம்மா அவர்கள் 1-10-97 புதன் கிழமை காலமானார்.

இவர் அம்பலவன்—ஆசை (வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், இராசையா, உதயகுமார் (ஜேர்மனி), அருந்தவதேவி, மஞ்சுளாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானாம்பிகை, ஜெயந்திமாலா (ஜேர்மனி), கனகலிங்கம் (ஆசிரியர் றோ.க.த.க. பாடசாலை, நாவாந்துறை), கலைதாசன் (ஓட்டுநர்) ஆகியோரின் மாமியாரும், காயத்ரி (உடுவில் மகளிர் கல்லூரி), கீர்த்தனன், அபிநயன், சாம்பவி, சாரங்கி, சிவானுஜன், கௌதமன், சங்கவி ஆகியோரின் பேர்த்தியும், தியாகராசா, காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்வபாக்கியம், மற்றும் இராசதுரை, இரத்தினம் (ஜேர்மனி), நடராசா ஆகியோரின் சகோதரியும், தி. சிவமணி செ. சிவமணி, பாலசுந்தரம், பரமேஸ்வரி, புஸ்பலீலா, கமலாதேவி, முத்தையா, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் முத்து, பொன்னம்மா ஆகியோரின் சகலியும், சந்திரலிங்கம், பூபாலசிங்கம், தவமணிதேவி, புஸ்பராணி, தேவராணி (லண்டன்), சிவபாதலிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச்சிறிய தாயாரும், செல்வராணி, நற்குணவதி, சிவஞானம், நடராசா, ஜெகேந்திரபோஸ் (லண்டன்), ஜெலஜா, றெஜிதா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-10-97) சனிக்கிழமை காலை நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு அச்சுவேலி வல்லை மயானத்துக்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. இராசையா
(மகன் - ஓவியர்)

சரஸ்வதி வித்தியாசாலை ஒழுங்கை,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(50260)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி சஞ்சிகை

ராகம்ஸ்
பட்டுச் சோலை
திருமணம் மற்றும் எல்லா வைபவங்களுக்குமான முகூர்த்தப்பட்டுப் புடவைகளுக்கு நாடவேண்டிய இடம்,
ராகம்ஸ் பட்டுச்சோலை,
24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (சி/1417)

04 - 10 - 1997 சனிக்கிழமை

## கருத்துக் கலசம்

மயூரா

### நவராத்திரி சிந்தனை

இது நவராத்திரிக் காலம்.

உலகத்துக்கு ஆதாரமாக உள்ளது, அதன்இயக்கத்துக்கு உந்து விசையாக உள்ளது சக்தி. அந்தச் சக்தியை அன்னை வடிவில் கண்டு வழி படும் பெற்றி உடையது இந்து சமயம். சிவனையும் பார்வதியையும் அர்த்த நாரீசுராகக் கண்டு உலகத்தின் அண்டசரா சரங்களின் இயக்க நாயகர் களாக வைத்து வழிபடும் சிறப் பும் இந்து சமயத்துக்கே உரியது.

அன்னை — சக்தி — வழி பாடு பலவகைகளில் உண்டு. நவராத்திரி வழிபாடு அவற் றில் ஒன்று.

உலக மாதாவான உமா தேவியை மூன்று வெவ்வேறு வடிவங்களில் — உலகியல் வாழ்க்கைக்குத் தேவைப்படும் மூன்று அருஞ் செல்வங்களின் நாயகிகளாக — உருவகித்துப் பூசித்து, அருளும் ஆசியும் வேண்டி அனுஷ்டிக்கப்படு கிறது.

கல்வி, கலைகள், வித்தை களை ஆரம்பிப்பதற்கு நவராத் திரி — விஜயதசமி — சிறந்த காலமாகக் கொள்ளப்படுகிறது. அதனால் பாடசாலைகள், கலைக்கூடங்கள், தொழிற் கூடங்களில் இக்காலத்தில் புத்துணர்ச்சியையும், புத்தாக் கத்தையும் காணலாம்.

கல்வி, கலைகள் தொழில் வித்தைகள் ஆகியன ஒரு குறிப் பிட்ட காலப்பகுதியில் மட்டும் பயில்வதற்கு உரியவை அல்ல. அவை காலம் முழுவதும், ஒரு வரின் வாழ்நாள் முழுவதிலும் கற்கப்பட வேண்டியவை; பயிலப்பட வேண்டியவை.

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம். தொடர்ச்சியான பயில்வின் மூலமும் பயிற்சியின் மூல முமே இவற்றில் கைதேர்ந்த நிலையை எய்தலாம். இளமை யில் கற்பதனாலேயே அவை கல் மேல் எழுத்துப்போல எக் காலத்தும் நிலைத்து நிற்கும்; நிரந்தரமாகும்.

கல்வி கற்பதற்குமட்டுமன்று. அதன் வழி ஒழுகுவதற்குமே என்பது மனங்கொள்ளப்பட வேண்டியதாகும். 'கற்க கசட றக் கற்றவை கற்ற பின் நிற்க அதற்குத் தக'என்பதனை இள மையில் இருந்தே பயிற்சியில் கொண்டு வர வேண்டும். கலை களும் அத்தன்மையினவே.

இந்த வசதி எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆற்றல் இருந்தும் வறுமை காரணமாக அறிவையும்; கலையையும் பயி லவும், பயிற்சி செய்யவும் பல இளசுகளுக்கு வாய்ப்புஇல்லை. இத்தகையோருக்கு உதவி, கல்வி — கலையை வளர்க்க வேண்டும். தொண்டு உள்ளங் கள் கூட்டி முயற்சி செய்தால் இதில் வெற்றி அடையலாம். கல்வி, கலையில் அநாதர வாக உள்ள இளம் சந்ததியின் வருங்காலத்தை வளமாக்கு வதனை நவராத்திரி காலச் சிந்தனையாகச் சமர்ப்பிக் கிறோம். ஏழைக்கு எழுத்தறி வித்தல் ஆயிரம் கோடி புண் ணியம். இது சமூகநலனில் அக் கறையுள்ளோர் கவனத்துக்கு!

# தென்கிழக்காசியாவை கலக்கும் காட்டுத் தீ!

இந்தப்பிரதேசத்தின்கால நிலை இப்படித்தான் இருக் கும் என்று உலகின் கால நிலை குறித்து முன்பெல் லாம் திட்டவட்டமாகக் கூறமுடிந்தது. நீண்டகால— தொடர்ச்சியான — அவ தானிப்புக்களின் முடிவாக காலநிலை வலயங்களை வகுக்க முடிந்தது. ஆனால் அண்மைக்கால உலக வர லாற்றில் இவையெல்லாம் பொய்த்துப் போய்க் கொண் டிருக்கின்றன.

சில நாடுகளில் எதிர் பாராத வேளையில் புயல் அடிக்கிறது. கடும் கோடை யின் நடுவே மழை கொட்டித் தீர்க்கிறது. இன்னும் சில பகுதிகளில் புதிது புதிதாய் பூகம்பம் வெடிக்கிறது. மாரி காலத்தில் வெயில் தகிக் கிறது. உலகின் ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு வித மான — முரண்பட்ட— கால நிலை மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

பருவ மழைக்காகக் காத் திருக்கும் யாழ்ப்பாண விவ சாயிகள் போல், காட்டுத் தீயை அணைக்க மழை வர மாட்டாதோ என்று ஏங்கும் இந்தோனேசியர்கள் போல், உலகெங்கும் காலநிலை எதிர்வு கூறல்கள் பொய்த் துப் போவதால் ஏமாற்றப் படுவோர் மிக அதிகம்.

உலகின் எல்லாப் பிர தேசங்களிலும் — துருவம் முதல் இமயம் வரை — கால நிலையில் பாரிய மாறுதல் கள் நிகழ்ந்து கொண்டிருக் கின்றன. இவற்றால் ஆங் காங்கே அனர்த்தங்களும், பேரழிவுகளும் ஏற்பட்டு வரு கின்றன.

மாறி மாறி அனர்த்தங் களை ஏற்படுத்திவரும் கால நிலை மாற்றத்துக்குக் கார ணம் என்ன?

### மீண்டும் 'எல் நைனோ'

இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தும் விஞ் ஞானிகள் ''எல் நைனோ'' (El Nino) மீண்டும் உலகை ஆட்டிப்படைக்க விரைந்து வந்து கொண்டிருக்கிறதா என்று அஞ்சுகின்றனர்.

அது சரி வலுமிக்கதும் பேரழிவை ஏற்படுத்தக் கூடி யதுமான இந்த ''எல் நைனோ'' என்றால் என்ன?

லத்தீன் அமெரிக்க நாடுக ளில் ஒன்றான பெரு நாட்டில் வீசும் அனல் காற்றே ''எல் நைனோ'' எனப்படுகிறது. இக் காற்று வழக்கமாக பெரு நாட்டின் வடக்கில் இருந்து தெற்குப் பக்கமாக வீசும். இதனால் பெருவிலும் லத் தீன் அமெரிக்க நாடுகளிலும் அனர்த்தம் விளைவிக்கும் காலநிலை மாறுதல்கள் ஏற் படுவதுண்டு.

ஆனால் ''எல் நைனோ'' அனற் காற்று தற்போது தனது திசையை மாற்றிக் கொண்டுள்ளது. அதாவது வடக்கு பெருவில் இருந்து தெற்கே வீசும் இக்காற்று தற்போது மத்திய கோட்டுப் பகுதிக்கு அருகே உள்ள பசு பிக் சமுத்திரப் பிராந்தியம் வழியே மேற்கு நோக்கி ஒழுங்குமாறி வீசத் தொடங் கியுள்ளது. காலநிலை மாறு தல்கள், சூழல் மாசடைதல் போன்றவை தொடர்பான பல்வேறு காரணங்களினால் தான் இக் காற்று திசைமாறி வீசுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்,

## உலகின் மிக மோசமான சுற்றுச் சூழல் அனர்த்தம்


பொதுவாக இரண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் ''எல் நைனோ'' உலகெங்கும் சீராக இயங்கிவரும் தட்ப வெப்ப நிலையைப் பாதித்து விடுகிறது.

பருவக் காற்றின் வேகம் பசுபிக் கடல் பிராந்தியத்தில் பலவீனமடையும் சமயங் களில் ''எல் நைனோ'' மூர்க்கமடைகிறது. இத னால் பசுபிக்கை அண்டிய வெப்ப மண்டலப் பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் உஷ்ண மடைகின்றன. வளியும் உஷ்ணமடைகிறது.

''எல் நைனோ!'' இந்த நூற்றாண்டின் மிக ஆபத் தான ''எல் நைனோ'' வாக இருக்கும் என்று விஞ்ஞானி கள் பதற்றத்துடன் எச்சரித் திருக்கின்றனர். இதனால் பூமியில் 9 ஆயிரத்து 700 கிலோ மீற்றர் கடல்பரப்பு பாதிக்கப்படலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதத் தில் கடல் மட்டத்தின் வெப் பம் 3.5 டிகிரி சென்ரிகிரேட் டால் உயரக் கூடும் என்றும்— இது நடந்தால் புத்தாண் டின் தொடக்கத்தில் உல கெங்கும் வெள்ளம், நிலச் சரிவு, பஞ்சம், பட்டினி போன்ற பல அனர்த்தங்கள் நிகழ இடமுண்டு என்றும் எச்சரிக்கப் பட்டிருக்கிறது.

இது வரை இரண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டும் நிகழ்வதாகக் கருதப் பட்ட ''எல் நைனோ'' அண் மைக்காலமாகத் தொடர்ச்சி யாக நிகழ்ந்து கொண்டு வரு வதால் விஞ்ஞானிகள் பெரும் கவலை கொண்டுள்ளனர். கடைசியாக கடந்த ஆண்டில்




1982 — 83 காலப் பகுதி யில் ''எல் நைனோ'' ஏற் பட்டபோது பல பகுதிகளில் கடலின் வெப்பம் தாறு மாறாக அதிகரித்தது. அனல் காற்றுக்கு ஈடுகொடுக்க முடி யாமல் சுமார் 2 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர். பல நாடுகளுக்கு கோடிக்கணக் கான டொலர் பெறுமதியான பொருளாதார இழப்பு ஏற் பட்டது.

டிசம்பர் மாதம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இக்காலப் பகுதியில் தான் ''எல் நைனோ'' உச்சக்கட்டத்தை அடைகிறது. இவ்வாண்டு இறுதியில் ஏற்படவிருக்கும் ஓர் ''எல் நைனோ'' தோன் றியதாக நம்பிக் கொண்டி ருந்த விஞ்ஞானிகளுக்கு மீண் டும் ஓர் ''எல் நைனோ'' இவ்வாண்டின் இறுதியில் தலைகாட்டவிருப்பது வியப் பையும், அதிர்ச்சியையும் ஏற் படுத்தி விட்டது. இதனால் இம்முறை ஏற்படப் போகும் ''எல் நைனோவை'' விஞ் ஞானிகள் தீவிரமாகக் கண் காணிக்கத் தொடங்கிவிட்ட னர்.

காற்று மண்டலத்தை மனி தன் தனது சுயநல ஆதாயங் களுக்காக நச்சு மண்டலமாக் கியதே ''எல் நைனோ'' வின் பிறப்புக்கு காரணம் எனக் கூறப்பட்டாலும் அதற் கான சரியான காரணம் இன் னும் கண்டறியப்படவில்லை.

அண்மையில் மெக்ஸிக் கோவில் எதிர்பாராத வித மாக ஏற்பட்ட புயல், சிலி மற்றும் பெரு நாடுகளில் காலம் தப்பிக் கொட்டிய மழை, இந்தோனேசியா விலும், ஆஸ்திரேலியாவிலும் ஏற்பட்டிருக்கும் வரட்சி என் பன ''எல் நைனோ'' வின் விளைவுகள் எனத் தெரிவிக் கப்படுகிறது.

### காட்டுத் தீ அனர்த்தம்

தென்கிழக்காசிய நாடு களை திக்குமுக்காடச் செய்தி ருக்கும் பாரிய காட்டுத் தீ அனர்த்தமும் இதன் விளைவு என்றே கூறப்படுகிறது. முன் னொருபோதும் இருந்திராக கடும் வரட்சியை இந்தோனே சியா சந்தித்துள்ளது.

ஆனால் தென்கிழக்கு ஆசிய நாடுகளை இன்று அச்சுறுத்திக் கொண்டிருக் கும் பெரும் காட்டுத் தீ அனர்த்தம் காலநிலை மாற் றத்தின் விளைவு மட்டுந் தானா?

## நல்லூர் தாஸ்

உலகின் பாரிய சுற்றுச் சூழல் அச்சுறுத்தல் என்று வர்ணிக்கப்படும் இந்தோனே சியக் காட்டுத் தீயினால் அந்த வட்டாரத்திலே சுதந் திரமாக மூச்சுவிட முடியாத நிலையில் லட்சக்கணக்கான மக்கள் தவிக்கிறார்கள்.

உரிய வேளையில் மழை பெய்யவில்லை. அதனால் நிலவும் நீண்ட வரட்சியே காட்டுத் தீ பரவக் காரணம் என்று சொல்லப்படுகிறது. வரட்சியால் வாடிக் சருகிய புதர்களிலும் மரங்களிலும் பஞ்சில் பரவுவது போன்று தீ வேகமாகப் பற்றிக் கொள் ளும் என்பது உண்மைதான். ஆனால் அந்தத் தீயின் மூலம் எங்கே எங்கிருந்து, எப்படி அது பரவியது?

இங்கேதான் தனி மனித நடவடிக்கைகளும், தனி மனிதத் தவறுகளும், தனி மனிதனது பொறுப்பற்ற செயல்களும் வெளிச்சத்துக்கு வருகின்றன.

### அரசே முழுப்பொறுப்பு

கட்டுபபடுத்த முடியாமற் பரவிய காட்டுத் தீயின் விளைவு பூதாகரமாக மாறி பிராந்திய நெருக்கடி என்ற நிலையில் இருந்து சர்வ தேசப் பிரச்சினையாக உரு வெடுத்துவரும் கட்டத்தில் தான் இந்தோனேசிய வனத் துறை அமைச்சர் ஜமால் தின் தமது நீண்ட மௌனத் தைக் கலைத்து இந்த அனர்த் தத்துக்குத் தார்மீகப் பொறுப்பு ஏற்றுள்ளார்.

வனத்துறை நடவடிக்கை களில் காணப்பட்ட ஒழுங்

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி கதாமி தலைமையில்

# ஈரான் புதிய சீர்திருத்தப் பாதையில்!

கடந்த மே மாதம் ஈரானில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற மொஹம்மட் கதாமி (Mohammed Khatami) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஈரான் கடைப்பிடித்து வந்த கொள்கைகளில் மாற்றங்களை மேற்கொண்டு வருகிறார்.

உள்நாட்டில் அடிப்படை மதவாதிகளின் பிடியைத் தளர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வெளிநாட்டைப் பொறுத்தவரை ஈரான் தனது அண்டை அரபு நாடுகளுடனான உறவை சிறிது சிறிதாகப் பலப்படுத்தி வருகிறது.

1979 ஆம் ஆண்டு ஈரானில் புரட்சி ஏற்பட்டு ஷியா (SHI'ITI) முஸ்லிம்களின் கைக்கு ஆட்சி சென்ற பின்னர் சுனி (SUNNY) முஸ்லிம் நாடுகள் அச்சம் கொண்டிருந்தன.

தற்பொழுது சுனி முஸ்லிம்களின் ஆட்சியில் உள்ள சவூதி அரேபியா, குவைத், பாஹ்ரைன், கட்டார், ஓமான், UAE என அழைக்கப்படும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கு கதாமியின் புதிய அரசு நட்புக் கரம் நீட்டி வருகிறது.

கடந்த மே மாதம் ஈரானில் நடந்த தேர்தலில் அடிப்படை மதவாதிகளின் வேட்பாளரான ஈரானிய சபாநாயகர் அலி அக்பர் நாதெக் நூரியை மிதவாதியான கதாமி தோற்கடித்திருந்தார். கதாமிக்கு 69.7 சதவீத வாக்குகள் கிடைத்திருந்தன.

### மன்னர் ஷாவின் ஆட்சிக் காலம்

1979 ஆம் ஆண்டு மன்னர் ஷாவின் ஆட்சி கவிழ்க்கப்படும் முன்னர் ஈரான் தீவிர அமெரிக்க ஆதரவு நாடாக இருந்தது.

"வளைகுடாவில் அமெரிக்காவின் பொலீஸ்காரன்" என்று அந்த நாடு வர்ணிக்கப்பட்டது.

ஷாவின் ஆட்சிக் காலத்தில் கடுமையான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஈரானிய மக்களின் சுதந்திர உரிமைகள் பறிக்கப்பட்டன.

சோவியத் யூனியனின் தெற்காசிய விஸ்தரிப்புக் கொள்கையைத் தடுத்து நிறுத்த அமெரிக்காவுக்கு ஈரான் அவசியமாக இருந்ததால் மன்னர் ஷாவின் அடக்குமுறை ஆட்சிக்கு அமெரிக்கா பக்க பலமாக இருந்தது.

மக்கள் எழுச்சி உச்சக்கட்டத்தை அடைந்தபோது — இராணுவத்தின் ஒரு பகுதியும் மன்னருக்கு எதிராகத் திரும்பிய போது — மன்னர் அமெரிக்காவுக்கு தப்பிச் செல்ல வேண்டியதாயிற்று.


மன்னர் ஷா பின்னர் அமெரிக்காவில் மரணமானார். அவர் மரணம் அடைந்த விதம் இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

### 1979 புரட்சி

மன்னர் ஷாவின் பின்னர் இமாம் ஆயத்துல்லா கொமேனியின் தலைமையில் இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் ஆட்சி ஏற்பட்டது. ஆயத்துல்லா கொமேனியின் ஆட்சியின் பின்னர் கமேனியும் பின்னர் ரப்சஞ்ஜானியும் ஈரானில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னர் தற்பொழுது கதாமி ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார். ஈரானிய பாணிபுரட்சி எந்த ஒரு முஸ்லிம் நாட்டிலும் தற்பொழுது ஏற்படும் சாத்தியம் இல்லை. ஈரானின் கோர்ப்பசேவ்என்று வர்ணிக்கப்படும் கதாமி ஒரு மிதவாதியாகக் கருதப்படுகிறார்.

18 வருடகால அடிப்படை மதவாதிகளின் ஆட்சிக்காலத்தில் முதல் தடவையாக பெண் ஒருவர் இவரினால் அதி உயர்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மசூமே எவ்ரேக்கர் என்ற இப்பெண் 5 உப ஜனாதிபதிகளில் ஒருவராக நியமிக்கப் பட்டுள்ளார்.



எவ்ரேக்கர்

ஈரானில் கட்சி முறை கிடையாது. ஜனாதிபதியே அதி உயர் ஸ்தானம் வகிக்கிறார். எனினும் அவரது கொள்கைகளுக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் தேவை. கதாமியின் அமைச்சர்களில், பாதுகாப்பு, வெளிவிவகாரம், புலனாய்வுத்துறை அமைச்சர்கள் மூவரும் இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு ஆதரவானவர்கள்.

கலாசாரம் இஸ்லாமிய விவகாரம் மற்றும் உள்துறை அமைச்சர்கள் கதாமியின் சீர்திருத்தங்களைத் தீவிரமாக ஆதரிப்பவர்கள்.

இவர்களின் நியமனங்கள் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்குவரும்போது இஸ்லாமிய அடிப்படைவாத எம்.பிக்களிடமிருந்துஎதிர்ப்பு வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தமது அரசியல் சீர்திருத்தங்களுக்கு இந்த அமைச்சர்களின் நியமனம் அவசியம் என்று நாடாளுமன்றத்தில் கதாமி தெரிவித்திருந்தார்.

### மேற்கத்திய நாகரிகம்

இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் ஆட்சி ஏற்பட்டு 18 வருடங்கள் கழிந்தும் ஈரான் இன்றும் மேற்குலக நாகரிக சாயலில் இருந்து முற்றாக விடுபடவில்லை.

ஷாவின் ஆட்சிக் காலத்தில் இருந்து வந்த பத்திரிகைச் சுதந்திரம், புத்தகங்கள் — திரைப் படத்துறைகளில் இருந்துவந்த தாராள போக்குமீண்டும் தேவை என்று பெரும்பாலான ஈரானிய மக்கள் கருதுகின்றனர்.

கதாமியின் சீர்திருத்தங்களின் போது இத்தகைய சுதந்திரங்கள் வழங்கப்பட இருப்பதுடன் அரசியல் கட்சிகள் இயங்குவதற்கும் அனுமதி அளிக்கப்படலாம் என்றும் அவதானிகள் கருதுகின்றனர்.

### பணவீக்கம், வேலை இல்லாப் பிரச்சினை

உள்நாட்டில் கதாமி தற்பொழுது எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் பணவீக்கம், வேலை இல்லாத் திண்டாட்டம், ஊழல் ஆகியவை முக்கியமானவை.

எண்ணெய் உற்பத்தி மூலம் ஈரான் பெருமளவு பணம் சம்பாதித்து வருகிறபோதிலும் 1979 புரட்சியின் பின்னர் அமெரிக்கா விதித்த சில பொருளாதாரத் தடைகள், சுமார் 8 வருட காலம் நீடித்த ஈராக்குடனான யுத்தம் ஆகியவை காரணமாக பொருளாதாரத் துறையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஈரான் தற்பொழுது தினமும் 36 லட்சம் பரல் எண்ணெயை உற்பத்தி செய்கிறது. 9 ஆயிரம் கோடி எண்ணெயை இருப்பில் வைத்திருக்கிறது. உலகில் எண்ணெயில் 10 சதவீதத்தை ஈரான் உற்பத்தி செய்கிறது.

### சுனி முஸ்லிம் நாடுகளுடன் நல்லுறவு

ஈரான்-ஈராக் யுத்தத்தின் பின் ஈராக்குடனான உறவு பெரிதாக அபிவிருத்தி அடையவில்லை.

எனினும் வளைகுடாவில் உள்ள சுனி முஸ்லிம்களின் ஆட்சி நடைபெறும் அண்டை நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் கதாமி ஈடுபட்டுள்ளார்.

வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஈராக் அடக்கப்பட்டுள்ள போதிலும் ஈரான் எதிர்ப்பு முஜாஹிர்தீன் கெரில்லாக்கள் ஈராக்குக்குள் இருந்து கொண்டு ஈரானுக்கு எதிராகச் செயற்படுவதால் ஈரான்-ஈராக் உறவு அபிவிருத்தி அடைய வாய்ப்புக்கள் குறைவு.

இவ்வாரமும் ஈரானிய விமானங்கள் ஈராக் எல்லைக்குள் பறந்து சென்று முஜாஹிர்தீன் கெரில்லாக்களின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளன.

ஈரானிய விமானங்கள் வட ஈராக்குக்குள் பிரவேசிப்பது வளைகுடா ஒப்பந்தத்தை மீறுவதாகும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. அத்துமீறும் ஈரானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வளைகுடா யுத்தம் காரணமாக ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை சிறிது தளர்த்தப்பட்டாலும் இன்னும் தொடர்ந்து இருக்கிறது. மருந்து இறக்குமதி தடைப்பட்டதால் ஈராக்கில் இதுவரை 12 லட்சம் குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கை தவிர ஏனைய நாடுகளுடன் நல்லுறவுகளை ஏற்படுத்துவதில் கதாமி ஓரளவு வெற்றி கண்டுள்ளார்.

மற்றொரு சுனி முஸ்லிம் நாடான பாஹ்ரைன், ஈரான் தனது ஆட்சியைக் கவிழ்க்க முயலுவதாக கடந்த ஆண்டு குற்றஞ் சாட்டியது. அத்துடன் ஈரானிய தூதுவரையும் நாட்டை விட்டு வெளியேற்றி இருந்தது. ஆனால் தற்பொழுது பாஹ்ரைன் ஈரானுடன் ... ஏற்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

அதே போன்று சவூதி அரேபிய முடிக்குரிய இளவரசர் இஸ்லாமிய மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக டிசம்பர் மாதம் ஈரான் செல்கிறார்.

சவூதி அரேபியாவின் வர்த்தக நகரான ஜெட்டாவுக்கு ஈரானிய விமானச் சேவை இடம் பெற்று வருகிறது.

வளைகுடாவில் உள்ள ஹோர்முஸ் (Hormuz) நீரிணைக்குச் சமீபமாக உள்ள மூன்று தீவுகள் தொடர்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் ஈரானுக்கும் இடையில் நெருக்கடி இருந்து வருகிறது.



கதாமி

இந்தப் பிரச்சினையை 'தஹேக்' கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்ல ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விரும்புகிறது. ஆனால் பரஸ்பரம் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணலாம் எங்கிறது ஈரான்.

### பயங்கரவாதத்தை ஆதரிப்பதை ஈரான் நிறுத்துமா?

கதாமி புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றது நம்பிக்கையூட்டும் அறிகுறி என்று அமெரிக்கா அறிவித்த போதிலும் ஈரான் பயங்கரவாதத்தை ஆதரிப்பதை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

அணு ஆயுதங்களை வாங்கும் முயற்சியை ஈரான் கைவிட வேண்டும் என்றும் அமெரிக்கா கோரி வருகிறது.

1992 இல் பேர்லினில் ஈரானிய அதிருப்தியாளர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக ஜேர்மன் நீதிமன்றம் மூன்று ஈரானியர்களை குற்றவாளிகளாகக் கண்டுள்ளது. ஈரானிய அரசின் கைக் கூலிகளாக இவர்கள் செயற்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

### ஆயுதப் படைகளின் ஆதரவு இல்லை

புதிய ஜனாதிபதி கதாமிக்கு ஈரானின் ஆயுதப் படைகள் மத்தியிலோ அல்லது நாடாளுமன்றத்திலோ பெரிய அளவில் ஆதரவு கிடையாது.

எனினும் 1979 புரட்சியின் நோக்கங்களுக்கு இடையூறு ஏற்படாத விதத்தில், மக்களின் ஆதரவுடன் அவர் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல உறுதி பூண்டுள்ளார். ★

உலக உலா
என்.பி.சிலான்

# இளமையின் முக்கியத்துவம்

அமெரிக்காவைச் சேர்ந்த ராக்ஃபெல்லர் உலகில் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவராக விளங்கினார்.

அவர் ஒரு நாள் தனியாக உலாவச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது ஒரு துடிப்பான, உடல் வலிமை மிக்க இளைஞன் ஒருவன் தற்கொலை செய்து கொள்ள முயன்று கொண்டிருந்தான்.

அதைப் பார்த்த கோடீஸ்வரர் ராக்ஃபெல்லர் அந்த இளைஞனை நோக்கி ஓடிச் சென்று அவனைத் தடுத்து நிறுத்தி, "இளைஞனே! நீ ஏன் இவ்விதம் உன் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்தாய்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த இளைஞன், "ஐயா! நான் நன்றாகப் படித்திருக்கிறேன். ஆனால் அந்தப் படிப்பிற்கு ஏற்ற வேலை எனக்குக் கிடைக்கவில்லை. அதனால் போதிய ஊதியம் இல்லை. என்னுடைய வாழ்க்கை வசதியாக இல்லை. ஆகவே வெறுப்பினால் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்து விட்டேன்" என்று தெரிவித்தான்.

மேலும் அவன், "என்னைத் தடுக்கும் நீங்கள் யார்?" என்று வினவினான்

அதற்கு ராக்ஃபெல்லர் தம்மை இன்னார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

உடனே இளைஞன் அவரிடம், "நீங்கள் செல்வந்தர். ஆகவே மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் செல்வத்தையெல்லாம் என்னிடம் தந்தால் உங்களைப் போல் நானும் மகிழ்ச்சியாக இருப்பேன்; தற்கொலை செய்து கொள்ளமாட்டேன். உங்களால் உங்கள் செல்வம் முழுவதையும் எனக்கு மாற்றித் தர முடியுமா?" என்றான்.

ராக்ஃபெல்லர் உடனே அதற்குச் சம்மதித்து, "சரி, நீ சொல்வது போல் நான் செய்கிறேன். ஆனால் அதற்குப் பதிலாக நான் கேட்பதை நீ எனக்குத்தருவாயா?" என்று கேட்டார்.

அதற்கு உடன்பட்டு, "நீங்களோ உலகப் புகழ் பெற்ற பணக்காரர். நானோ பரம ஏழை. உங்களிடம் இல்லாதது—உங்களுக்குத் தருவதற்கு—என்னிடம் என்ன இருக்கிறது?" என்று வினவினான்.

ராக்ஃபெல்லர், "உன்னிடமுள்ள விலை மதிப்பில்லாத இளமையை நீ எனக்குத் தந்தால், அதற்கு ஈடாக நான் என் செல்வம் முழுவதையும் உனக்குத் தருகிறேன்" என்றார்.

அதைக்கேட்ட இளைஞன் சிந்தித்தான். விலை மதிப்பற்ற தன் இளமையை தற்கொலை மூலம் அழித்துக் கொள்ள எண்ணிய தனது முட்டாள்தனத்தை எண்ணி வெட்கப்பட்டான்.

பிறகு அவர், "எத்தனை செல்வம் இருந்தாலும் அது இளமைக்கு ஈடாகாது" என்பதை விளக்கி, இளமையின் முக்கியத்துவத்தை இளைஞனை உணரும் படி செய்தார். அதோடு அவர், இளைஞனை அவனது கல்விக்கு ஏற்ற வேலையிலும் ஊதியத்திலும் அமர்த்தினார். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பனிக்கும் விழிகளுடன் பல்கலை. மாணவருக்கு!

வழி மறந்துமே, வானரக் கூட்டமாய்
வாழும் எம்மவர் நினைவுகள் சூழவே
விழிகள் சோரவும், வேதனை சூழவும்
விண்ணகத்துறைபவன் வாயிலை நாடினேன்.
பழி சூழ்ந்திட வாழ்வதே வாழ்வென
பல்கலை மாணவர் ஆனது எப்படி?
மொழி இழந்திட, மூர்ச்சையாகிட
மூளும் கவலையில் சோர்ந்து நான் போயினேன்.

துரும்பு கடலிலே சிக்கி அலைவதாய்
துன்ப வாழ்வினை வாழும் வேளையில்
விரும்பும் நெறியினை வீறுடன் பயிலவே
விலை மதிப்பிலாக் கல்வியை நாடினோம்.
இரும்பு மனிதராய் இன்று மாறியே
இளைய மாணவர் இதயம் பிளப்பதா?
கரும்பு போலவே நாம் கசக்கிப் பிழியவோ
கனிஷ்ட மாணவர் கல்வியைத் தேடினர்?

சிரித்து மகிழ்வதும் சிந்தனை செய்வதும்
'சீனியர் — ஜுனியர்' உறவை வளர்க்கையில்
மரித்த நெஞ்சுகள் கொண்டவர் போலவே
மந்தியின் லீலைகள் தேடி நாம் போவதா?
புரிந்துணர்வினை வளர்க்க நாம் விரும்பிடின்
புழுத் தனமான வதைகள் நீக்குவோம்.
சரிந்து போயுள சிந்தனை மாற்றிட
சபதம் செய்குவோம்! வாரும் தோழரே!

உன்னைப் போலவே அயலான்ன நேசியென
உரைத்த வாசகத்தின் உண்மை விளங்கிடவே...
கன்னத்தில் அடித்தாலும் மறுகன்னம் காட்டென்ற
கருணை நினைவினிலே கண்ணும் கலங்கிடவே...
சின்னத் தனமான செயல்கள் நீக்கிடவே...
சிலுவை சுமப்பவரும் சொல்வது போல் தோன்றிடவே...
துன்பத்தை தொடர்கதையாய் ஆக்குதல் மடமையென
துடிக்கும் நெஞ்சுடனே... தோழரே! நான் வேண்டுகிறேன்!

—பீனிக்ஸ்—

## தொலைந்ததைத் தேடுகிறோம்

கட்டவிழ்ந்து போன எங்கள் சொத்துக்களை
தேடிக்கொண்டிருக்கிறோம்.
மொட்டவிழ்ந்து முகை வெடித்தே
சத்தமில்லாது மலர்ந்த மலர்களை
பறித்துக்கொண்டிருக்கிறோம்,
திட்டம் ஒன்றில்லாமல் சிதைந்து போன எம்
சிட்டுக்களைத் தேடுகின்றோம்.
பட்டம் பெற்றும் சொட்டு வேலையின்றி
வாழ்வை விட்டுவிட எண்ணமிடும்
இள வட்டங்களைக் காண்கிறோம்.
நீண்டு வளர்ந்திருந்து எம் தேசத்தை
அழகு படுத்திய கற்பக தருக்கள் இன்று
சாய்ந்து வீதியைத் தடை செய்து
ஓய்ந்து கிடப்பதைப் பார்க்கிறோம்.
கற்கள் நிறைந்த எம் சொர்க்க வாழ்வை
முட்கம்பிகள் எல்லையிடுகின்றன.
பூத்துப் பூச்சொரிந்த பூமரங்கள் இன்று
காய்ந்து கரு இழந்து சருகாய்ப் போனது.
அன்று எமை ஆற்றி அமைதிப்படுத்தி நின்ற
அற்புத நதிகளைத் தேடுகின்றோம்.
அதன் வரவுக்காய்க் காத்திருக்கிறோம்

- அ. கயல்விழி -

## நில் ! கவனி ! புறப்படு !

ஓ! என் சோதர,
நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

உன் ஆற்றல் என்னவாயிற்று?
உன் ஆயாசப் பெருமூச்சுடன் வெளியேறிவிட்டதா?
தன்னம்பிக்கை எங்கு போயிற்று?
தன்னிரக்கத்தில் அது அமிழ்ந்து விட்டதா?
பண்பு என்னவாயிற்று?
பரிதாப நிலையிலே பயனற்றுப் போனதா?
சுறுசுறுப்பு என்னவாயிற்று?
சுய பச்சாத்தாபத்தில் செயலற்றுப் போனதா?
மனமகிழ்ச்சி எங்கே போயிற்று?
மனப் போராட்டத்திலே மறைந்தே விட்டதா?

என் தோழனே!
தோழமையுடன் கேட்கிறேன்.
உனது இனிய இயல்புகளெல்லாம்
எங்கே தான் போயிற்று?
என் நண்பனே!
வாழ்க்கை உனக்காகக் காத்திருக்கிறது.
எழுந்துவா!
வானம் உனக்காக நிர்மலமாயிருக்கிறது.
இன்றே புறப்படு.
இந்தப் பூமி உன்னைத்தான் எதிர்பார்த்திருக்கிறது.
சுய பச்சாத்தாபம் ஒரு புதைகுழி.
ஆழமாக அதில் அமிழ்ந்தாயானால் மீட்சியே கிடையாது.
உன்னை நீயே அறிய தேவை வந்துவிட்டது என் சினேகித!
இங்கே பரிதாபப்படலுக்கு தேவை இல்லை.
பயன்படுத்தலுக்குத்தான் தேவைகள் அதிகம்.
நில்: கவனி; புறப்படு —
உன்பாதை என்றும் வெற்றிப்பாதை ஆகட்டும்.
உன் செயல்கள் எல்லாம் உன்னதமாக அமையட்டும்.
என் இனிய சோதர!
இன்றே நன்றாய் முடிவெடு — அதை
செய்ய துணிவாய்ப் புறப்படு!

- கொற்றையூர் 'பிறவி' -

## பெண் அழகு

நீள் முடியும்
வேல் விழியும்
புன்சிரிப்பும்
வஞ்சமில்லா உன்
நெஞ்சமதும்
உன் நினைவில்
நான் இருக்க
வழி கோலியது காண்!

கோ. ரூபவதனன்.

## அமைதி

நிலாத்துளி
இலைகளூடாக வழிய...

தென்றலின்
தெவிட்டாத விசிறல்
குளிருக்கு இதமாக...

எங்கோ
மழைகாலப் பட்சிகளின்
மயக்கும்
மதுர மிழற்றல்...!

ஆரவாரமில்லாமலே
அட்சதை தூவும்
வானத்து விண்மீன்கள்...!

நிலா இருட்டில்
கனதியாய் நீண்ட
மௌனம்...

என்றாலும்
இந்த இனிய அமைதி
நிரந்தரமில்லை
என்ற சோகத்தோடு...

கோபமாய் சடசடக்கும்
துப்பாக்கிச் சூடுகள்...!

- தாட்சாயணி

## பாவங்கள்

நரம்பு மண்டலத்தின்
நீட்சியென
மாயப் பெட்டி.

எல்லாம் திறந்தது...
கனவுகளின் உற்பத்தி மட்டும்
பெருகியது.

காய்ந்த மாடு
கம்பில் விழுந்த
கதையானது.

சூழ.
''என்னதான் நடக்கும்
நடக்கட்டுமே''...
'கறன்ற்கட்' வேளைமட்டும்
கனவு தடைப்பட
குறு விழிப்பு.

பாவம் தேசம்...
பிரசைகளும்தான்.

என். சண்முகலிங்கன்

## புள்ளியும் நானும்....

புள்ளியும் நானும்
புரிந்தால் ஒன்று.
புதுக்கதையில்லை உண்மை!
அள்ளியே சொல்லும்
காரணம் கேட்டால்
ஆமாம் என்றே
தலைகள் அசையும்.
ஆயிரம் அணுக்களின்
சங்கமம் புள்ளி!
அதேபோல்
பாயிரம் பாடும்
கணக்கிலே என்னுள்
பலமுகம் உண்டு;
பலவுணர்வுண்டு;
வேதனையுண்டு;
வெஞ்சினமுண்டு;
சாதனை செய்யும்
சித்தமும் உண்டு
(இ)ரசனையும் உண்டு;
நேர்மையுமுண்டு;
நேசமுமுண்டு;
கூர்மை மிகுந்த
கொள்கைகளுண்டு;
கோபங்களுண்டு,
ஆகவே நானும்
ஆயிரம் முகங்களின்
அற்புதச் சேர்க்கை!
ஆயினும்...
ஒற்றைப் புள்ளியின்
உருவம் போலவே,
எனக்கும்...
வெளியில் மட்டும்
[illegible]
ஒரேமுகம்.

- ச. சாரங்கா -

## நிலவை அறிதல்

சூரிய முதலாளி 'கொதி' ஆறி ......
இலாபமீட்டிப்
போகுமுன்பு சாமிக்குப் போட்ட வெள்ளிக் காசோ நீ?

என்றும் உழைப்பவர் போல்
இளைக்கு மின்னும் விண்மீன்கள்
சிந்தும் வியர்வையென்னும் சீதனத்தின் ஓர் சொட்டோ?
இரவைச் சலவை செய்யும் 'பவர்சோப்போ' ?இல்லாட்டில்
மேக மெனும் கூட்டினிலே முகிலிட்ட முட்டையிதோ?
தென்றல் இளைப்பாறிச்
செல்லும் 'அம்ச தூளிகையோ' ?
பாதையினைச் சரிபார்க்க அலைக்குதவும் கலங்கரையோ?
பட்சிகளுக்கு எட்டாத பழமோ?
ஏய் ..... ! என்னினிய வெண்ணிலவே ... நீ யார்?
உனது விலாசமென்ன?

உன்னுறவு யார் யார்? உன்வீடு வாசலெங்கே?
இயற்கையவள் வெட்டி எறிந்த நகம் நீயா ?
பெண்ணுக்கும் உனக்கும் "பிறப்புரிமைத்' தொடர்புண்டா?
உன் முதுகிலும் நவீன ஓவியங்கள்
ஆர்வரைந்தார் ?

'சந்திரவட்டம்' என்னும் தலைக்கிரீடம் ஆர்தந்தார்?
ஔவைப் பிராட்டியை நீ அடைத்துவைத்தாய் என்பதுதான்
இவ்வூரின் நம்பிக்கை; இது மெய்யா?
பூமியின் பின்
சுற்றித் தினம்திரிந்தும் சோராமல் காதலிக்க
எங்குகற்றாய்?
உனக்குக் கலியாணம் எப்போது?

இவை எனக்குத் தெரியாது!
என்றாலும் ...... சில அறிவேன்.

விஞ்ஞானக் கால்பட்டும் மங்காத தங்கம் நீ!
'வரவு செலவு' வரும்
வாழ்க்கைக்கு உவமை நீ!
'வழித்தேங்காய் எடுத்துத் தெருப்பிள்ளையார்க் கடிக்க'
பழக்கினாய் நீ ......
கதிரில் கடன்வாங்கி எமக்கொளிரும் மழை பொழிந்து
காதல் மயங்க மது பருக்கும்
கொடையாளி!
கோடிக்கவிதைகட்கு உருத்தாளி!
நிலங்குடிக்கப் பாலூட்டும்
'காமதேனுப்' பசு நிகர்த்த
விண்ணின் 'நியோன் பல்ப்' நீ! விடியாத இரவொருநாள்
ஒளிருமென மாதத்துக் கொருதரம் என் வீடுவந்து
தழுவும் விருந்தாளி!
ஆம்; நிலவே பெரியாள் நீ!

- அருணன் -

## கனவுகள் தொடரட்டும்....!

என்னுயிரே...........!
எங்கே நீ இருக்கிறாய்... எனக்குத் தெரியாது.
உன்,
முகம் பார்த்து இப்போ மூவாறு மாதங்கள்.
அன்று எனக்கு
அன்பைச் சொல்லித்தந்த அழகுக்குயிலே நீ
துன்பத்தைத் தந்தின்று தூரப்பறந்ததேன்?
என்னுள் இருக்கும்
மின்னல் பூவே...... உன்
ஒற்றைப் பார்வைக்குள் ஒளிந்திருக்கும்
''முக்கோகிளாநெடியின்'' அன்பும்
''மோனாலிஸாவின்'' அழகும்
என், உயிர்ப்பூவைத் தொட்டு உசுப்பும்:
நல்லாய் இருந்த நமது வாழ்விலன்று
பொல்லாத 'கண்' பட்டதோ...?
'சூரியக்கதிர்' இங்கு வீசிய வேளையில்
ஊரிழந்தபோது நான் உன்னையும் இழந்தேன்.
வானும் பூமியும் வாழ்த்துரைத்த
தேனினிய காதல் திசை மாறிப் போனது.
என்னவளே... இன்று,
நாய்கள் குரைக்கும் நடுச்சாமமொன்றில்
தூரக்கேட்கும் துப்பாக்கி ஓசைகளுக்கிடையில்
நீ என்... நினைவில் வருவாய்!
ஏனென்றால்,
நாளைய பொழுது நம்பிக்கையற்றது.
''இரும்புக் குழலில்'' இருந்து வெளிவரும்
உருக்கு ரவைகள் என் உடலைக் கிழிக்கலாம்.
சாவு என்னைத் தழுவும் போதும்
பூவே உனை நினைத்தே போகட்டும் என்னுயிர்.
அழுது வடியும் விளக்கொளியில்
முகவரி தெரியாத உன் இருப்பிடத்திற்கு
கவிதை எழுதி காற்றில் அனுப்புவேன்.
இந்தப் பிறவியில், நீயும் நானும்
ஒன்றாய் இருக்க ஒரு பொழுது வருமா
என ஏங்கும் என் இதயத்தில்
கனவோடு வந்து நீ கதைபேசுவாய்.
உறக்கம் கலையும் போது
உன்நினைவு ... உயிருக்குள் ஊடுருவும்.
என்... அழகோவியமே...!
இது... நம் காதலுக்கு இடைவேளை.
இனிவரும்... புதிய பொழுதொன்றில்
துப்பாக்கிகள் எல்லாம் தூரவிலகலாம்.
அப்போது,
நானும் நீயும் கைகோர்த்து
வானில் ஏறி வலம் வரும்
காலம் வரும்; என் கண்மணியே...!
அதுவரை,
கனவுகள் தொடரட்டும்.

- சுழிபுரம் வானவராயன் -

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்கு வேலை

தொகுப்பு:- கொற்றையூர் 'பிறவி'

1) '4' என்ற எண்ணை ஏழு தடவைகள் உபயோகித்து கூட்டுத்தொகை நூறு ஆக வருமாறு உங்களால் ஒழுங்கு படுத்த முடியுமா?

2) கொழும்பில் உள்ள ஒரு டாக்டர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சட்டத் தரணியை தனது சகோதரர் என்கின்றார். ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள அந்த சட்டத்தரணியோ கொழும்பில் உள்ள அந்த டாக்டர் தனது சகோதரர் அல்ல என்கின்றார். இது எப்படி?

3) நீச்சல் குளத்தின் சொந்தக்காரர் ஒருவர் சதுரவடிவான தனது நீச்சல் குளத்தை தற்போதுள்ளதை விட இரு மடங்கு பருமன் உள்ளதாக மாற்ற விரும்புகின்றார். நீச்சல் குளத்தின் நான்கு மூலைகளிலும் நிழல் தரும் நான்கு மரங்கள் உள்ளன. மரங்களை வெட்டாமலும், நீச்சல் குளத்தைச் சதுரமாக இருக்கக் கூடியவாறும் எவ்வாறு அவர் அதைப் பெரிதாக்குவார்?

4) சில பெண்கள் தமது பிள்ளைகளுடன் சிற்றுண்டிச்சாலை ஒன்றுக்குச் செல்கின்றார்கள். அப்படிச் செல்லுகின்ற மூன்று பெண்களுக்கு அவர்களின் இரு பிள்ளைகளும் கூடச் செல்கின்றன. சிற்றுண்டிச்சாலையில் அவர்களது மேசையில் ஏழு கதிரைகளே இருந்தன; ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒரு கதிரை கிடைத்தது. எப்படி?

5) ஓர் எண் உள்ளது. அதை இரண்டால் பிரித்தால் ஒன்று மீதி; மூன்றால் பிரித்தால் இரண்டு மீதி; நான்கால் பிரித்தால் மூன்று மீதி; ஐந்தால் பிரித்தால் நான்கு மீதி; ஆறால் பிரித்தால் ஐந்து மீதி; ஏழால் பிரித்தால் ஆறு மீதி; எட்டால் பிரித்தால் ஏழு மீதி; ஒன்பதால் பிரித்தால் எட்டு மீதி; பத்தால் பிரித்தால் ஒன்பது மீதி. அந்த எண் எது?

(விடை XI ஆம் பக்கத்தில்)

# கண்டுபிடியுங்கள்!

தொகுப்பு:- வானம்பாடி
யோகராஜ் தினேஷ்குமார்,
(ஆண்டு 9, ஹாட்லிக் கல்லூரி)

1. இலங்கையில் புகழ் பெற்ற முருக ஆலயங்களில் ஒன்று இது. பெயர் நான்கு எழுத்துக்களைக் கொண்டது. முதலிரு எழுத்துக்களை நீக்க வரும் சொல் செல்வத்தைக் குறிக்கும். நடுவில் உள்ள இரு எழுத்துக்களையும் நீக்க வரும் சொல் வஞ்சனையைக் குறிக்கும். மூன்றாவது எழுத்தை நீக்கினால் பல தெருக்கள் கூடுமிடத்தைக் குறிக்கும். அந்த முருகன் ஆலயம் எது?

2. மூன்றெழுத்து வீட்டுத் தளபாடப் பொருள் இது. முதல் எழுத்தை நீக்க வரும் சொல் கடலிலே பொங்கி வருவதைக் குறித்து நிற்கும். நடுவில் உள்ள எழுத்தை மட்டும் நீக்க கடல் அலை பொங்கித் தணியுமிடம் வரும். இறுதி எழுத்தை மட்டும் நீக்க வரும் சொல் வேகத்தைக் காட்டும். அந்தப் பொருள் எது?

3. இது மூன்று எழுத்திலான சுவையான பழவகைகளுள் ஒன்று. இறுதி எழுத்தை நீக்க வரும் சொல் பெண்ணைக் குறித்து நிற்கும். முதலாவது எழுத்தை நீக்க வரும் சொல் ஒட்டையைக் குறிக்கும். அந்தப் பழம் எது?

4. நான்கு எழுத்தைக் கொண்ட இந்த நாமம், எமது அண்டை நாட்டின் மறு பெயர்களில் ஒன்று. முதல் எழுத்தை மட்டும் நீக்கினால் தேர். இரண்டாவது எழுத்தை மட்டும் நீக்கினால் கால். மூன்றாவது எழுத்தை மட்டும் நீக்கினால் சுமை. முதல் இரு எழுத்துக்களையும் நீக்கினால் களவில் 'அடிப்பதைக்' குறிக்கும். அந்தப் பெயர் என்ன?

5. இந்த மூன்று எழுத்துச் சொல்லைப் புலவர் கையாள்வர். முதல் எழுத்தை நீக்கிவிட்டு நட்டால் முளைக்கும்; நடு எழுத்தை நீக்கிவிட்டால் சிறுவர்கள் விரும்பிக் கேட்பது வரும். கடைசி எழுத்தை நீக்கினால் அது அந்த மூன்று எழுத்துச் சொல்லை ஆக்குபவனையே குறிக்கும். அச்சொல் எது?

(விடை (XI ஆம் பக்கத்தில்)

# முயன்று பாருங்கள்

நாம் கீழே தரும் சொல் பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்டது. அதற்குக் கீழே எழுப்பப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகள் இந்தச் சொல்லில் உள்ளன. விடைகளை உங்களால் கூறமுடியுமா?

முயன்று பாருங்கள்!

''பொன்னம்பலவாணேஸ்வரம்''

(அ) மாதர் மனம் கவரும் உலோகம்.
(ஆ) சில அல்ல இது.
(இ) அடியார் இறைவனிடம் வேண்டுவது.
(ஈ) யுத்தத்தில் வெற்றிபெற இதுதேவை.
(உ) 'உலா' வருவதை இப்படியும் சொல்வோம்.
(ஊ) இலங்கையின் வேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவர்.
(எ) ஏழு நாள்கள் சேர்ந்தது.
(ஏ) அறுப்பது இதனால்.
(ஐ) குரங்குக்கு இப்படியும் பெயர்.
(ஒ) காட்டை இப்படியும் அழைப்பர்.
(ஓ) வலிமை மிக்கவன்.
(ஔ) இராமனின் மகன்மாரில் இவனும் ஒருவன்.

# மூன்று செவிடர்களின் கதை இது!

சீ. ஜெயரட்ணம் (ஆண்டு 4, முடக்காடு, நெல்லியடி கிழக்கு)

ஆடு மேய்க்கும் சுப்பன் ஒரு செவிடன். அவன் ஒரு நாள் வயலில் ஆடு மேய்க்கச் சென்றான். நண்பகலாயிற்று. அவனுக்குப் பசி எடுத்தது.

பக்கத்தில் வயல் உழுது கொண்டிருந்தான் மாணிக்கம்.

''எனக்குப் பசிக்கின்றது, வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வருகிறேன். அதுவரை என் ஆடுகளைப் பார்த்துக் கொள்!''—என்று மாணிக்கத்திடம் கூறினான் சுப்பன்.

ஆனால் மாணிக்கமும் செவிடன். சுப்பன் என்ன கூறுகிறான் என்று விளங்காமலேயே தலையாட்டினான் மாணிக்கம்.

சுப்பன் வீடு சென்றான்; சாப்பிட்டுவிட்டுத் திரும்பினான். தன் ஆடுகள் அனைத்தும் ஒரே இடத்தில் நின்று மேய்வதைக் கண்டான். மகிழ்ச்சியுற்றான்.

அதுவரை ஆடுகளைப் பார்த்த மாணிக்கத்திற்கு ஏதேனும் பரிசு கொடுக்க நினைத்தான் சுப்பன். அவனிடம் ஒரு நொண்டி ஆடு இருந்தது. அதைப் பரிசாகக் கொடுக்க விரும்பினான். அதைப்பிடித்துத் தூக்கிக்கொண்டு மாணிக்கத்திடம் சென்றான்.

சுப்பன் நொண்டி ஆட்டுடன் வருவது கண்டு மாணிக்கம் பயந்தான்.

''என் அருமை ஆடுகள் சிதறாமல் நீ இவ்வளவு நேரமும் பார்த்துக் கொண்டாய். அதற்காக நான் உனக்குப் பரிசளிக்க விரும்புகிறேன். இந்த ஆட்டை என் பரிசாகப் பெற்றுக்கொள்!''—என்று நொண்டி ஆட்டை நீட்டினான் சுப்பன்.

திடீரென சுப்பன் தனது வயலுக்குள் வருவதைக் கண்டு பயந்திருந்த மாணிக்கம், சுப்பன் நொண்டி ஆட்டை நீட்டியதும் வெலவெலத்துப் போனான்.




''நான் உன் ஆட்டின் காலை முறிக்கவில்லை'' என்று கத்திக் கொண்டு ஓட்டம் பிடித்தான் மாணிக்கம்.

மாணிக்கம் கூறியதைப் புரிந்து கொள்ள முடியாத சுப்பன் குழம்பிப் போனான். என் நொண்டி ஆடு பரிசளித்ததால் அதை விரும்பாமல் கோபமுற்ற மாணிக்கம், வயலை விட்டு ஆவேசத்துடன் வெளியேறுவதாக நினைத்த சுப்பன், மாணிக்கத்தை வேகமாகப் பின் தொடர்ந்தான்.

''நல்ல ஆடு தரமாட்டேன். இது தான் தருவேன். இதைப் பிடி!'' —என்று நொண்டி ஆட்டைத் தூக்கிக் காட்டிக் கொண்டு மாணிக்கத்தைக் கலைக்கத் தொடங்கினான் சுப்பன்.

திரும்பிப் பார்த்த மாணிக்கம், நொண்டி ஆட்டைத் தூக்கிக் காட்டியபடி — ஏதோ குழறியவாறு — சுப்பன் கலைப்பதைக் கண்டு இன்னும் பயமடைந்தான்.

'இவன் நொண்டி ஆட்டைத் தூக்கிக் காட்டியபடி என்னைக் கலைக்கிறான். நான் முறிக்காத காலுக்காக என் மீது குற்றம் சுமத்தப் பார்க்கின்றான் சுப்பன். இவனிடம் சிக்காமல் பெரியவர்கள் யாரிடமாவது நியாயம் கேட்பது தான் சரியானது' — என்று நினைத்தான் மாணிக்கம்.

அதனால் சுப்பனின் கையில் சிக்காமல் ஓடத் தொடங்கினான் மாணிக்கம். ஆனாலும் சுப்பனும் விடுவதாகஇல்லை. எப்படியும் மாணிக்கத்தைக் கலைத்துப் பிடித்து அவன் கையில் நொண்டி ஆட்டுப் பரிசை திணித்து விட்டுத்தான் மறு வேலை என்பது சுப்பனின் திட்டம்.

கலைத்துச் சென்ற இருவரும் கிராமத்துக்குள் புகுந்தனர். கிராமத்தில் முதலாவது வீடு ஊர்ப் பெரியவர் சபாபதியினுடையது. அவரிடம் நியாயம் கேட்கலாம் என்ற எண்ணத்தில் அந்த வீட்டுக்குள் நுழைந்தான் மாணிக்கம்.

அந்தோ பரிதாபம்! சபாபதிக்கும் காது கேட்காது; அவரது மனைவிக்கும் காது கேட்காது. இருவரும் செவிடர்கள்.

காது கேட்காததால் — ஒருவர் கூறுவதை மற்றவர் விளங்காமல் — எதைப் பேசுகின்றோம், என்ன பேசுகின்றோம் என்று தெரியாமல் கணவன் — மனைவி இருவரும் எந்நேரமும் சண்டையிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

மாணிக்கம் வீட்டுக்குள் நுழைந்த போதும் கணவன் — மனைவி யுத்தம் நடந்து கொண்டுதான் இருந்தது.

ஓடி வந்த மாணிக்கமும் துரத்தி வந்த சுப்பனும் வேகமாக தனது வீட்டுக்குள் நுழைந்ததைக்கண்ட சபாபதி தான் மனைவியுடன் சண்டையிடுவதைப் பார்க்கச் சகிக்காமலேயே அவர்கள் விழுந்தடித்துக்கொண்டு வீட்டுக்குள் வருவதாக நினைத்தார்.

அவர்களைப் பார்த்து ''என்ன வேணும்?'' ''என்று கேட்டார்.

சுப்பன் நொண்டி ஆட்டை தூக்கிக் காட்டி அதைத் தான் பரிசளிக்க விரும்பியதையும், மாணிக்கம் ஓடத் தொடங்கியதையும் விலாவாரியாகக் கூறினான். ஆனால் அது சபாபதிக்கு விளங்கவில்லை.

அதே நேரம் மாணிக்கம் முழங்காலில் மண்டியிட்டு; ''ஐயோ! இந்த ஆட்டின் காலை நான் முறிக்கவில்லை, முறிக்கவே இல்லை. சுப்பன் பொய் சொல்கின்றான்.''— எனக் கண்ணீர் மல்கக் கூறி, சபாபதியைக் கையெடுத்துக் கும்பிட்டு நியாயம் செய்ய வேண்டினான்.

இருவர் கூற்றையும் விளங்காத சபாபதி—

மனைவியுடன் சண்டையிட்டால் ஆட்டின் காலைப் போன்று தன்காலை முறிக்கப் போவதாக சுப்பன் தன்னை மிரட்டுகின்றான் என்றும் —

சண்டையை நிறுத்தி மனைவியுடன் சமாதானமாகப் போகும்படி மாணிக்கம் மன்றாடுகின்றான் என்றும் — எண்ணினான்.

அதனால் ''எனது மனைவியுடன் நான் சண்டையிடுவதைத் தடுக்க நீங்கள் யார்? உன்னால் முடியுமானால் ஆட்டின் காலை உடைத்தது போல் என்காலையும் உடைக்க முயற்சித்துப் பார். இந்த மிரட்டலுக்கு எல்லாம் நான் அஞ்சமாட்டேன். மாணிக்கத்தின் கெஞ்சலுக்கும் அடங்க மாட்டேன்'' என்று சத்தமிட்டவாறு மனைவியுடனான சண்டையை மீள ஆரம்பித்தார் சபாபதி.

(XI ஆம் பக்கம் பார்க்க)

# கட்டிக் கொஞ்சும் அம்மா!



காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா!
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தரும் அம்மா!

பாடசாலை போகச் சொல்லிப்
பாதி வழிக்கு வந்தே
கூட நின்று கொஞ்சிக் கொஞ்சி
வழி அனுப்பும் அம்மா!

துள்ளித் துள்ளித் துடுக்குடன்
நான்
குறும்பு செய்த போதும்
கிள்ளி நுள்ளி வழி நடத்தி
படிக்கச் சொல்லும் அம்மா!

பட்டு நிலாக் காட்டி எனக்குப்
பாலுஞ் சோறுந் தந்தே
சிட்டு போலப் பறக்கும் என்னைக்
கட்டிக் கொஞ்சும் அம்மா!

- ஸ்ரீ - நிதர்சன்

# சுறுசுறுப்பு எறும்புகள்

எறும்புகள் சிறிய எறும்களாம்
எத்தனை விதத்தில் எறும்புகளாம்
சுறுசுறுப்பாக அங்குமிங்கும்
சுற்றித் திரியும் எறும்புகளாம்.

இனிப்புப் பொருளை வட்டமிட்டு
இழுத்துக் கொண்டு சென்றிடுமாம்
மனிதரைப் போல இல்லாமல்
மகிழ்வுடன் ஒற்றுமை பேணிடுமாம்.

சேமித்து உணவை வைத்திடுமாம்
சேர்ந்து வாழ்ந்து காட்டிடுமாம்
உழைத்து உழைத்து வாழ்ந்திடுமாம்
உயர்ந்த பண்புகள்
கொண்டதுவாம்.

வரிசையாக நீர் சென்றிடவே
வழிகாட்டிடும் நல்ல எறும்புகளாம்
கரிய நிறத்து எறும்புகளாம் -
உமக்குக்
கற்றுத் தருவது புரியலையோ?

சிவபாலன் பிரஷாந்
(நாவற்குழி ம. வி.)

# ''பச்சைக்கிளியே வா!''



பச்சைக்கிளியே மரத்தில் நீ
பதுங்கி யிருக்க வேண்டாம் வா!
இச்சையாக நானுனக்கு
இனிய உணவும் தருவேன் வா!

பச்சையான உன் கழுத்தில்
பவளம் போன்ற ஆரமதை
வைச்ச நண்பர் யாரென்று
வந்தே யெனக்குக் கூறாயோ?

சொண்டுக்குச் சிவப்பு மை
கொண்டு
கோலஞ் செய்தாயென எண்ணிக்
கண்டு பெண்கள் தம்முதட்டைக்
கவினுறச் செய்து பார்த்தனரோ?

பண்டைக் காலப் புலவர்கள்
பாட்டிலுன்னைத் தூதாகத்
தொண்டு செய்ய வைத்தனராம்
சொல்வாய் பச்சைக் கிளியே நீ!

- முத்துக்குமார் திலீபன் -
(ஆண்டு 9,
யாழ். மத்திய கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# நிர்வாக சபைக் கூட்டம்

எங்களது கிராமத்தின் நடுவில் தெருவோரமாக ஒரு சிறிய பிள்ளையார் கோயில் இருக்கிறது. தெருவோரத்தில் இருப்பதால இவர் தெருவடிப் பிள்ளையார் எனப்படுகிறார். தெருக்கரையில் நிற்கும் ஆலமரம் கோயில் முற்றத்துக்கும் படர்ந்து நிழல் பரப்பிக் கொண்டிருந்தது.

அன்று பங்குனி மாதத்து இரண்டாம் ஞாயிற்றுக் கிழமை.

காலை பத்துமணி இருக்கும்.

பஞ்சாட்சரத்தாருக்கு ஏறிக்கொண்டிருந்த கொதி மாதிரி வெயிலும் ஏறிக்கொண்டிருந்தது.

''ஒன்பது மணிக்கு கூட்டம் எண்டு போட்டிலை போன கிழமையே எழுதிப் போட்டிருக்குது. இப்ப பத்து மணியாகுது. இவையளுக்கு ஒரு நிருவாக...சபை, அதுக்கொரு கூட்டம்...''

பஞ்சருக்கு அடுத்த படியாக அங்கே வந்து நின்ற ஒரே ஆள் தில்லைதான்.

''அதென்ன ஒருதரும் இல்லை எண்ட கதை... நான் ஒரு ஆள் நிக்கிறன் தானே ...''

தனக்கே உரிய நமுட்டுச் சிரிப்போடு பஞ்சாட்சரத்தாரைச் சீண்டினார் தில்லை.

இதை எல்லாம் அலட்சியம் செய்யும் அளவைப் பஞ்சாட்சரத்தாரின் ஆத்திரம் எப்போதோ தாண்டி விட்டது. பலிபீட மண்டபத்துக்கு சற்றுத் தள்ளி சிறிய மணிக்கூட்டுக் கோபுரம் இருக்கிறது. ஆவேசமாகப் போய் மணிக்கயிற்றை வேகத்துடனும் விசையுடனும் இழுத்தார்.

அவருடைய வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல மணி ''டாண், டாண்'' என்று அலறியது.

நாலுதரம்தான் இழுத்திருப்பார். 'தடால்' என்று கீழே விழுந்தார். அவருடைய கையில் அறுந்துபோன மணிக்கயிற்றின் துண்டு அப்படியே இருந்தது.

அப்போது உள்ளே வந்தவர் சச்சியர். யாரையும் வம்புக்கு இழுப்பதென்றால் இவருக்கு சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்டது மாதிரி.

''... என்ன பஞ்சாட்சரம்... என்னை ஏனப்பா விழுந்து கும்பிடுறாய்...? பிள்ளையாரைக் கும்பிடன் ...''

மண்ணைத் தட்டிக் கொண்டு எழும்பினார் பஞ்சர். சச்சியருக்கு பதிலடி கொடுக்க இப்போது அவருக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. சச்சியரை முறைத்துப் பார்த்தார்.

தனது சைக்கிளைக் கையில் பிடித்தபடி ஆலுக்குக் கீழ் திருநாவுக்கரசர் நின்று கொண்டிருந்தார்.

''...பஞ்சாட்சரம் மணியை அடிச்சதோ? இல்லாட்டி மணி பஞ்சாட்சரத்தை அடிச்சதோ..?''

பஞ்சருக்கு விழுந்த அடுத்த அடியை சச்சியரும் தில்லையரும் ரசித்தார்கள்.

''மணிக்கு ஒரு ஆனமான கயிறு போடத் தெரியாது. தலைவர், செயலாளர் எண்டு தலைப்பா மட்டும் கட்டிப் போடுவியள்...''

தனது ஆத்திரத்தை தலைவர் மீது அள்ளி வீசினார் பஞ்சர்.

கையில் ஒரு பையுடன் வந்த தலைவர் ஆனந்தராசர் சொன்னார்—

''...போன மாதந்தான் புதுக்கயிறு போட்டனான். எலி வெட்டிப் போட்டுது போலை...''

''...நல்ல வேளை, மணல் நிலமாப் போச்சுது. இல்லாட்டி இப்ப கூட்டத்தை ஆஸ்பத்திரியிலைதான் வைக்க வேண்டி வந்திருக்கும்...''

தில்லையின் கிண்டல் பஞ்சருக்கு உறைத்து விட்டது.

''...முதல் மணி அடிச்சதோடை எல்லாரும் வந்திருந்தா நான் ஏன் பிறகு அடிக்கப்போறன்...? எல்லாரும் வந்து.. சும்மா கதைதான். எனக்கு எத்தினை அலுவல் கிடக்குது?...''

பஞ்சாட்சரத்தாரின் கதை திருநாவுக்கரசரைத் தட்டி விட்டது. மிகவும் படிமானமாகவும் அகடவிகடமாகவும் பேசுபவர் அவர்.

''...அப்ப இஞ்சை வந்திருக்கிற மற்றவன் ஒருத்தருக்கும் ஒரு வேலையும் இல்லை. வேலை அவசரத்திலைதான் விழுந்தெழும்பி நிக்கிறாய் போலை?''

ஒரு பக்கமாகக் கதை வழியள் நடந்து கொண்டிருந்தன. மறுபக்கத்தில் நிர்வாக சபையின் மற்ற உறுப்பினர்களும் வந்து சேர்ந்து விட்டார்கள். தனாதிகாரி அருள்ராசர், செயலாளர் நாகேஸ்வரி அக்கா மற்றும் ஞானம் ரீச்சர் முதலிய பத்துப் பேரும் கூடி விட்டார்கள்.

செயலாளர் நாகேஸ்வரி அக்காவும், ஞானம் ரீச்சரும் பெண்கள். இவர்கள் இங்கே மினக்கெட்டால் வீட்டுச் சமையலும் மினக்கெட்டுப் போகும். அதனால் நாகேஸ்வரி அக்கா கூட்டத்தைத் தொடங்கும்படி குரல் கொடுத்தார்.

''...நேரம் போகுது. ஒராள் தேவாரம் பாடுங்கோ ... கூட்டத்தைத் துவங்குவம்...''

அங்கே நின்ற ஆண்கள் யாரும் இதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவர்களின் கிண்டல்களும் கெக்கட்டங்களும் அடங்குவதாய் இல்லை.

ஞானம் ரீச்சர் இரைச்சலோடு இரைச்சலாக ஒரு தேவாரமும் புராணமும் பாடி முடித்தார். தொடர்ந்து 'நமப் பார்வதி பதே' சொல்லி 'அரகரமகாதேவாவை'யும்தானே சொல்லியபின் கூட்டம் கூடுகின்ற பலிபீட மண்டபத்தில் அமர்ந்தார்.

''...தேவாரம் சொல்லியாச்சு. கூட்டத்தைத் தொடங்குவம்'' என்று உரத்தகுரலில் கத்தினார் தலைவர்.

ஒரு பக்கமாக தமது பையோடு உட்கார்ந்தார் அவர். பையை விரித்து ஒரு தாளை வெளியே எடுத்தார். அவருக்குப் பக்கத்தில் கணக்குக் கொப்பியோடு அமர்ந்திருந்த தனாதிகாரி அருள்ராசரிடம் நீட்டினார்.

பெண்கள் பக்கம் பக்கமாகவே இருந்தார்கள். ஆண்களில் சிலர் இருந்தார்கள். சிலர் நின்றார்கள். சிலர் இருப்பதும் எழும்பி நடப்பதுமாகத் திரிந்தார்கள்.

காரியதரிசி தலைவரைக் கூப்பிட்டார்.

''...சென்ற கூட்ட அறிக்கையை செயலாளர் வாசிப்பார். எண்டு சொல்லுங்கோ...''

''...உதென்ன எனக்குத் தெரியாதே? எத்தனை கூட்டம் நடத்திப் போட்டன். (சபையைப் பார்த்து) எல்லோருக்கும் தான் சொல்கிறன், அடுத்ததாக சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப் படும்...''

தலைவர் சொன்னதைத் தொடர்ந்து செயலாளர் அறிக்கையைப் படிக்கத் தொடங்குகிறார்.

''...பங்குனிமாதம் பதின் மூண்டாம் திகதி திருமதி ஞானலக்சுமியின் தேவாரத்துடன் கூட்டம் தொடங்கியது...''

இடைமறித்தார் சச்சியர்.

''...உது எங்களுக்குத் தெரியும். உதுகளை விட்டுட்டு இப்ப ஏன் கூட்டம் எண்டதைச் சொல்லுங்கோ. இஞ்சை எல்லோருக்கும் வேறை அலுவல்கள் கிடக்குது...''

தனது பற்றாக்குறைக் கணக்கு வழக்குகளைச் சொல்லி, ஐயரின் இரண்டு மாதச் சம்பளப் பாக்கியைத் தீர்ப்பதற்கு ஒரு வழிபண்ண வேணும் என்று தவித்துக் கொண்டிருந்தார் தனாதிகாரி. இத்தச் சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்திக் கொண்டார்.

''...ஐயற்றை சம்பளம் ரெண்டு மாதமாக் குடுக்கேல்லை. அதாலை ஐயர் பூசைக்கு வர்றேல்லை...''

இந்தத் திடுக்கிடும் தகவல் திருநாவுக்கரசருக்கு பஞ்சாமிர்தம் மாதிரி இருந்தது.

கோயிலில் பூசை நடக்கிறதா இல்லையா என்பது பற்றி உண்மையில் இந்தக் கணம் வரையில் அவருக்குத் தெரியாது. ஏன் இரண்டு மூன்று பேர்களைத் தவிர மற்றவர்களுக்கும் தெரியாது.

''...அப்ப கூட்டத்தை வேளைக்கே கூட்டியிருக்கலாமே. இவ்வளவு நாளும் தலைவர் என்ன செய்தவர்...?''

இப்படி ஒரு சந்தர்ப்பம் வராதா எண்டு பார்த்துக் கொண்டிருந்தார் சச்சியர்; தம்முடைய பகிடியைஎடுத்து விட்டார்.

''...அவர் என்ன வேலை செய்யிறார் எண்டு தெரியாதே? கராச்சுக்குத்தான் போறவர்,''

இந்தப்பதில் தில்லையருக்கு கையில் ஒரு மோதகம் வைத்ததுபோல் இருந்தது.

''...அப்ப... தலைவருக்கு கரைச்சலான வேலைதான்...''

இந்தக் கதை ஞானம் ரீச்சருக்கு எரிச்சலை உண்டாக்கி இருக்க வேண்டும். முகத்தைச் சுழித்தார்.

''..எல்லாத்தையும் விட இஞ்சை கூட்டம் நடத்திறது தான் கரைச்சலாயிருக்குது...''

ஞானம் ரீச்சருக்கு நாகேஸ்வரி அக்கா மீண்டு கொடுத்தார்.

''...இப்ப ஐயற்றை சம்பளத்துக்கு என்ன செய்யிறது'' என்று தனாதிகாரி கேட்கிறார்.

திருநாவுக்கரசர் படினமாகப் பதில் சொன்னார்.

''...குடுக்கத்தானே வேணும். வசதியுள்ளவை போட்டுக் கட்டிப் போட்டு உண்டியல் காசிலை எடுக்கிறதுதான்...''

விழுந்தெழும்பிய நோவுடன் நின்ற பஞ்சாட்சரத்தார் படபடப்பாகச் சொன்னார்.

''...உண்டியல் தீத்தக் கிணத்துக்கையெல்லோ கிடக்குது. ஆரோ குறைமாதத்திலை பிறந்ததுகள் உடைச்சுப் போட்டுக் கிணத்துக்கை போட்டுக் கிடக்குது...''

இது சச்சியருக்கு அடக்க முடியாத சிரிப்பைக் கிளப்பி விட்டது.

''...அப்ப ... பத்திரமான இடத்திலைதான் வைச்சிருக்கிறியள்...''

இவர்கள் இப்படிக் கதைத்துக் கொண்டிருக்கையில் மீன்கார மகாலிங்கனின் 'கோண்' சத்தம் கேட்கிறது. ஞானம் ரீச்சர் எழும்பினார்.

''...இண்டைக்கு முழுக வேணும். அவரும் நிக்கிறார். நான் மகாலிங்கனிட்டை மீன் வாங்கி வைச்சிட்டு ஓடியாறன்...''

ஞானம் ரீச்சர் மீன் வாங்கப் போய் விட்டார். பஞ்சாட்சரத்தாரையும் மீன் பெட்டி சுண்டி இழுத்தது.

''...உவன் என்ன வெறும் தூள் மீன் தானே கொண்டு வாறான். நேற்றுச் சந்தியிலை ஒவ்வொரு சாண் விளைக்குட்டியள் வாங்கினனான். நல்ல மலிவு...''

''...அப்ப நாறலாயிருக்க வேணும்...''

சட்டென்று தலையடி போட்டார் சச்சியர். இவர்களின் மீன் கதை நாகேஸ்வரி அக்காவை பொறுமை இழக்க வைத்தது.

''நீங்கள் ஆம்பிளையள், நிண்டு முசுப்பாத்தி பண்ணுறியள், நான் சமைக்க வேணும். பொடியள் ரியூசனாலை வந்து நிண்டு துள்ளப் போகுதுகள் ..''

இப்போது தலைவர் ஆனந்தராசர் கதைக்கத் தொடங்கினார்.

''...சித்திரை புனர் பூசத்துக்குப் பிள்ளையாருக்கு அபிஷேகம் வருகுது தெரியும் தானே...''

இதைக் கேட்ட தனாதிகாரி குறுக்கே பாய்ந்தார்.

...''பூசை நடக்கிறதுக்கே வழியைக் காணேல்லை. இப்ப அபிஷேகத்தைப் பற்றிக் கதைச்சு என்ன புண்ணியம்? ஒவ்வொண்டாக் கதையுங்கோ...''

இப்படி இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கையில் பஞ்சாட்சரத்தார் மெள்ள நழுவி மீன் பெட்டிக்காரன் அடிக்குப் போய்விட்டார். சச்சியர் இதைக் கவனிக்கத் தவறவில்லை.

''...பஞ்சாட்சரமும் கறி பாக்கப் போட்டுது...'' என்று சொல்லிச் சிரித்தார்.

நேரம் பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. ஐயர் அவசரமாக வந்து மடைப்பள்ளிக்குப் பக்கத்தில் சயிக்கிளை நிற்பாட்டினார், கூட்டத்தில் இருந்தவர்கள் யாரையும் லட்சியம் செய்யாமல் விறு விறு வென்று போய் காண்டாமணியை அடித்தார். ஐயரின் வருகையை ஊருக்கு மணி அடித்து அறிவிக்க வேண்டுமென்பது நிர்வாக சபையாரின்முடிவு.

**- சு. சிவராசா -**

திருநாவுக்கரசர் தமக்கு உரிய முறையில் சொன்னார்.

''...ஐயா முறைப்படி தான் எல்லாம் செய்கிறார். நேரம் தான் மத்தியானப் பூசை நேரம். அதுவும் ஒரு வகைக்கு நல்லதுதான். பிள்ளையாருக்கு இப்ப தண்ணி ஊத்தினாக் கொஞ்சம் குளிர்மையா இருக்கும். நான் சொல்லுறது சரிதானே ஐயா...?''

ஐயரும் குறைந்தவரில்லை. உடனடியாக மறுத்தான் கொடுத்தார்.

''...எப்ப வந்து மணி அடிச்சாலும் கோயிலடிக்கு ஒரு சனமும் வராது. சும்மா நிருவாகம் கூடுறியள். என்னொண்டு உருப்படியாச் செய்யிறியள்?...''?

திருநாவுக்கரசர் ஐயரைச் சமாதானப் படுத்த முயன்றார். ஐயர் கோவிச்சுக் கொண்டு போட்டாரேயெண்டால் வேறை ஆளைப்பிடிப்பது கஷ்டம்.

''...ஐயாவின்ரை சம்பளத்தைப் பற்றித்தானே கதைச்சுக்கொண்டு இருக்கிறம்...''

''...ஓம், ஓம். உங்கை உந்த ஆலிலை பழுக்கும் புடிங்கித் தாருங்கோ கொக்கத் தடி இல்லை யாக்கும்...''?

ஐயர் நின்று கதைக்கவில்லை. தம்முடைய அலுவல்களை மளமளவென்று கவனிக்கத் தொடங்கினார்.

நாகேஸ்வரி அக்கா பொறுமை இழந்துவிட்டார்.

''...சரியப்பா இவ்வளவு நேரமும் கதைச்சியள். அறிக்கையிலை என்ன எழுதுறது? ஒண்டுக்கும் ஒரு முற்றும் இல்லை...''

இந்தக் கதைக்குத் தில்லையர் பதிலடி கொடுத்தார்.

''...ஒரு முற்றும் இல்லாமல் கூட்டம் முற்றுப் பெற்றது எண்டு எழுதுறது தான்...''

இந்த நேரம் பார்த்துச் சச்சியர் ''டேய்... டேய்... நில்லு'' என்று கத்திக் கொண்டு றோட்டுக்கு ஓடினார்.

''...உன்னத்தான் கன நாளாத் தேடுறன். நாளையிண்டைக்கு வாறன் எண்டு மூண்டு மாதத்துக்கு முந்திச் சொல்லிப் போட்டுபோனனி. இவ்வளவு நாளும் ஒளிச்சுத் திரிஞ்சிருக்கிறாய்...''

சச்சியர் எழுந்த கையுடன் திருநாவுக்கரசர் எழுந்தார்.

''...சரி கூட்டம் முடிஞ்சுது தானே. அப்பனே புள்ளையாரே... (கை கூப்பிக்கும்பிட்டுக் கொள்கிறார்) நான் வாறன். மிச்சத்தை அடுத்த கூட்டத்திலை கதைப்பம்...''

தலைவர், செயலாளர், தனாதிகாரி ஆகிய மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இந்த நிர்வாக சபையில் தியாகர் முன்பு அங்கத்தவராக இருந்தவர். சில கருத்து வேறுபாடுகளால் பிரிந்து போய்விட்டார். ஆனாலும் கூட்டம் முடியும் தறுவாயில் ஒரு தரம் வந்து சண்டித்தனம் செய்வது அவரது வழக்கம்.

''...எல்லாம் கள்ளர். இவங்களுக்கு என்ன தெரியும்...? நிர்வாக யாப்பிலை என்ன இருக்கெண்டு தெரியுமா? யாப்பு என்னட்டை இருக்கு...''

தியாகரின் கர்ச்சனை நாகேஸ்வரி அக்காவைக் கலக்கியது.

''...சரி எழும்புங்கோ அவரைக்கவரை போவம். மேற்படியான் வந்திட்டார்...''

மூவரும் வெளியே நடந்தனர். கோயிலடியில் யாரும் இல்லை. ஐயர் பூசை பண்ணத் தொடங்கிவிட்டார். தியாகர் தனிக்காட்டு ராஜாவாக உள்ளேவந்தார். அவர் வாயில் வந்ததையெல்லாம் திட்டித் தீர்த்தபடி நின்றார். அந்த மேளவாத்தியத்துடன் பிள்ளையாருக்குப் பூசை நடந்து கொண்டிருந்தது.

ஆலய நிர்வாகசபை மீண்டும் அடுத்த மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை கூடும். நிகழ்ச்சி நிரலிலும் எந்த மாற்றமும் இருக்காது. ★

## தழும்புகள்

என் மறுப்பில்
உன எதிர்ப்பின் துளிர்ப்பு.
''நான்'' கொண்ட கோபம்
அறிவிற் கவிய
உள்ளின் மிருகம்
உன் முதுகில்
தழும்புகளாய்!
துடித்கலறும்
உனக்கெதிரான
காரணப் பூச்சோடு
என் தப்புதல்கள்,
எல்லாம் முடிய சிரித்தபடி
விளையாடும் உன்முதுகின்
சிவந்த தழும்புகளை
ஏந்தி அழும் என் மனசு!

- ந. சத்தியபாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குப்பி விளக்கு -காலனின் புதிய

தீக்குச்சியைக் கொண்டு விளக்கையும் ஏற்றலாம்; வீட்டையும் எரிக்கலாம். தீயை நாம் எப்படிப் பயன் படுத்துகின்றோம் என்பதில்தான் அதன் விளைவு தங்கியிருக்கின்றது.

தீ ஓர் அருமையான சேவகன். ஆனால் அவனை நாம் கவனயீனமாகப் பயன்படுத்தினால் பயங்கரமான ஆள்கொல்லியாகி விடுவான்.

தீயை மனிதன் பயன் படுத்தத் தொடங்கிய— வரலாற்றுக்கு முற்பட்ட— சுற்காலம் தொடக்கம் அவன் தீயினால் பெரும் பயனையும் அதே சமயம் விபத்துக்களையும், அழிவுகளையும் சந்தித்தே வந்துள்ளான்.

இலங்கையில் ஏறத்தாழ 60 வீதமான — அதாவது 15 இலட்சம் — வீடுகளில் மின்சார வசதி இல்லை. அவ்வீடுகளில் சுமார் 30 இலட்சம் பாதுகாப்பற்ற குப்பிவிளக்குகள் பாவனையில் உள்ளதாக சமீபத்திய ஆய்வு ஒன்று குறிப்பிடுகின்றது.(Weekly Epidemiological Report of Srilanka—May 1997)

## குடாநாட்டில் தீ விபத்துக்கள்

யாழ்ப்பாணக் குடா நாட்டைப் பொறுத்த வரை இரவில் ஒளியைப் பெறுவதற்கும் சமையல் போன்ற அடுப்புத் தேவைகளுக்கும் தீயின் நேரடிப் பயன்பாடு அவசியமாகின்றது.

தீயின் பாவனை அதிகரிக்க அதிகரிக்க அதனால் ஏற்படக்கூடிய விபத்துகளுக்கான சந்தர்ப்பமும் அதிகரிக்கின்றது.

இங்கு சிலகாலமாக அதிகரித்துவரும் தீவிபத்துகளுக்கு பாதுகாப்பற்ற விளக்குகளும், கவனயீனமும், சிறுவர் தீயைக் கையாள்வதுமே பிரதான காரணிகளாக உள்ளன. இவற்றில் பெரும்பாலான விபத்துக்களை எம்மால் தவிர்க்க முடியும்; தவிர்க்கத் தவறுவதே வேதனை தருவதாகும்.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் சுமார் ஒரு லட்சம் பேர் ஏதோ ஒரு வகையில் எரிகாயங்களுக்கு ஆளாகின்றனர். அத்துடன் பல நூற்றுக்கணக்கானோர் தீவிபத்துகளில் இறக்கின்றனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 5 மாதங்களில் மட்டும் 45 பேர் கடுமையான தீக் காயங்களால் பாதிக்கப் பட்டு சத்திர சிகிச்சை வார்ட்டுகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்


சிறிய எரிகாயங்களுக்குள்ளானவர்களினதும் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றவரினதும் புள்ளி விவரம் இதில் அடங்கவில்லை

இவ்விபத்துக்களில் 90 வீதமானவை பாதுகாப் பற்ற குப்பி விளக்குகளாலேயே ஏற்பட்டுள்ளன.

## தீவிபத்தின் பாதிப்பு

இந்தப்புள்ளி விவரங்கள் மிகவேதனையைத் தருபவை எரிகாயங்களால் மரணங்கள் ஏற்படுவதை விட, உயிர் பிழைப்பவர்கள் அழகியல் ரீதியாகவும், உடற்தொழிற்பாட்டு ரீதியாகவும், மனோவியல் ரீதியாகவும் பெரிய பாதிப்பை அடைகின்றனர் என்பதே முக்கியமானது.

முகத்தில் ஏற்படும் தீக் காயங்களால் பெரும்பாலானோர் கண்பார்வையை இழக்கின்றனர்; அதைவிட காயங்கள் ஆறும் போது பாரிய தழும்புகள் ஏற்பட்டு முகம் விகாரமாகி விடுவதால் பாதிப்புற்றவர்கள் சமூகத்தின் பரிகாசத்திற்குப் பயந்து ஒதுங்கி வீடு




ஹரிக்கேன் விளக்கு

களுக்குள்ளே முடங்கி விடுகின்றனர். இதனால் அவர்கள் மனோவியாதிகளுக்கு ஆளாவதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது.

ஆழமான மூன்றாம் தர தீக்காயங்களால் தசைகள், நரம்புகள் என்பன பாதிக்கப்படுவதாலும் தழும்புகளின் சுருக்கத்தாலும் அங்கவீனம் ஏற்படுகின்றது.

## விகாரத்தை மாற்ற வசதி இல்லை

மேல் நாடுகளில் தீ விபத்தில் விகாரமடைந்தவர்கள் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை மூலம் (Plastic surgery) பாதிப்புற்ற அவயவப் பகுதிகளைத் திருத்தி அமைத்துக் கொள்கின்றனர். ஆனால் இங்கு அப்படியான வசதி இன்னும் இல்லை; மக்களிடம் அவ்வகையான சிகிச்சைக்குத் தேவையான பணமும் இல்லை.

எனவே வந்தபின் வருந்துவதிலும் பார்க்க, வருமுன் கவனமாக இருந்து (தீ) விபத்துக்களைத் தவிர்த்தலே சாலவும் சிறந்தது.

## ஆபத்தான போத்தல் விளக்குகள்

இலங்கையில் தீ விபத்துக்களுக்கு பிரதான காரணம் அபாயகரமான பாதுகாப்பற்ற குப்பி விளக்குகளின் பாவனைதான்.

அவற்றில் மிகவும் ஆபத்தானது போத்தல் விளக்காகும். சாதாரண மருந்துப் போத்தல் ஒன்றின் மூடிப் பகுதி இருக்க வேண்டிய இடத்தில் ஒரு தகட்டுக் குழாய் செருகப்பட்ட தகர மூடி ஒன்றை வைத்து அந்தக் குழாயின் ஊடாக திரியை விடுவதன் மூலம் போத்தல் விளக்குத் தயாரிக்கப்படுகின்றது.

இவ்விளக்குகள் —

★ ஸ்திரத்தன்மையற்றவையாக இருப்பதனால் தட்டுப்பட்டவுடன் சரிந்து கீழே விழுந்துவிடுகின்றன.

★ மூடி இறுக்கமற்ற தகடாக இருப்பதனால் விழும் போதே மூடி கழன்று விழுவதனாலும் விழுந்த போத்தல் உடைவதனாலும் எரி பொருள் அருகில்இருப்பவர்கள் மேல் சிந்தி தீ பரவுகின்றது.

★ எரிந்து கொண்டிருக்கும் திரி, எரிபொருளில் நனைந்து விட்ட உடையில் அல்லது உடலில்பட்டவுடன் தீ குப்பெனப் பற்றி விடுகின்றது.

இதேபோன்ற பாதிப்பு பழைய மின் குமிழ்களில் செய்யப்படும் விளக்குகளாலும், ஜாம் போத்தல் விளக்குகளாலும், தகரக் குப்பிவிளக்குகளாலும் கூட ஏற்படும்.

ஜாம் போத்தல் விளக்குகளின் வாய் அகலமாக இருப்பதனாலும், தீச்சுடர் போத்தலின் உள்ளே எரி பொருளுக்கு மிக அருகில் இருப்பதனாலும் மிகவும் அபாயகரமானதும். என்றாலும் எரிபொருள் குறைவாகப் பாவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆபத்தும்குறைவாக இருக்கும்.

போத்தல் விளக்குகள், குப்பி விளக்குகள் போன்றவற்றைப் பயன்படுத்துவோரை அவற்றினால் ஏற்படக்கூடிய விபத்துக்களின் கொடூரத்திலிருந்து காப்பாற்றுவதற்கு முயல வேண்டும். அதற்கு இவ்விளக்குகளின் பாவனையால் ஏற்படக்கூடிய விபத்துக்களை தெளிவாக அவர்களுக்கு உணர்த்தி, விளக்கி, அது பற்றிய அறிவூட்டலை நாம் வழங்கவேண்டும்.

ஆனால் இதற்கு இடைஞ்சலாக இருப்பது இவ்வகையான விளக்குகளின் பாவனையாளர் பிரதானமாக வறியவர்களாகவும் கல்வியறிவு குன்றியவர்களாகவும் காணப்படுவது தான். அவர்களுக்கு தகுந்த ஊடகங்கள் — அதாவது பத்திரிகை, வானொலியைத்தவிர தெருக்கூத்துகள் மேடை நாடகங்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள்— மூலமும் — அவ்விளக்குகளின் பாவனையால் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி, ஆபத்தான விளக்குகளுக்குப் பதிலாக பாதுகாப்பான விளக்குகளை அறிமுகப் படுத்தி, அதனை அவர்கள் பயன்படுத்த உதவ வேண்டும்.

## 'ஹரிக்கேன்' விளக்கு

இப்போது நாம் பயன் படுத்தும் விளக்குகளில் மிகப் பாதுகாப்பானது 'ஹரிக்கேன்' விளக்குத்தான்.

இதன் அடிப்பகுதி மிகவும் அகலமாக இருப்பதால் அது இலகுவில் தட்டுப்பட்டு சரியாது; ஸ்திரமாக இருக்கும்.

எரிபொருள் விடும் திருகு மூடியிலும் —

எரியும் காய்ப்பகுதி — தாங்கியுடன் இணையும் இடத்திலும் —

இறப்பர் அடைப்பான்கள் (Washer)இறுக்கமாகஉள்ளதால், விளக்கு சரிந்தாலோ குலுங்கினாலோ கூட எரி பொருள் வெளியே சிந்தாது.

அத்தோடு எரிபொருள் தாங்கிக்கு மேல் — விளக்கின் உட்புறத்தில் — ஒரு காற்றறை இருப்பதனால் சுவாலையின் சூட்டால் தாங்கி வெப்பமடைவதில்லை. எரிபொருள் சில வேளை சிந்த நேரிட்டாலும் கூட அது இவ்வறையில் சேகரிக்கப்பட்டு விடுவதால் எரிபொருள் வெளியே பரவி தீ விபத்து ஏற்பட இடமில்லாமல் போகின்றது.

மேலும் விளக்கின் இரு புறமும் உள்ள குழாய்கள் மூலம் எரியும் சுடருக்கு சூழலுடன் நேரடித் தொடர்பு இல்லாத ஒரு வளியோட்டம் கிடைப்பதால், சூழலில் ஏற்படும் — எவ்வகையான — பலத்த காற்றாலும் சுடர் பாதிக்கப்படமாட்டாது. அதேபோல் விளக்கின் சுடரிலிருந்து சூழலுக்குத் தீ பரவுவதும் முற்றாகத் தடுக்கப்படுகின்றது. (படத்தைப்பார்க்க) இந்த வளி ஓட்டத்துக்கு விளக்கின் வெப்பத்தினால் ஏற்படும் மேற்காவுகை ஓட்டம் முக்கிய காரணம்.

அமெரிக்கப் பாலைவனப் பகுதியில் ஏற்படும் ஒரு சுழிக்காற்றுக்குப் பெயர் 'ஹரிக்கேன்'. அந்தக் காற்றிலும் கூட இந்த விளக்கு அணையாமல் நின்று பிடித்ததால் அதற்கு அப்பெயரே நிலைத்து விட்டது.

மிகவும் பாதுகாப்பான இவ்விளக்குகளை எல்லோரும் பயன்படுத்தினால் விபத்துக்களைப் பெருமளவு குறைக்கலாம். ஆனால் இதன் விலை அதிகம் என்பதாலும் இதனைப் பேணுவதில் உள்ள பிரச்சினைகள் காரணமாகவும் சாதாரண வறிய மக்களால் இவற்றைப் பயன் படுத்த முடிவதில்லை.

எனவே உள்ளூராட்சி சபைகளோ, அரச சார் பற்ற சமூக, தனியார் தொண்டு நிறுவனங்களோ இவற்றை நன்கொடையாக அல்லது மானிய அடிப் படையில் அல்லது நீண்ட காலக் கடனடிப்படையில் ஏழை மக்களுக்கு வழங்க முன்வருவதன் மூலம் அநாவசிய தீ விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க உதவ முடியும்.

ஸ்ரீ. நகுலேஸ்வரன்
(4 ஆம் வருடம்,
யாழ். மருத்துவபீடம்.)

அத்தோடு பாதுகாப் பான, சிக்கனமான மாற்று விளக்குகளை வடிவமைக்கவும், தயாரிக்கவும் உள்ளூர் உற்பத்தியாளரை ஊக்குவிக்கவும் இத்தகைய அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

## பாதுகாப்பான புதிய விளக்கு

இலங்கை மருத்துவ சங்கம், பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் டபிள்யூ. கொடகும்புறவின் உதவியுடன் — புதிய —உற்பத்திச் செலவு மிகவும் குறைவான — பாதுகாப் பான— குப்பி விளக்கொன்றை அண்மையில் வடிவமைத்துள்ளது.

இவ்விளக்கு அடிப்படையில் குப்பி விளக்குப் போன்றது தான். ஆனால் கனமான தடித்த கண்ணாடியினால் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட போத்தலால் ஆனது. எனவே விழுந்தாலும் உடையாது.

அடிப்பகுதி அகன்றும், உயரம் குறைவாகவும் இருப்பதால் தட்டுப்பட்டாலும் சரிந்து விழாது.

உறுதியான தகர திருகு மூடியில் இணைந்த எரியும் பகுதி அமைந்துள்ளதால் விளக்கு சிலவேளை விழுந்தாலும் எரிபொருள் வாய் வழியே சிந்தாது.


இதன் உற்பத்திச் செலவு 11 ரூபாய் மட்டும்தான். தென்னிலங்கையில் பல பகுதிகளில் பரீட்சித்துப்பார்க்கப்பட்ட இவ்விளக்கு மிகவும்நல்ல பயனைக் கொடுத்துள்ளது. அங்கு இவ்விளக்குகள் மிகவும்வறிய மக்களுக்கு இலவசமாக வழங்கப்படு

கின்றன. ஏழையவர்க
மலிவுவிலையில்(பத்து
கிடைக்கின்றன.
இந்த விளக்குகள்
னிலங்கையில் ஒரு தொ
கூடத்தில் மாதத்
நாற்பதாயிரம்என்றஅ
தற்சமயம் தயாரிக்க
கின்றன. இன்னும் மூ
வருடத்துக்குள் இல
முழுவதிலும் பாவனை
உள்ள முப்பது லட்சம்
காப்பற்ற குப்பி வி
களையும் இந்தப் பாது
பான விளக்குகளால் (
Lamps) மாற்றீடு செ
விட முடியும் என்று இ
நிர்ணயிக் கப்பட்டுள்ள
குடாநாட்டு வர்த்
கள் இந்தவகை வி
களைப் பெற்று இங்கு
பதன் மூலம் குடாநா
சிறிது காலமாகபெருகி
தீ விபத்துகளைக்குறைப்
ஒரு முக்கியமான பங்
செலுத்த முடியும்.
தேங்காய்எண்ணெய்
குகளும் ஆபத்தில்லாத
மண்எண்ணெய் அறிமு
குவதற்கு முன்னர்
கைய விளக்குகளை
எமது முன்னோர்கள்
படுத்தினர் என்பது
பிடத்தக்கது.

## விபத்தை தவிர் சிலவழிகள்

விளக்கினாலும் ஏ
காரணங்களினாலும்
படக் கூடிய தீ விப
களையும் அவற்றி
நேருகின்ற எரிகாயங்
யும் தவிர்க்க சில வ
வருமாறு:-
★ எவ்வகையான—
காப்பான— விளக்காய
எரிந்து கொண்டிரு
போது அதற்குள்
பொருள் விடுவது
தானது. எரியும் வி
சூடாகி அதன் தாங்
உள்ள மண்எண்ணெய்
யாகி உயர் அமுக்க
நிரம்பியிருக்கும். இத
திறக்கும்போது வெ
றும் ஆவி விரைவாக
பற்றலாம். அதைவிட
சிறிது தவறினாலும்
தில் உள்ள எரிபொ
போத்தலிலுள்ள எரி
ளும் உடலில் சிந்தி வி
ஏற்படலாம்.எனவேவி
களுக்கு எரிபொருள்
வதை நேரத்துடன்—
ஒளி உள்ளபோதே—
தலாக செய்து வைத்
வேண்டும். பின்பு
கேற்றலை மட்டும்
நேரத்தில் செய்யலாம்
சரத்தினாலும், இரு
லும் உடையிலோ,
லிலோ எரிபொருள்
பின்பு விளக்கேற்றும்
விபத்து ஏற்படுவதை
மூலம் தவிர்க்கமுடியு
★ ஹரிக்கன் வி
யும், பித்தளை வி
யும், பாதுகாப்பான
கையும் தவிர்த்த
விளக்கையும் எரிந்துகொ
டுள்ள நிலையில் கொ
திரிவது மிகவும் ஆப
னது. இதில் மேசை வி
கும் அடங்கும்.
★ தீயைக் கையா
போது நீண்ட —
வான—நைலோன் போ
வற்றாலான செய
நார்—உடைகளை அ
கூடாது. ஏனெ
நைலோன் ஆடைகளி
விரைவாக தீப்பற்றி
தாலும், எரியும்
இவ்வகை துணிகள் உ

## இந்த வினைகள் வேண்டவே வேண்டாம்




தட்டுப்பட்டால் குப்பெனப்பற்றும் குப்பி விளக்கு!

படுக்கை அருகில் விளக்கை வைத்துக் கொண்டு தூங்காதீர்கள்!

எரியும் விளக்குக்கு பெற்றோல், ரின்னர் விடாதீர்!

போதையுடன் தீயைத் தீண்டாதீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கு

## புதிய வடிவம்

...ரணையவர்களுக்கு ...ாயில் (பத்துரூபா) ...றன.
...விளக்குகள் தென் ...ில் ஒரு தொழிற் ... மாதத்துக்கு ...ிரம் என்ற அளவில் ... தயாரிக்கப்படு ... இன்னும் மூன்று ...குள் இலங்கை ...ம் பாவனையில் ...பது லட்சம் பாது ... குப்பி விளக்கு ...இந்தப் பாதுகாப் ...க்குகளால் (Safe ...ாற்றீடு செய்து ...ம் என்று இலக்கு ...கப்பட்டுள்ளது.
...ட்டு வர்த்தகர் ...வகை விளக்கு ...பற்று இங்கு விற் ...ம் குடாநாட்டில் ...மாக பெருகிவரும் ...களைக் குறைப்பதில் ...யமான பங்கைச் ... முடியும்.
...எண்ணெய் விளக் ...பத்தில்லாதவை. ...ணெய் அறிமுகமா ... முன்னர் அத்த ... விளக்குகளையே ...ன்னோர்கள் பயன் ... என்பது குறிப் ...து.

### ...தை தவிர்க்க ...வழிகள்

...ாலும் ஏனைய ...வினாலும் ஏற் ...டி தீ விபத்துக் ... அவற்றினால் ... எரிகாயங்களை ...க்க சில வழிகள் ...
...வகையான — பாது ... — விளக்காயினும் ... கொண்டிருக்கும் ... அதற்குள் எரி ... விடுவது ஆபத் ...எரியும் விளக்கு ...அதன் தாங்கியில் ...ண்எண்ணெய் ஆவி ...ர் அமுக்கத்தில் ...க்கும். இதனால் ...போது வெளியே ... விரைவாக தீப் ... அதைவிட கை ...பற்றினாலும் விளக் ...ள எரிபொருளும் ...லுள்ள எரிபொரு ...லில் சிந்தி விபத்து ...ம். எனவே விளக்கு ...எரிபொருள் நிரப்பு ...நரத்துடன் — சூரிய ...ள்ளபோதே — ஆறு ...சய்து வைத்துவிட ... பின்பு விளக் ... மட்டும் அந்தி ... செய்யலாம். அவ ...லும், இருளினா ...டயிலோ, உட ...ரிபொருள் சிந்தி ...க்கேற்றும் போது ...ற்படுவதை இதன் ...விர்க்கமுடியும்.
...க்கன் விளக்கை ...தனை விளக்கை ...துகாப்பான விளக் ... தவிர்ந்த எந்த ...யும் எரிந்துகொண் ...லையில் கொண்டு ...கவும் ஆபத்தா ...ில் மேசை விளக் ...க்கும்.
...க் கையாளும் ... நீண்ட — தளர் ...நலோன் போன்ற ...ன செயற்கை ...டைகளை அணியக் ... ஏனெனில் ... ஆடைகளில் மிக ... தீப்பற்றிபரவுவ ... எரியும் போது ...துணிகள் உடலில்

ஒட்டிக்கொண்டு எரிவதாலும், விரைவாக அணைக்கவோ, எரியும் உடையை அகற்றவோ முடியாத ஆபத்து நிலையே ஏற்படும்.

### இவையும் வேண்டா!




எரியும் விளக்குக்கு எண்ணெய் ஊற்றாதீர்!



எரியும் அடுப்புக்கு எண்ணெய் எத்தாதீர்!



தீப்பற்றினால் ஓடாதீர்!



குழந்தைகள் தீயைநெருங்க விடாதீர்கள்!

சேலைகள் போன்ற தளர்வான உடைகளை அணிந்திருந்தாலும் தீப்பிடித்து உடையில் அது நன்றாகப் பரவும் மட்டும் எம்மால் ஆபத்தை உணரமுடிவதில்லை. எனவே தீயைக் கையாளும் சந்தர்ப்பங்களில் இவ்வகையான உடைகளைத் தவிர்த்து பருத்தி ஆடைகளை அணிவதே சிறந்தது.

★ படுக்கைக்கு அருகில் விளக்குகளை வைத்துக்கொண்டு படுப்பதனை தவிர்ப்பதன் மூலம் நித்திரையில் அதனைத் தட்டி தீ விபத்தில் அகப்படுவதை தவிர்க்க முடியும். தூக்கக் கலக்கத்துடன் விளக்குகளுக்கு அருகில் இருந்து படிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

★ எரிந்து கொண்டுள்ள அல்லது தணலாக உள்ள விறகு அடுப்புக்குள் ஒருபோதும் மண்எண்ணெயை எத்தக் கூடாது. அப்படிச் செய்யும்போது பெரும்பகுதி மண்எண்ணெய் அடுப்பு வெப்பத்தில் திடீர் என்று ஆவியாகி, பரவித் தீப்பற்றுவதால் எத்தியவரே அந்த நெருப்பில் அகப்பட வாய்ப்புண்டு.

★ குடாநாட்டில் காணப்படும் இன்னுமொரு பிரச்சினை — வாகனங்கள் வைத்திருப்போர் அவற்றின் பாவனைக்காக மண்எண்ணெயுடன் பெற்றோல் அல்லது ரின்னரைக் கலந்து கொள்கலன்களில் வைக்கின்றனர். அதனைச் சரியாகக் குறியிடாது — சாதாரணமாக வீட்டில் மண்எண்ணெய் வைக்கும் இடத்திலேயே — அதனை கவனயீனமாக வைத்து விடுகின்றனர். இதனால் அடுப்புகளிலோ, விளக்குகளிலோ அவை தவறுதலாக ஊற்றப்பட்டு தீவைக்கப்படும் போது பாரிய விபத்துகள் ஏற்படுகின்றன. ஏனெனில் பெற்றோல், ரின்னர் போன்றவற்றுக்கு மண்எண்ணெயைவிட தீப்பற்றும் ஆற்றலும், வெடிக்கும் ஆற்றலும் அதிகம். கடந்த மாத ஆரம்பத்தில் இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த — ஒரு கைக்குழந்தை உட்பட — மூவர் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகினர். எனவே இப்படியான ஆபத்தான — எரிபொருள்களை தனிப்படுத்தி — பிறிதான — இடத்தில் வைத்து வீட்டில் உள்ள சகலருக்கும் அதுபற்றி அறிவுறுத்தி வைக்க வேண்டும்.

★ குழந்தைகள், சிறுவர், வலிப்பு நோய் வருபவர்கள், மதுபோதையில் உள்ளவர்கள், கண்பார்வை அற்றவர், தீ விபத்தில் அகப்படும் சாத்தியம் அதிகம் என்பதால் அவர்கள் தீயினைக் கையாள்வதைத் தவிர்க்கவேண்டும்.

தீ சம்பந்தமான பொருள்களையோ, கொதிக்கும் உணவு வகைகளையோ குழந்தைகளுக்கு எட்டாத இடங்களிலேயே எப்போதும் வைக்க வேண்டும்.

★ வீடுகளுக்கு அருகில் குப்பை எரிக்கக் கூடாது; படுக்கைக்கு போகுமுன் அல்லது சமையலறையை விட்டு வெளியேறும் முன்னர் அடுப்பு சரியாக அணைந்துள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

★ எரிபொருள்களை சேமிக்கும் இடத்தில் விளக்குகளையோ தீயை உருவாக்கக் கூடிய பொருள்களையோ வைத்தலாகாது.

★ பெற்றோமாக்ஸ் விளக்கு, மண்எண்ணெய் ஸ்டவ் என்பனவற்றில் மண்எண்ணெயுடன் உயர் அமுக்கமும் சேர்ந்து பயன்படுத்தப்படுவதால் நன்கு பரிச்சயமற்ற ஒருவர் அவற்றைக் கையாள்வது பாரிய விபத்துக்கு வழி வகுக்கலாம். எனவே தெரியாத காரியத்தைச் செய்ய முயலக்கூடாது.

★ சமையல் அறையில் வசதிக்காக அடுப்புகளை உயரத்தில் வைப்பதால் சிறிய விபத்தினாலும் முகம், மார்பு போன்ற ஜீவாதாரமான பகுதிகள் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்க அடுப்புகளை நிலமட்டத்தில் அல்லது குறைவான உயரத்தில் வைத்துப் பேணுதல் நல்லது.

★ செறிந்த அமில காரங்களாலும் எரிகாயங்கள் ஏற்படுகின்றன. இவை பெரும்பாலும் இரசாயன ஆய்வு கூடங்களிலும், தொழிற்கூடங்களிலும் ஏற்படும் விபத்துகளினால் நிகழ்பவை. போதிய கவனத்துடன் இருப்பதன் மூலம் இத்தகைய விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

மரணம் ஏற்படுகின்றது SEPTICAEMIC SHOCK).

(iii) உள்ளுறுப்புகள் நேரடியாகப் பாதிக்கப்படுவதாலும் மரணம் சம்பவிக்கலாம்.

(iv) தீ விபத்தில் அகப்படுபவர் அளவுக்கு மிஞ்சிய வெப்பமான காற்றையும் புகையையும் சுவாசிப்பதால் சுவாசத் தொகுதி சேதமடைந்து மூச்சுத்திணறல் மரணம் கூட ஏற்படலாம்.

### தீப்பிடித்தால் செய்ய வேண்டியது

**தீ உங்களில் பற்றினால் உடனடியாக நீங்கள் செய்ய வேண்டியவை :-**


1. உங்கள் ஆடையில் தீப்பிடித்தால் உடனடியாக ஆடையைக் களைந்து விடுங்கள்.

2. தீ உங்களில் பற்றியதை உணர்ந்த உடனேயே அபயக்குரல் எழுப்பி மற்றவர்களின் கவனத்தைக் கவர வேண்டும்.

3. தீப்பற்றியவுடன் ஒருபோதும் ஓடுவதற்கு எத்தனிக்காதீர்கள். ஓடினால் தீ விரைவாகப் பரவும்.

4. ஆடையை களைய முடியாதவிடத்து தரையில் விழுந்து உருளுங்கள். அதாவது எரியும் பகுதியை தரையுடன் அழுத்தி தீயை அணைக்கவேண்டும். சாக்கு, கம்பளம் போன்றவற்றை உடலில் சுற்றிக் கொண்டும் உருளலாம்.

5. நீர்த் தொட்டிகள் அருகில் இருந்தால் அதற்குள்






போத்தல் குப்பி விளக்கு (பாதுகாப்பற்றது) | இரைக் குப்பி விளக்கு | ஜாம் போத்தல் விளக்கு | மின்குமிழ் விளக்கு

★ மின்சார ஒழுக்கினால் ஏற்படும் தீ விபத்துகளைத் தவிர்ப்பதற்கு மின் ஒழுக்குள்ள உபகரணங்களைப் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும். வீட்டு மின்சுற்றை காலத்துக்கு காலம் புதுப்பிக்க வேண்டும் (15 வருடத்துக்கு ஒரு முறையாகிலும்). அதிவலு மின்சாரத்தை கையாளும் போது இறப்பர் செருப்பு கையுறைகளை பயன்படுத்திவிபத்தை தவிர்க்கலாம்.

★ மின்னலினாலும் எரிகாயம் ஏற்படும். இதனைத் தவிர்க்க இடி, மின்னல் உள்ள நேரத்தில் வீட்டை விட்டு வெளியில் நடமாடுவதையும், குறிப்பாக உலோகப் பொருள்களை வைத்தி





பாதுகாப்பான மாதிரி குப்பி விளக்கு | பித்தளைக் கைவிளக்கு

ருப்பதை தவிர்க்க வேண்டும்.

### மரணம்

**தீக்காயங்களால் மரணம் சம்பவிக்கலாம். அதற்கான முக்கிய காரணம் வருமாறு:-**

எமது வெளிப்புறத் தோலானது உடலில் உள்ள பொருள்கள் வெளியேறாமலும், நுண்ணுயிர்கள் உடலினுள் செல்லாமலும் தடுத்து ஒரு பாதுகாப்புக் கவசமாகத் திகழ்கின்றது. தீக்காயங்களால் பெருமளவு தோல் அழிக்கப்படுவதால்—

(i) உடல் இழையங்களில் உள்ள திரவங்கள் எல்லாம் காயங்களின் ஊடாக கசிந்து வெளியேறுகின்றன. இதனால் குருதிச் சுற்றோட்டத்தில் உள்ள குருதியின் கனவளவு குறைந்து அதிர்ச்சி மரணம் ஏற்படுகின்றது. (HYPOVOLAEMIC SHOCK)

(ii) எரிகாயங்களினூடாக நுண்ணுயிர்கள் விரைவாகத் தொற்றி உடலினுள் ஊடுருவுகின்றன (INFECTION) ... குருதியில் நுண்ணுயிர்கள் பரவுவதால் (பக்றீரியா போன்றவை) செப்டிசீமியா

எரியும் பகுதியை வைத்தும் அணைக்கலாம்.

### முதலுதவி

**தீ விபத்தில் அகப்பட்டவருக்கு நாம் செய்யக்கூடிய முதலுதவி:-**

1. தீப்பற்றியவர் மேல் நீரை ஊற்றியோ அல்லது நீர் கிடைக்காத சந்தர்ப்பத்தில் சாக்கு அல்லது கம்பளத்தில் (ஈரமானது நல்லது) அவரை மூடி தீயை அணைக்க வேண்டும்.

2. எரிந்து கொண்டுள்ள உடைகளை மட்டும் அகற்றவும். எரிகாயத்தில் ஒட்டி உள்ள உடையின் பகுதிகளையோ, தோலையோ ஒருபோதும் அகற்ற முயற்சிக்காதீர்கள்.

3. தீ விபத்துக்கான காரணிகள் அல்லது தீ மேலும் பரவுதலை ஊக்குவிக்கும் காரணிகளை (பிரதானமாக எரிபொருளை) அவ்விடத்தில் இருந்து அகற்றி விடுங்கள்.

4. எரிந்த காயங்களைச் சுத்தமான குளிர்ந்த நீரில் சிறிது நேரம் அமுத்தி வைப்பதன் மூலம் வலியைக் குறைக்கலாம். மிகவும் குளிர்ந்த நீரை (குளிர்

சாதனப் பெட்டியில் உள்ள நீர்) உபயோகிக்கக் கூடாது. ஏனெனில் அதனால் அதிர்ச்சி மரணம் ஏற்படலாம்.

5. மிகவும் சுத்தமான அல்லது தொற்று நீக்கிய துணியால் (Sterile gauze) காயங்களை தளர்வாக மூட வேண்டும். சுத்தமான பொலித்தீனையும் இதற்குப் பாவிக்கலாம்.

6. காயப்பட்ட பகுதியை உயர்த்தி வைக்க வேண்டும்.

7. நோயாளிக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

8. நோயாளிக்கு நினைவு இருந்து — வாந்தி இல்லாது இருப்பின் — ஒரு தம்ளர் நீரில் அரைக்கரண்டி மேசை உப்பும் மிளகு அளவு அப்பச்சோடாவும் போட்டுக் கரைத்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம். கூடிய வரை — வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வரை — நீர் ஆகாரங்களையோ, திண்ம ஆகாரங்களையோ முற்றாகத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் திடீரென நினைவு இழக்கும் சந்தர்ப்பத்தில் இவை புரையேறி மரணம் சம்பவிக்கலாம்.

9. இயன்றளவு விரைவாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும்.

10. தீக்காயங்கள் உள்ள பகுதிகளில் உள்ள ஆபரணங்களை உடனடியாகக் கழற்றி விடவேண்டும். (காப்பு, மோதிரம் போன்றன).

11, காயங்களில் ஒருபோதும் தைலங்களையோ, எண்ணெய்களையோ பூச வேண்டாம்.

12. இரசாயனப் பொருள்களால் எரிகாயங்கள் ஏற்படும்போது ஓடும் நீரால் காயத்தை நீண்ட நேரம் கழுவ வேண்டும். மற்றைய படிமுறைகள் சாதாரண தீ விபத்துகளுக்கும் போன்றதே.

எல்லாத் தீக்காயங்களும் பொதுவாகவே ஆபத்தானவை.

எரிகாயங்களைப்பொறுத்தவரையில் உடனடியாக — விரைந்து — மேற்கொள்ளப்படும் அவசர மருத்துவ சிகிச்சையே நோயாளியைக் காப்பாற்றக் கூடியது.

உடலில் பத்து சத வீத தீக்காயங்களுக்கு இலக்கானாலேயே அது மிக ஆபத்தானது. 33 வீத உடற்பகுதி எரிகாயத்துக்கு இலக்கானால் மரணத்துக்கு அது வழிவகுக்கும்.

தீக்காயங்களுக்கு உள்ளானவர்கள் மயக்கமடையாமல் உணர்வுடன் இருந்தால் —

காயத்தின் எரிவு, நோ மிதமிஞ்சி இருப்பதால் — பெரிதும் அந்தரப்படுவார்; வலியினால் கத்துவார்; மனக்குழப்ப முற்றுக் கட்டுப்பாடில்லாத செயல்களைச் செய்ய முயலுவார். எனவே அவரைக் கையாள்வதில் பொறுமையும், அமைதியும், சாந்தமும் விசேட கவனமும் அவசியமானவை.

அத்துடன் கலக்கத்தைத் தவிர்க்கச் செய்து — மனோ தைரியத்தை ஊட்டி — தெளிவு பெறவைப்பது அவசியமானது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நறுவெண்பா

கடவுளை நம்பிவிட்டால் மனதிலே நிம்மதி கிட்டுகிறது. அதில் பாவம் இல்லை; சேதம் இல்லை. ஆனால் வழிபடப் போன இடத்திலே பூசையில் போட்டி வந்துவிடுகிறது.

சிறப்பு என்ற பெயரில் அளவுக்கு மிஞ்சிச் சிந்திச்சிதறும் பால், பழம், இளநீர் அது, இது என்று ஆரவாரம், அபிஷேசம்—எல்லாம் விழாக்காலங்களில் சந்தையைச் சூடாக்கி விடுகின்றன.

இதற்கிடையில் மழையும் பொய்த்து விட்டால் — வானம் வறண்டு விட்டால் — நிலைமை என்னாகும்? பொருள் பண்டங்கள் அருமையாகிவிடும். விலை குதிரைமேலே ஏறிவிடும். தாராளமாகச் செலவு செய்தாலும் ஏராளமாகப் பொருள்களைப் பெற முடியாது.

ஈண்டு — இவ்வுலகில் இருந்தபடி வானோர்க்கும் — ஆண்டவனுக்கும் செழிப்புடன் பூசனை செய்யவே இயலாது

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.**

—0078

கடவுளுக்கே இக்கதி என்றால் பூமியில் இருப்பவன் நிலைமை என்னாவது?

பூசையை நம்பி ஆண்டவன் வாழ்கிறானோ இல்லையோ, அடுத்தவன் செய்கின்ற தானத்தை நம்பி மனிதர்கள் பலர் வயிறு குளிர வாழ்கிறார்கள் என்பது மட்டும் உண்மை.

மழை தரும் செல்வத்தை வீட்டிலே பதுக்காமல்—தானம் செய்பவன் மழை இல்லாதபோது வழங்க வழியின்றித் தவிக்கானோ? இல்லறத்தான் தானத்தை நம்பித்தானே துறவறத்தான் தவம் செய்யப் புறப்படுகிறான்?

இவன் தானம் செய்யாதபோது தவம் எப்படி நிலைக்கப்போகிறது?

இந்தப் பரந்த உலகில், வியனுலகில், வானம் வழங்கத் தயங்கினால் தானமும் தவமும் நிலைக்கும்படி செய்யும் பொருளாதார வழிகள் எல்லாம் அடைபட்டுப் போகும்; பிழையான பிழைப்புகள் பிறக்கும்!

**தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்**

—0019

- அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

(04 - 10 - 1997 முதல் 10 - 10 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கே | இராசிச் சக்கரம் | | |
| வி | | | ரா |
| | வெ செ | சந் | கு புத |

மாற்றம்:

சுவாதி - துலாம், சந்திரன் மாற்றம்.

இந்திய அரசியலில் புதிய திருப்பமொன்று ஏற்படும். இலங்கையில் புதிய நெருக்கடிகள் அரசியல் ரீதியில் தோன்றலாம்.

மாணவர்களும், மக்களும் அரசுடன் முரண்படுவர். அரச அதிகாரிகளின் திட்டமிட்ட செயலில் தாமதங்கள் ஏற்படும். உலகில் கிழக்கு நாடுகளில் புதிய நெருக்கடிகள் தோன்றும். மேற்கு நாடுகளில் யுத்த மேகம் அழிவுகளைக் கொடுக்கும். மத்தியில் மழைக் காலம் — சீதோஷ்ண நிலை மாறுபாடு ஏற்படக் கூடும்.

**மேடம்:** நீங்கள் தொழிலில் கொஞ்சம் கரிசனை கொள்ளல் வேண்டும். எதற்கெடுத்தாலும் அலட்சியம், உடற்சோர்வு, மனச்சோர்வு என மாறி மாறிவரும். பொருளைப் பெரிதாக எண்ணாத நீங்கள் கொஞ்சம் பொருளிலும் அவதானம் கொள்ள வேண்டும் வீட்டில் பொருள் வேண்டும். நீங்கள் தனியான் என எண்ணக் கூடாது. உங்களைச் சுற்றி ஒரு சமுதாயமே எப்பொழுதும் உருவாகியபடிதான் இருக்கும். போராடிப் போராடிச் சேர்ப்பதை ஒரு கணப்பொழுதில் இழந்துவிடாமல் நிதானப்படுத்திக் கொள்ளவும். விரோதிகள் ஒடி ஒளிப்பர். உங்கள் காரியங்கள் கைகூடியபடி இருக்கும். அளவறிந்து செயற்பட்டுக் கொள்வதனால் நன்மையுண்டு.

**இடபம்:** அடிக்கடி கோபிக்காதீர்கள். நிர்வாக அமைப்புள்ள நீங்கள் எதிர்ப்பாலாருடன் விட்டுக்கொடுத்து நடவுங்கள். காரிய அனுகூலங்கள் ஏற்படும். உலகில் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துகின்றவர்கள்தான் நன்மை, முன்னேற்றம் அடைகின்றார்கள். குடும்பம், பிள்ளைகள், சகோதரங்களின் செலவுகளால் பதற்றநிலை உருவாகினாலும் ஓரளவு சமாளிக்க உங்களால் முடியும். வயிறு, கண்வருத்தங்கள் இருப்பவர்கள் தகுந்த வைத்தியம் செய்துவரவும். தொழில் ஸ்தானத்தில் அவதானம் தேவையாகும். மற்றவர்கள் போற்றுகிறார்கள் என்பதற்காக நீங்கள் நஷ்டப்படக் கூடாது என்பதில் கவனம் தேவையாகும். உங்களிடம் காரியம் பெறுபவர்கள் உங்களை அதிகம் போற்றுவார்கள்தான். அதற்காக ஏமாந்து விடக்கூடாது.

**மிதுனம்:** உங்களுக்கு விசுவாசம் உள்ளவர்களைத் தான்பிடிக்கும். ஆனால் உலகில் ஏமாற்றுப்பேர்வழிகளும், நன்றி மறந்தவர்களும், சுயநலக்காரர்களும்தான் அதிகம். அதுவும் இக்காலத்தில் வெளிப்படையாக நாம் பலரைக் காண்கின்றோம். செய்வதெல்லாம் செய்துவிட்டு அன்னதானமும், தூக்குக்காவடியும் எடுத்தால் பாவம் போகும் ஆயினும் நற்பலன்களை உருவாக்க முயற்சி எடுங்கள். கஷ்டம், நஷ்டம் எல்லாம் மனிதத்தின் மனோபாவத்தில் தான் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாததா? சரி, பிழை எல்லாம் தெய்வீகத்தின் சமநிலையாகும். தொழிலில் பெருந் நெருக்கடி

## மகாதேவா ஜோதிடம்

கள் தோன்றும். வீட்டில் கொஞ்சம் கொந்தளிப்பு; சமாளித்துக் கொள்ளுங்கள். தேவையற்றபிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**கன்னி:** நீங்கள் அடிக்கடி கோபித்துக் கொள்ளுகிறீர்களாம். தெய்வசக்தி புத்தியுத்திக்கு அப்பாற்பட்டது. அப்படியான கலைகளை அறிந்தவர்களை தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். நெருங்கிய உறவினர் ஒருவரால் வேதனைப்படுவீர்கள். புதிய இடம் மாற்றம், காணி, பூமி, வாகனம், தொழில்

## ஜோதிட சஞ்சீவி

எனப்பலர் பேரளித்தனமாகச் சிந்திக்கின்றார்கள். உங்கள் தொழில் ஸ்தானத்தில் இப்படிப்பட்டவர்களை இக்காலத்தில் கண்டு பொருமுவீர்கள். புத்திரபாசம் அலைச்சலைக் கொடுக்கும். அதற்காகக் கடமையை விட்டுவிடக் கூடாது. பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**கடகம்:** எந்தவிஷயத்தையும் போராடித்தான் பெற வேண்டும். அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும். அயலவர்களை நேசிக்கும்படி யேசு போதித்தார். அயலவர்கள் எமக்குத் துரோகம் செய்யும் பொழுது எப்படி நேசிப்பது என நீங்கள் கேட்கிறீர்கள். அதில் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. உலகில் இருவித மனப்போக்கைக் கண்டு கலங்காதீர்கள். அமைதி, சாந்தம், தெய்வீகம் எல்லாம் உங்களுக்குப் புதியதல்ல 'உன்னையே நீயறிவாய்!' என்ற சோக்கிரடீஸின் வசனங்களை மறந்து விடாதீர்கள். நண்டு இராசியில் நண்டுமாதிரிச் செயற்படுவதில் அனுகூலங்கள் ஏற்படும். தூரதேசச் செய்திகள் நன்மை தரும்.

**சிங்கம்:** ஏன் அடிக்கடி குறுகுறுக்கின்றீர்கள். உலகமென்றால் பலதும் பத்தும் தான். புத்திரர்களைப் பற்றி அதிகம் யோசிப்பீர்கள். யோசிக்கத்தான் வேண்டும்.

ஸ்தானத்தில் நன்மைகள் என்பன சர்வசாதாரணமாகும். பிரயாணங்களால் இழப்புக்கள் ஏற்படும். எனவே அவதானமாக இருக்கவும் அடிக்கடி 7 இல் சனீஸ்வரன் இருப்பதனால் சலனம் ஏற்படும். மனைவிக்கு அல்லது எதிர்ப்பாலாருக்கு உடல்நிலையில் பாதிப்பு ஏற்படும்.


**துலாம்:** எப்படியாவது வாழலாம் எனச்சிந்திக்கின்றீர்களா? உலக இன்பங்களை அனுபவிக்கத் துடிக்கும் நீங்கள் கஷ்ட, நஷ்டங்களையும் ஏற்றுத் தாங்கி அனுபவப்பட்டுப் பழகி வர வேண்டும். உலக கஷ்டங்கள் உங்களுக்கு வரும் அனுபவச் சொத்தாகும். அனுபவங்களை எவரும் ஏட்டிலோ, காசு கொடுத்தோ மட்டும் பெற முடியாது. தொழில் ஸ்தானத்தில் புதிய அனுபவங்கள் வரச் செய்யும். காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்ளுங்கள். நண்பர்களையும், அயலவர்களையும் நம்பி எக்காரியங்களையும் செய்து நஷ்டப்படாதீர்கள்.

**விருச்சிகம்:** என்ன வெறுப்பு? சாத்திரத்திலா, சாமியிலா? நீங்கள் செய்த வினைப் பலன் நீங்கள் அனுபவிக்கும் பொழுது அவர்கள் என்ன செய்வது? உங்கள் விருப்பம் போல [illegible] பங்காவது நன்மை தராது

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 18



சொற்சிலம்பம் இல. 18
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 10 - 10 - 1997**

### இடமிருந்து வலம்

1. ஆராய்தல். 4. அபற்சியால் வருவது. 7. குருவி நடப்பது இப்படி. 9. வலிமை. 10. விதிக்கப்பட்டது. 11. பொம்மை. 13. ரசிகனின் பண்பு. 15. விடாய். 17. பெற்றவள். 18. காடு. 19. உலோகம். 22. தேவலோகம். 23. அனேகம். 24. பூரணையின் பின் சந்திரன் இப்படியாகும். 25. மகள்.

### மேலிருந்து கீழ்

1. சகாயம். 2. சோதிடம். 3. வாழ். 5. மறைவில் தீட்டப்படுவது. 6. பொருள்களின் மூன்று நிலைகளில் ஒன்று. 8. செய்தி கொண்டு செல்வது. 11. குடா நாட்டின் கற்பகதரு 12. விளையாடுவது இங்கே. 14. இப்போது யாவரும் வேண்டுவது. 16. ஆங்கிலத்தில் அழைப்பு. 17. இது ஒய்வதில்லை. 18. வயலுக்குக் கட்டுவது. 20. அதிக. 21. பூ மரத்தின் பெயர். ஜனாதிபதி வசிப்பதும் இந்த மாளிகையில்தான். 22. இது மூன்று நிலைகளில் மற்றொன்று. 23. தலைவன்.

## சொற்சிலம்பம் இல. 16 - விடைகள்

### இடமிருந்து வலம்

1. ஊதல். 3. காமாட்சி. 6. சிரி. 7. காதல். 8. சுபாவம். 10. ஆமை. 12. தடி. 13. பழி. 14. வதம். 16. வாது. 18. மாணிக்கம். 20. மாணவன். 22. கம்பி. 23. மாளிகை. 24. தோல்.

### மேலிருந்து கீழ்

1. ஊசி. 2. தரிசு. 3. காதம். 4. மால். 5. சிறுமை. 7. காவடி. 9. பாதம். 10. ஆழி. 11. சிவ. 13. பதுக்கல். 15. தண்ணளி. 16. வாணி. 17. அம்பிகை. 18. மான் 19. கம். 20. மாமா. 21. வகை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு :- கு. புண்ணியமூர்த்தி,
வாதரவத்தை,
புத்தூர்.

★ இரண்டாம் பரிசு :- செல்வி மிதிலா தவராசா,
63/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
அரியாலை.

★ மூன்றாம் பரிசு :- செல்வி நி. கவிதா,
யாழ். பல்கலைக்கழகம், (முதலாம் வருடம்)
ஒளாக வீதி, திருநெல்வேலி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 17 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோபாட் செல்லப்பிராணிகள்

மரப் பொம்மைகள் வைத்து விளையாடிய காலம்போய் பிளாஸ்டிக் பொம்மைகள் வந்தன. இதைத் தொடர்ந்து சாவி கொடுத்தால் இயங்கும் பொம்மைகளும் 'ரிமோட் கொண்ட்ரோல்' மூலம் இயக்கப்படும் பொம்மைகளும் குழந்தைகளை மகிழ்வித்து வந்தன. அத்தகைய ஒரு விளையாட்டு பொம்மைதான் 'ரோபாடிக்பெட்'. இதை ஜப்பான் நாட்டின் சோனி கார்ப்பரேஷன் நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த 'ரோபாட்' செல்லப் பிராணி, நாம் பந்தை எறிந்தால், பாய்ந்து கவ்வும்; எட்டி உதைத்து விளையாடும்; நடனமாடி குழந்தைகளைச் சிரிக்கவைக்கும்; நாம் நடந்தால் நம்முடனே கூடவே துணைக்கு நடந்து வரும்.

சோனி நிறுவனத்தில் புதிதாக 'டி — 21' என்னும் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. ரோபாட்டுகளை வாடிக்கையாளர்கள் தேவைக்கேற்ப — அவர்கள் விரும்பும் விதத்தில் — வடிவமைத்துத் தருவது இதன் பிரத்தியேகப் பணியாகும்.



இனி ஜப்பான் குழந்தைகள் தங்கள் செல்லப் பிராணிகள் பட்டியலில் 'ரோபாடிக் பெட்' களையும் சேர்த்துக் கொள்வார்கள்.


# இளவரசி டயானா மறைவின் பின்னர்

இளவரசி டயானாவின் மறைவு பிரிட்டன் மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. பிரிட்டன் மக்கள் பெரும் சோகத்தில் ஆழ்ந்திருப்பதால் அந்நாட்டுப் பொருளாதாரத்தில் சற்று வீழ்ச்சி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக உதட்டுச்சாயம், நகப்பூச்சு உட்பட சில ஆடம்பரப் பொருள்களின் சில்லறை விற்பனை வெகுவாக பாதிக்கப்படுமாம். அதாவது இருபது கோடி பவுண்ட் குறையலாம் என்று அந்நாட்டு பொருளாதார ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. டயானா காலமான வாரத்தில் பூக்களின் விற்பனை மட்டும் பெருமளவு அதிகரித்தது. அந்த வாரத்தில் மக்களின் அன்றாட வாழ்வுஸ்தம்பித்துப்போனது.

இளவரசியின் சடலம் பாரிஸிலிருந்து லண்டனுக்குக் கொண்டுவரப்பட்ட போது நகரின் மின்சார உபயோகம் 1300 மெகாவாட் குறைந்தது; ஹோட்டல்களில் கூட்டம் வெகுவாகக் குறைந்து போயிற்று. லண்டனில் ஒரு கோடி பவுண்டாக இருந்த பூக்கள் விற்பனை டயானாவின் மறைவிற்குப் பிறகு மூன்று கோடி உயர்ந்தது. மொராக்கோ, கென்யா, இஸ்ரேல், தென் ஆபிரிக்கா ஆகியநாடுகளிலிருந்து பூக்கள் வரவழைக்கப்பட்டன. டயானாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் வாங்கிய பூக்கொத்துக்களின் எண்ணிக்கை மட்டும் 30 லட்சம்.

டயானாவின் இறுதி ஊர்வலத்தன்றும் பிரிட்டனில் மின்சார உபயோகம் வெகுவாகக் குறைந்தது. பெரும்பாலான மக்கள் மற்ற வேலைகளை நிறுத்தி விட்டு வீடுகளில் விளக்குகளையெல்லாம் அணைத்து விட்டு டி.வி.யின் முன் அமர்ந்து விட்டதே இதற்குக் காரணம் என்கிறார்கள். ★




திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகர் ஸி. என். அண்ணாத்துரை. அவரின் மறைவுக்குப் பின்னர் தி. மு. க. பல கட்சிகளாக உடைந்து விட்டமை தமிழக அரசியல் சரித்திரம். அண்மையில் அண்ணாவின் நினைவு தினத்தை ஒட்டி அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவிக்கும் ஆர்ப்பாட்ட நிகழ்வுகளில் இந்த உதிரிக் கட்சிகள் அனைத்தும் பங்குபற்றின. அதனை ஒட்டி வெளியான கேலிச் சித்திரம் இது.

# கைதிகள் நிரம்பி வழியும் பாகிஸ்தான் சிறைகள்!

பாகிஸ்தானிலுள்ள சிறைச்சாலைகள் குற்றவாளிகளால் நிரம்பி வழிகின்றன.

பாகிஸ்தானின் மிகப் பெரிய மாகாணமான பஞ்சாபிலுள்ள சிறைச்சாலையில் 17 ஆயிரம் கைதிகளை மட்டுமே சிறை வைக்க முடியும். ஆனால் இங்கு இருக்கும் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை 51 ஆயிரம். இதனால் சிறையில் படுக்கக்கூட இடம் இல்லை. எனவே கைதிகள் 'ஷிப்ட்' முறையில்தான் தூங்குகிறார்கள்.

அந்நாட்டின் சட்டப்படி சிறைக்கைதி ஒவ்வொருவருக்கும் தினப்படி செலவுகளுக்காக ரூ. 10 மட்டுமே வழங்கப்படுகிறது. என்றாலும் இந்தத்தொகை கூட அவர்களுக்குச் செலவழிக்கப்படுவதில்லை. பாகிஸ்தான் சிறைகளில் கைதிகள் மிகவும் கொடுமைப்படுத்தப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழு கூறுகிறது. ★

# துணைக்கு குவியல்

☐ தாய்லாந்தின் ஆசிரியர்கள் இனிமேல் பாடசாலைகளில் புகைப்பிடிக்க முடியாது.

மாணவர்களுக்கு முன்மாதிரியாக ஆசிரியர்கள் திகழ வேண்டும் என்பதற்காகவே இப்படியொரு கட்டுப்பாடு என்கின்றது அந்த நாட்டு அரசு.

இந்த விதிமுறையை மீறும் பாடசாலை ஆசிரியர்களுக்குத் தண்டனையும் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

என்ன தண்டனை என்பது இன்னமும் முடிவாகவில்லை.

★ ★ ★

☐ சென்னை மாநகராட்சி பள்ளி சத்துணவுக் கூடத்தில் கடந்த 19 ஆம்திகதி கொதிக்கும் சாம்பார் அண்டாவில் விழுந்து ஏழு வயது பள்ளிச் சிறுமி உயிரிழந்தாள்.

மயிலாப்பூர் வீர பெருமாள் கோயில் தெருவில் உள்ள பள்ளியில் இரண்டாம் வகுப்புப் படித்து வந்த பார்வதி என்ற இந்தச் சிறுமி, மதிய உணவு பெறுவதற்காக சத்துணவுக் கூடத்தில் வரிசையில் நின்று கொண்டிருந்தாள். அப்போது மாணவரிடையே ஏற்பட்ட தள்ளுப்பாட்டில் நிலை தடுமாறி பார்வதி கொதிக்கும் சாம்பார் அண்டாவில் விழுந்தாள்.

உடல் வெந்த நிலையில் ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவள் 23 ஆம் திகதி அதிகாலை உயிரிழந்தார்.

★ ★ ★

☐ 'திருமண வாழ்வுதீராத தொல்லை' என்று சொல்லும் சம்சாரிகள் பலர் இருக்கின்றார்கள்.

ஆனால் அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு திருமணமும் ஒரு மருந்து என்கின்றது புதிய ஆய்வு ஒன்று.

பிட்ஸ்பேர்க் பல்கலைக்கழகம் 120 பேர்களில் செய்த ஆய்வுகளில் — தமது துணைவியருடன் மகிழ்ந்திருப்போரின் இரத்த அழுத்தம் கணிசமான அளவு குறைவது — கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரத்த அழுத்தம் குறைவதால் இருதய நோய்கள், பாரிசவாதம் போன்றவை தவிர்க்கப்படுகின்றன. திருமணமானவர்கள் நீண்ட காலம் வாழ்வதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

★ ★ ★

☐ இது வரை காலமும் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனின் காதல் விவகாரங்களை அம்பலப்படுத்தி வந்த அமெரிக்கப் பத்திரிகைகள் இப்போது கிளின்டனின்மகள் செல்சியாவின் காதல் விவகாரங்கள் பற்றிய செய்திகளை வெளியிடத் தொடங்கி உள்ளன.

ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தில் பயிலும் செல்சியா தனது ஆண்நண்பர் ஒருவரை பூங்கா ஒன்றில் சந்தோஷமாக சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த புகைப் படத்தை அமெரிக்கப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்துள்ளன.

தாம் வெறும் நண்பர்களே என்கின்றனர் செல்சியாவும் அந்த இளைஞரும். ஆனால் அமெரிக்கப் பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் அதை நம்பத் தயாரில்லை.

★ ★ ★

☐ இந்தியாவின் தேசபிதா மகாத்மாகாந்தி. பம்பாயில் (இப்போது மும்பாய்) அவரின் பெயரில் முக்கிய வீதி ஒன்று உள்ளது. அந்தப்பெயரை மாற்றும் படி அப்பிரதேச மக்கள் நூதன போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார்கள். தேசபிதாமீது அவர்களுக்கு அவ்வளவு வெறுப்பா? இல்லை; இல்லை.

மது ஒழிப்புக்காகப் பாடுபட்டவர் மகாத்மா காந்தி. அவரின் பெயரில் உள்ள வீதியில் வாசலுக்கு வாசல் 'பியர் — பார்' இருந்தால் மக்கள் பொறுத்துக் கொள்வார்களா?

கொதித்து எழுந்து விட்டனர். ''இந்த வீதிக்கு தேசபிதாவின் பெயர் இருப்பது அவருக்கு நாம்செய்யும்துரோகம். எனவே அவ் வீதியின் பெயரை 'பியர் பார் வீதி' என்று மாற்றுங்கள்'' — என்று கோரிவருகின்றனர் மும்பை மக்கள்.

# பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

# அன்னை திரேஸா பத்திரமாக தன்னுடன் எடுத்து சென்ற பை

தாய்மையின் சின்னம் அன்னை தெரேஸா.

வறிய—ஏழை— குழந்தைகளின் பால் அவர் கொண்ட கருணை, தியாகசீலம், சேவை மனப்பான்மை என்பவற்றைப் புரிய வைப்பதற்கு இந்த உண்மைச் சம்பவம் நல்லதோர் உதாரணமாகும்.

சென்னைப் பல்கலைக்கழக விழா ஒன்றுக்காக 1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சென்னை சென்றிருந்தார் அன்னை தெரேஸா. அந்த விழாவுக்கு முன்பு பலகாரமும், தேநீரும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனாலும் அதைச் சாப்பிட மறுத்து விட்டார் அன்னை தெரேஸா.

அனைவரும் தேநீர் அருந்தி முடிந்ததும் அன்னையை அழைத்துக்கொண்டு வெளியேற முயன்றபோது யாருமே எதிர்பார்க்காத விதமாக 'சர... சர' வென அந்த அறையிலிருந்த — பாதி சுவைத்து வைக்கப்பட்ட— எச்சில் பலகாரங்கள் கொண்ட அந்தத் தட்டுக்களை எடுக்கத் துவங்கியிருக்கிறார். மற்றவர்கள் பதறிப்



அந்தப் பையுடன் அன்னை

போய் குறுக்கே வர... '' ஏன் தடுக்கிறீங்க? நகருங்க'' என்றபடி சேகரித்த பலகாரங்களைத் தன் கையிலிருந்த 'பை' ஒன்றுக்குள் போட்டுக் கொண்டபடியே மெள்ள சொன்னாராம் — ''இங்கே பாதி வெச்ச பலகாரங்களின் வாசனைகூட அறியாத குழந்தைங்க கல்கத்தாவில் நிறைய இருக்காங்க. இது அவங்களுக்குப் பயன்படும்'' என்று அன்னை சொல்லிய போது சாட்டையால் அடிபட்ட மாதிரிப் பொறி கலங்கிப் போயிருக்கிறார்கள் சுற்றி இருந்தவர்கள்.

''இங்க மட்டுமில்லே! விமானத்துல போறபோது மிஞ்சுகிற பொருகள்ளைக் கூட நான் இந்தச் சின்னப் பையிலே சேகரிச்சு எடுத்திட்டுப் போவேன்'' என்று அன்னை கூறியபோது நெஞ்சுருகிப் போனார்கள் மற்றவர்கள். அந்தப் பையைக் கடைசி வரை யாரிடமும் தராமல் தன் மடியிலேயே வைத்திருந்து பாதுகாப்பாக எடுத்துச் சென்றாராம் தெரேஸா. ★

# மாயாவதி அறிவிப்பு மயம்!

இந்தியாவின் பெரிய மாநிலம் உத்தரப் பிரதேசம். அங்கு மாநில அரசியலில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக — தேர்தலில் எதிரும் புதிருமாக இருந்த இரு கட்சிகள் — ஒன்று சேர்ந்து ஆட்சி அமைத்தன.

பகுஜன் சமாஜக் கட்சியும், பாரதீய ஜனதாக் கட்சியுமே அவை இரண்டும். ஆறுமாதம் ஒரு கட்சியின் பிரதிநிதி முதல்வர் என்றால் அடுத்த ஆறுமாதம் மற்றைய கட்சியின் பிரதிநிதி முதல்வர் — என்றஅடிப்படையில்தான் [illegible]. பகுஜன் சமாஜக் கட்சியின் — தாழ்த்தப்பட்ட சமூகப் பிரதிநிதியான — மாயாவதி என்ற 38 வயதுப் பெண்ணே முதல் ஆறுமாத காலம் முதல்வர் பதவியை வகித்து விட்டு பதவியிறங்கியிருக்கின்றார், பாரதீய ஜனதாக்கட்சியின் பிரதிநிதி கல்யாண்சிங் அடுத்த ஆறுமாதகால முதல்வர் பதவியை ஏற்றிருக்கின்றார்.

மாயாவதி தனது ஆறு மாதகால ஆட்சியின் முதல் ஐந்தரை மாதகால ஆட்சியில் செய்த அதிரடி நடவடிக்கைகள் இவை:-

163 நாள்களில் 256 சலுகை அறிவிப்புகள்; ஐந்நூற்று ஐம்பது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு இங்குமங்குமாக அலைச்சல் இடமாற்றங்கள், இது பேதாதென்று பதவிக்காலம் முடியும் தறுவாயில் தான் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இடங்களில் இருந்தவாறு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய இடமாற்றப் பட்டியலை வெளியிட்டு நியமனத் துறையை திணறடிப்பு; ஆறு மாதத்துக்குள் புதிதாக 12 மாவட்டங்களுக்கு அறிவிப்பு.

— இவ்வாறு மாயாவதியின் அறிவிப்புக்களினால் அம் மாநில கஜானா ஏறத்தாழ முற்றாக வறட்சி அடைந்து விட்டதாகக் கூறுகின்றார்கள் அம்மாநில நிர்வாக அதிகாரிகள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சங்கிலியன் திருத்தசாங்கம்

தசாங்கம் என்பது ஒரு பிரபந்தவகை. மன்னர்களின் பெயர், நாடு, நகர் முதலிய பத்து அங்கங்களையும் நேரிசை வெண்பாக்களில்பாடுவது. புலவன் கிளியையோ, வண்டையோ, குயிலையோ வினாவ அது விடையளிக்கும் விதத்தில் அமைவது.

தமிழிலக்கிய ஆதி வடிவங்களில் தசாங்கமும் ஒன்று. பல்லவர் காலத்தில் இறைவனைப் பாடவும் இதனைப் பயன்படுத்தினர்.

கவிஞர் வைரமுத்து அண்ணாத்துரையைப் பாடியதும் இந்த வடிவத்தில்தான்.

நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட தமிழ் மன்னன் சங்கிலியனை பாட்டுடைத் தலைவனாக வைத்து திருத்தசாங்கம் படைக்கின்றார் இந்த இளம் கவிஞர்.

### பெயர்

கங்குலிலே கூவும் கருங்குயிலே முள்வேலிச்
சங்கிலிக்குள் நிற்பவனார் சாற்றுகநீ — சங்கிலியாம்
சீறிவந்த அந்நியரைச் சேறாக்கிப் போர்க்களத்தில்
நீறான யாழ்மண் நெருப்பு.

### நாட்டுச் சிறப்பு

பாட்டுக் குயிலேநீ பாடிடுக மன்னவனின்
நாட்டுச் சிறப்பதனை நாவாலே — வேட்டுழுது
ரத்தமழை கொட்டியின்று ராவயலிற் சாவினையும்
சித்திரமே நாட்டுச் சிறப்பு.

### நகர்

சீர்சொன்ன அன்புச் செழுங்குயிலே மன்னனுடை
ஊரென்ன கொஞ்சம் உரைப்பாய் — சூரனவன்
பல்லுடைத்த வேலன் பரிபாலித் துள்ளவிந்த
நல்லூர் அவனின் நகர்.

### நதி

காடெல்லாம் வாழும் கருங்குயிலே உம்மன்னன்
நாட்டிலின்று பாயும் நதியென்ன — ஏட்டில்
சொன்னால் நனையும் சுடுகண்ணீர் தானெங்கள்
நன்னாட்டில் பாயும் நதி.

### மலை

சின்னக் குயிலே சிறப்பாக நீயுரைத்த
மன்னவனின் நாட்டு மலையென்ன — மண்ணை
விலைக்குத் தரச்சொல்லி வேண்டிவந்த கூற்றைக்
குலைத்த உரத்தோனே குன்று.

### ஊர்தி

கார்வண்ணப் பூங்குயிலே காதுபடக் கூறவனின்
ஊர்தி எதுவென்ற உண்மையினை — மார்தட்டி
பீரங்கி முன்னாலும் பின்வாங்கா நெஞ்சுரமே
ஊர்தி எனநீ உணர்.

### படை

இன்பக் குயிலமுதே இங்குரைத்த சங்கிலியின்
அன்புப் படையை அறிவிநீ — கன்னமிட
தெம்புகொண்டு வந்தோர் தெறித்தோடச் செய்யுமவன்
தம்பிப் படையொன்று தான்.

### மாலை

கூவும் குயிலேநீ கூறு குதிரையிலே
தாவியுள்ள வேந்தனவன் தாரென்ன — சாவு
வருமென்ற போதும் வளையாத மானச்
செருக்கவனின் மாலையெனச் செப்பு.

### கொடி

என்றன் குயிலே எதிர்த்தவனின் மானத்தைக்
குன்றவைத்த வேந்தின் கொடியென்ன — சென்னை
இலங்கை முழுதிலுமே இன்றும் பறக்கும்
கலங்காப் புகழ்க்கொடியே காண்.

### முரசு

மெத்தென்ற பூங்குயிலே மெய்யாக மன்னவனின்
சத்த முரசென்ன சாற்றிடுக — புத்தொளியை
ஆவலுடன் செட்டை அடித்து வரவேற்கும்
சேவல் ஒலிமுரசே செப்பு.

—ச. முகுந்தன்—

# சத்தியம் போற்றினால் மற்றவை கிடைக்கும்

சத்பவிரதன் என்று ஓர் அரசன் தன் பெயருக்கு ஏற்ப உண்மையைத் தனது வாழ்க்கைக்கு ஆதார சக்தியாகக் கொண்டு வாழ்ந்து வந்தான். அதனால் அவனுக்குக் கீர்த்தி கிட்டிற்று; புகழ் பரவிற்று. அவன் நாட்டில் செல்வம் பெருகிற்று.

ஆண்டவன் அரசனைச் சோதிக்க எண்ணினான். நல்லவர்களுக்குத்தானே சோதனை வரும்? தங்கம் தானே புடம் போடப்படுகின்றது?

ஒரு நாள்—பிரம்ம முகூர்த்தத்திலே—பொழுது புலராத விடியற் காலையில்—சத்திய விரதன் தனது கோட்டையின் சிம்மவாயில் வழியாக கடலில் நீராடிவிட்டு வரப் புறப்பட்டான். அன்று புண்ணிய தினமாக இருந்ததால் நடந்தே போய் விட்டுத் திரும்பி பூஜையில் ஈடுபட அவன் தீர்மானித்தான்!

அவன் கோட்டை வாயிலை அடைந்தபோது அங்கு அழகான ஓர் இளம் பெண் காத்திருந்தாள். அவளுடைய தலையைச் சுற்றி ஒளிக்கற்றை ஒன்று சூழ்ந்திருந்தது. அவள் முகத்தில் அசாதாரண ஒளி வீசிற்று. அவள் அரசனைப் பார்த்து, ''அரசே! ஒரு வேண்டுகோள் நிறைவேற்றுவீர்களா?'' என்று கேட்டாள்.

''எது கேட்டாலும் தருவேன். விரும்பியதைக் கேள்'' —என்றான் ஈகையில் சிறந்த மன்னன்.

அந்த அழகிய பெண் பதில் சொன்னாள். ''நான் தான் செல்வத்துக்கு அதிபதியான தேவதை, வெகு காலம் நான் இங்கேயே தங்கிவிட்டேன். கொஞ்சக் காலம் விலகிப் போய் இருக்க விரும்புகிறேன். அனுமதி தருவாயா?''—என்றாள்.

சத்ய விரதன் பணிவுடன் தலை வணங்கி 'தாயே! அது உனக்குவிருப்பமானால் நான் தடுக்கமாட்டேன்' என்று கூறி போக அனுமதி தந்தான்.

தொடர்ந்து அவன் முன்னேற வாயிலில் ஒரு கம்பீரமான ஆண் உருவம் வந்து நின்றது. அதன் முகத்திலும் உடலிலும் அபூர்வமான சாந்தி மின்னிற்று.

மன்னனைக் கண்டதும் அந்த உருவம் கைகுவித்து வணங்கியது. ''அரசே! ஒரு வேண்டுகோள். என்னையும் போக அனுமதிக்க வேண்டும்'' — என்று அந்த உருவம் கேட்டது.

''தாங்கள் யார்? எதற்காகப் போக விரும்புகின்றீர்கள்?'' — என்று மன்னவன் கேட்டான். ''அரசே நான் தான் ஈகைக்குரிய தெய்வம். செல்வம் இருந்தால்தான் ஈகையும் சாத்தியம். தாங்கள் செல்வத்தைப் போக அனுமதித்து விட்டீர்கள். இனி நான் இங்கிருப்பதில் பயனில்லை. என்னையும் போகவிடுங்கள்'' — என்றது அந்த உருவம்.

சத்யவிரதன் விலகி போவதற்கு வழிவிட்டான்.

மறுபடியும் அவன் கிளம்பு முன் ஓர் அழகிய நங்கை பல்வேறு ஆபரணங்களையும் அணிந்து, விலையுயர்ந்த உடை உடுத்தி அங்கே வந்து நின்றாள்.

சத்யவிரதன் அவளைப் பார்த்து ''நீ யாரம்மா? நீயும் போகவிரும்புகின்றாயா?'' — என்று கேட்டான்.

''ஆம் அரசே நான் தான் சௌபாக்கியம் நன்றாக வாழ்ந்தால் எல்லா வசதிகளையும் கொடுப்பேன். செல்வம் இருந்தால்தான் அவற்றைப் பெற முடியும். இல்லாதவர்கள் கேட்டுப் பெற ஈகை வழி செய்யும். இரண்டுமே இல்லாத நிலையில் நான் இருந்து என்ன பிரயோசனம்? அதனால் என்னையும் போக அனுமதியுங்கள்.'' — என்றாள் அந்த நங்கை.

''அம்மணி! அதுவே உன் விருப்பமானால் நான்



தடுக்க மாட்டேன். தாராளமாகப் போய் வரலாம்.''— என்று அனுப்பி வைத்தான் சத்யவிரதன்.

அரசன் மீண்டும் புறப்படக் கிளம்பினான்.

அப்போது அமைதியான தோற்றமும், ஒளி வீசும் பார்வையும், அனுபவத்தால் மெருகேறிய வதனமும் உடைய ஒரு பெண் வழி மறித்தாள்.

''தாங்கள் யாரோ? தங்களுக்கு என்ன வேண்டும்?''— என்று வினவினான் சத்ய விரதன்,

''என்னைத் தெரியவில்லையா அப்பா உனக்கு? நான் எப்போதும் உன்னுடன் இருப்பவளாயிற்றே? நான் தான் சத்ய தேவதை. உன்னுடன் இதுவரை இருந்த மூவருக்குப் போக அமைதி அளித்துவிட்டாய். எனக்கும் போக விடை கொடுப்பாயா?'' என்று கேட்டாள்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

விடாது. அடிக்கடி மனம் சலிக்காது பொறுமையாகக் குடும்பத்தவர்களுக்கு உதவுங்கள். அவர்கள் யாரை நம்பி இருக்கிறார்கள்? தேவையற்ற கற்பனை.வெளிநாடு,புதியசெய்திகள் என அதிகம் யோசிக்க வேண்டாம். புத்திரர் அல்லது சகோதரங்களுக்காக ஓடியாடித் திரிவதனால் நன்மைகள் ஏற்படும்.

**தனுசு:** நியாயம் நீதிக்கு கட்டுப்பட்ட நீங்கள் அதிகம் யோசிக்கக் கூடாது. கடமையில் கண்ணாக இருங்கள். பலன் தானாக வரும். வெளிநாடு வெளிநாடு என எல்லோரும் போகிறார்களே எனச்சிந்தியாதீர்கள். வெளிநாட்டில் றோட்டில் தங்கம் கொட்டியா கிடக்கிறது? போகிறவர்கள் என்ன கஷ்டப்படுகிறார்கள் எப்படி, வாழ்கிறார்கள் என்பதை போய் வந்தவர்களிடம் கேட்டுப் பாருங்கள். தந்தை வழி எதிர்த்தாலும், தாய் வழி உதவி உண்டு. மனைவி உங்களுக்கு மந்திரிதானே? ஆலோசனைப் படி நடவுங்கள். நற்பலன் கிடைக்கும். உங்கள் குடும்பத்தில் எதிர்ப் பாலாரால் நல்ல ஆலோசனைகள், உதவிகள் உங்களுக்குக் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் அதிக நற்பலன்களை எதிர்பார்க்க முடியாது.

**மகரம்:** நீங்கள் உழைப்பாளியாயிற்றே. ஏன்? தயக்கம்? தெய்வத்தால் ஆகாது எனினும் மெய் வருந்தக் கூலி கிடைக்குமாமே! விடாது முயற்சி செய்தபடியே இருங்கள். தொழில் ஸ்தானத்தில் சோதனைகள் ஏற்படும். உங்களை நாடி வந்தவர்களே உங்கள் காது கேட்கத் தூற்றுவார்கள், அயலவரை நம்பாதீர்கள். இட மாற்றம் தூர தேசமோ கிட்டிய இடங்களுக்கோ போவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். எதிர்ப்பாலாருடன் கொஞ்சம் நிதானமாக நடவுங்கள். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதால்குறைவு ஏற்படாது. இடமாற்றம் நல்லதல்ல. உடல் நிலையைக் கவனிக்கவும்.

**கும்பம்:** உங்களுக்குக் குடும்பத்தில் எட்டிக்குப் போட்டியான கருத்துக்கள் ஏற்படும். கொஞ்சம் நிதானமாகப் பொறுமையாக இருத்தல் வேண்டும். பொருள் செலவு அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் வெட்டு ஒன்று துண்டு ஒன்றாக இருக்க முற்படுவீர்கள். அபிப்பிராய பேதமும், சகோதரங்களின் செய்திகளும் மாறி மாறி வர இடம் உண்டு. எக்காரியங்களிலும்பிணைநிற்கவேண்டாம். இடமாற்றங்கள் ஏற்பட யோசனைகள் வரும். புதிய திட்டம் குடும்பப்பேச்சுக்கள் மெல்ல மெல்ல வர இடம் உண்டு. சனீஸ்வரனுக்கு தவறாது பிரீதி செய்யவும்.

**மீனம்:** நீங்கள் 7 ஆம் திகதி மட்டும் கவனமாக இருக்கவும். சகோதரங்கள் அபிப்பிராய பேதம் அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் பொருள் கஷ்டங்கள் கொடுக்கும். உங்கள்பிடிவாதம்,மறதியால்அடிக்கடி இழப்புக்கள் ஏற்படச் செய்யும். கை கால் தாக்கம், நெஞ்சில்வலி,பொருளால் யோசனை என்பன ஏற்படச் செய்யும். 'ஊக்கமது கைவிடேல்'. வயிற்றில் நோ வரின் கட்டாயம் காட்டி வைத்தியம் செய்யவும். ஏழரைச் சனி தாக்கம் உண்டு. அதற்காக ஓடி ஒளிக்க முடியாது.எதையும் எதிர்த்து நின்று தாங்கி கஷ்ட துக்க நிலையைத் தாண்டிவரமுயலுங்கள்.தெய்வ வழிபாடு, சனீஸ்வரன் பிரீதி முக்கியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனீஸ்வரனின் வாகனம் காகம் அது கற்றுத் தருகின்ற பாடம்!

**இன்று புரட்டாதி மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமை. சனீஸ்வரனின் வாகனமாகிய காகத்தின் சிறப்புக் குறித்து ஆறு. திருமுருகன் வரைந்த இச்சிறப்புக் கட்டுரை புரட்டாதிச் சனியை ஒட்டி இங்கு பிரசுரமாகின்றது.**

புரட்டாதி மாதத்தில் இந்துக்கள் புனித விரதம் அனுட்டித்து சனிக்கிழமை தோறும் காகத்தை அழைத்து, வணங்கி, உணவு படைப்பது வழமை.

நவக்கிரகங்களில் ஒன்றாகிய சனி பகவான் தரும் துன்பங்களில் இருந்து நாம் தப்பி நிம்மதியாக வாழ்வதற்கு நல்லெண்ணெய் விளக்கேற்றி நலம் அருள்வாய் என வேண்டுவது இயற்கை.

சனிபகவானது வாகனமெனக் கூறும் பறவையாகிய காகத்தின் பெருந்தன்மையினை இந்துக்கள் என்றோ உணர்ந்தே, விரத அனுட்டானங்களின் போதெல்லாம் காகத்தை அழைத்து உணவு படைப்பது வழமை. காகம் படையலை உண்டு தன் பாஷையில் வழங்கும் வாழ்த்தைப் பெற்று விரதத்தை நிறைவு செய்வார்கள் இந்துக்கள்.

எண்ணற்ற ஜீவராசிகள் நிறைந்திருக்கும் இப்பிரபஞ்சத்தில் தானே மகத்தானவன் எனச் சொல்லிக் கொள்கிறான் மனிதன்.

ஆனால் மெய்ஞ்ஞான நெறி உணர்ந்த முன்னோர்கள் சாதாரண பறவையாகிய காகத்திடமே நாம் கற்க வேண்டியவை நிறையவுண்டு எனச் சொல்லியுள்ளார்கள்.

''காலை எழுந்திருத்தல், காணாமலே புணர்தல்
மாலை குளித்து மனை புகுதல்—சால
உற்றாரோடு உண்ணல், உரையாடல் இவ்வாறும்
கற்றாயோ காக்கைக் குணம்?''

என்ற பாடல் அடிகள் ஊடாகக் காகத்திடம் மனிதர்கள் கற்க வேண்டிய உயர்ந்த பண்பாட்டைப் பாருங்கள். அதிகாலையிலேயே காகம் நித்திரையால் எழுந்திடுமாம்; காகம் புணரும் காட்சியை யாரும் காண முடியாதவாறு —நாகரிகமாக—காணாமலே புணர்தல்; தினமும் சாகம் தன் உணவுக்காக அலைந்து தேடி உண்டு விட்டு தன் இருப்பிடம் போகும்போது ஆற்றிலோ, குளத்திலோ தண்ணீர் ஊற்றிலோ குளித்து தூய்மையாகச் செல்லுமாம்; காகம் பிறர் வீட்டில் தங்காது. எப்போதும் தனக்குரிய இடத்தை நாடி—அயலிடைப் புகாது— தன் மனையிடைப் புகும் வழமையுடையதாம்.

தான் உண்ணுகின்ற உணவை தனியே உண்ணாது, உற்றாரோடு உண்டு, உறவாடி மகிழ்கின்ற இத்தகைய பெரும் தன்மைகளைக் காக்கையிடம் ஆறறிவு படைத்த மனிதன் கற்க வேண்டும் என ஆன்றோர்கள் எவ்வளவு அழகாகச் சொல்லியுள்ளார்கள்? காகத்தின் உயர்ந்த குணங்களை வாழ்நாளில் மனிதன் கண்டு போற்றிப் பின்பற்ற வேண்டும் என்பதை தமிழ் ஆகமமாகிய திருமந்திரத்தில் திருமூலர் மிகச் சிறப்பாக விளக்குகிறார் —

ஆர்க்கும் இடுமின்; அவர் இவர் என்னன்மின்;
பார்த்திருந்து உண்மின்; பழம் பொருள் போற்றன்மின்;
வேட்கை உடையீர்! விரைந்து ஒல்லை உண்ணன்மின்;
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே,

— என்று. இப்பாடலின் அரிய பல பொருளை விரித்து நோக்கின் காகம் எமக்குத் தரும் வாழ்க்கை பற்றிய உபதேசம் விளங்கும்.

'ஆர்க்கும் இடுமின்; அவர் இவர் என்னன்மின்' — — எவர், எமக்கு முன்பின் தெரியாதவர் வந்தாலும் பசித்து வந்தவர்களுக்கு உணவு கொடுங்கள்.

'பார்த்து இருந்து உண்மின்' — — யாராவது பிறர் வந்த பின் அவர்களோடு — விருந்தினர்களோடு — உண்ணுங்கள்.

'பழம் பொருள் போற்றன்மின்' — — பல நாட்களாகத் தேடிய பொருளை பயன் தக்க வகையில் பிறருக்கும் கொடுத்து உதவுங்கள், அதனை வைத்து வெறுமனே பாதுகாக்காதீர்.

'வேட்கை உடையீர்! விரைந்து ஒல்லை உண்ணன்மின்;' — பசி வரும் வேளைகளில் கூட அவசரம் கொள்ளாது மற்றவரின் வருகையை எதிர்பார்த்து உண்ண வேண்டும்.

''காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே'' —காகம் தான் உண்ணும் போது தன் இனத்தைக் கரைந்து கூப்பிட்டு எல்லோரும் சாப்பிடுங்கள் என்று அழைத்துண்ணும் பண்பைப் பாருங்கள்.

மேற்குறித்த பாடலில் திருமூலர் காகத்தின் மேன்மையைக் கூறி மனிதனைக் காகத்திடம் அறிய வேண்டிய அறத்தை விளக்குகிறார். உண்மையிலேயே சாதாரண சிறிய பறவையாகிய காகத்திடம் கூட எவ்வளவு உயர்ந்த நாகரிகங்களை எமது இந்துக்கள் அறிந்து போற்றி வாழ்ந்துள்ளார்கள் என்பதனை எம் வருங்கால சந்ததி அறிய வேண்டும்.

அன்பு, இன ஒற்றுமை, பண்புடைய வாழ்வு இவை இன்றைய உலகுக்கு—எம் இனத்துக்கு—அவசியமானவை.

தன் இனத்தில் ஒரு காகத்துக்கு துன்பம் வருமானால் எல்லாக் காகங்களும் கூடி அழுது துன்பத்தில் கலந்து துயர் தெரிவிக்கும் காட்சியை நாம் காண்கிறோம்.

எனவே புரட்டாதி மாதத்து புண்ணிய விரத காலத்தில் காகத்தின் மகத்துவத்தை அறிந்து எம்வாழ்வை புனிதப் படுத்துவோமாக!

## வாரும் குருவாய் அருள்வீர் பெரியீர்!

| | | | |
|---|---|---|---|
| மாணவர் | உயர்வால் | மானுடம் | வெல்லும்! |
| ஆனவை | செய்யும் | ஆசான் | வேண்டும். |
| பேணுகை | அன்பு | பெய்து; | பீடுடன் |
| தானுறு | பணியைத் | தவறா | தியற்றித்; |
| தன்கைப் | பிள்ளையைத் | தயவாய் | நடத்தி; |
| முன்வைப் | பதிலே | முறைசெயல் | தருமே! |
| அறிமுறை | அணுகும் | செயல்முறை | மனநிலை, |
| நெறிமுறை | தவறிலாப் | புரிமுறை | சிறப்பே |
| உளத்தை | உடலை | ஒருநிலைப் | படுத்தல்; |
| வளத்தால் | தனியாட் | தொடர்பினை | உயர்த்தல்; |
| தன்னை | அறிந்து | தன்னை | அடையும் |
| சின்னஞ் | சிறியவர் | சேமம் | கருதி; |
| எண்ணம் | புனிதமாய் | ஏற்றம் | பெற்றிட |
| வண்ண | வாழ்வில் | வரித்திடல் | பெரும்பணி! |
| பகுத்து | அறிதல்; | பாடம் | அறிதல்; |
| தொகுத்து | அனுபவத் | தொடரில் | அறிதல்; |
| புகுத்தல்; | பொதுவாம் | ஆசார்க் | கெல்லாம் |
| மிகுத்துக் | குருவாய் | மிளிர்ந்திட | வேண்டில் |
| மாணவர் | தம்மையே | மாற்றி | வாழ்விலே |
| ஆனவர் | மேலவர் | ஆக்குதல் | சால்பே! |
| கட்புலச் | செவிப்புல | வாய்ப்புல | மெய்ப்புல |
| உட்பொருள் | உணர்பொருள் | உயர்பொருள் | அறிந்து; |
| பெட்புறச் | செய்தால் | பீடுறும் | மாணவம்! |
| நட்புடன் | அணுகிடில் | அற்புதர் | ஆவர்! |
| பூசல் | பூதமாய் | மாறா | திருக்க; |
| நேசம் | மிகுந்த | அணுகுதல் | முறையும் |
| தேசம் | உலகம் | தேர்ந்ததும் | அறிந்ததும் |
| பாசத் | துடனே | பகிருதல் | மேன்மை |
| கூரும்; | இவற்றை | உருவாக் | கிடவே |
| வாரும்; | குருவாய் | அருள்வீர் | பெரியீர்! |

(நாளை மறுதினம் வரும் ஆசிரியர் தினத்தை ஒட்டி யாழ். கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் யுனெஸ்கோ செயற் திட்டத்தின் சார்பான இவ்வெளியீடு இங்கு பிரசுரமாகின்றது.)


## விடைகள்

**மூளைக்கு வேலை:-**

1) $44 + 44 + 4 + 4 + 4 = 100$

2) செம்பு டாக்டர் ஒரு பெண்மணியாவார். எனவே யாழ்ப்பாணச் சட்டத்தரணிக்கு அவர் சகோதரியே தவிர, சகோதரர் அல்லர்.

3)



பூர்த்தி செய்யப்படாத கோடுகள் நீச்சல் குளத்தின் புதிய வடிவத்தைக் காட்டுகின்றன

முதலில் நீச்சல் குளத்தின் நான்கு மூலைகளிலும் நின்ற மரங்கள் இனிமேல் நீச்சல் குளத்தின் கரையோரத்தின் நடுவில் நிற்கும்.

4) மூன்று தாய்மாரில் ஒருவர் பேத்தியார். அவரின் இரு பிள்ளைகள். அந்தப் பிள்ளைகள் இருவருக்கும் தனா இரு பிள்ளைகள். ஆக மொத்தம் சிற்றுண்டிச்சாலைக்கு சென்றவர்கள் எண்ணிக்கை ஏழுதான். அதனால் ஏழு பேருக்கும் கதிரைகள் கிடைத்தன.

5) அந்த எண்ணுடன் ஒன்றைக் கூட்டினால் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகிய எந்த இலக்கத்தால் பிரித்தாலும் மிச்சம் வராது. எனவே 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகிய ஒன்பது இலக்கங்களாலும் பிரிபடக் கூடிய எண் எது என்பதைக் கண்டுபிடித்து, அதில் இருந்துஒன்றைக் கழித்து விட்டால் நாம் காண வேண்டிய எண் வந்து விடும். ஒன்பது இலக்கங்களாலும் பிரிபடக் கூடிய எண் 2520. எனவே விடை 2519.

**கண்டு பிடியுங்கள்:—**

1) சந்நிதி 2) கதிரை 3) மாதுளை
4) பாரதம் 5) கவிதை

**முயன்று பாருங்கள்:—**

அ) பொன் ஆ) பல இ) வரம்
ஈ) பலம் உ) வலம் ஊ) வாஸ்
எ) வாரம் ஏ) ரம்பம் ஐ) வானரம்
ஒ) வனம் ஓ) பலவான் ஔ) லவன்

## மூன்று செவிடர்கள்...

(IV ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு வீட்டுக்குள் அனைவரும் சண்டையிட்டுக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட களேபரம் காரணமாக வீதியால் சென்ற ஒருவர் வீட்டுக்குள் நுழைந்தார்.

சபாபதி, அவர் மனைவி, சுப்பன், மாணிக்கம் நால்வரும் கூறியதை அவர் கேட்டார். விடயம் அவருக்கு விளங்கி விட்டது.

ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து அவர்களுக்கு சைகை காட்டினார்.

சபாபதியையும், அவரது மனைவியையும் வீட்டுக்குள் போகப் பணித்தார்.

சுப்பனின் நொண்டி ஆட்டை வாங்கிய அவர், அதனைத் தாம் மாணிக்கத்திடம் கையளிப்பதாக சைகை காட்டி சுப்பனை அனுப்பிவைத்தார்.

ஆட்டின் காலை மாணிக்கம் உடைக்கவில்லை என்று தான் சுப்பனுக்கு விளக்குவதாகவும், எனவே சுப்பனுடன் எதுவும் பேசி அவனைக் கோபப்படுத்த வேண்டாம் எனவும் மாணிக்கத்திற்கு விளக்கம் காட்டி, அவனையும் அனுப்பி வைத்தார்.

பின்னர் நொண்டி ஆட்டைத் தூக்கிக் கொண்டு தனது வீட்டுக்குப் புறப்பட்டார் அந்தப் புத்திசாலி நபர்!

## கின்னஸ் சாதனைகள்

□ கோயில் திருவிழாக்கள், இலக்கியக் கருத்தரங்குகள் போன்றவற்றில் மக்களைக் கவரும் விதத்தில் பேசுபவர்களுக்கு நமது நாட்டில் நல்ல மவுசு. கடந்த தசாப்த காலத்தில் பேச்சே உழைப்பான நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

இது அமெரிக்கக் கதை. 1986 ஜூன் மாதம் அங்கு இரண்டு நாள் ஹிப்னாடிஸ கருத்தரங்கு ஒன்றுக்கு உரையாற்ற வந்தார் டாக்டர் ரொனல்ட் டாண்ட். இரண்டு நாள்களில் 16 மணி நேரம் பேசினார். ஒரு மணி நேரத்துக்கு ஒரு கோடி ரூபா என்ற கணக்கில் அவருக்குக் கட்டணம் செலுத்தப்பட்டதாம். இத்தனை செலவான விரிவுரை வேறு யாரும் நடத்தியதில்லை.

★ ★ ★

□ பிரிட்டிஷ் தீயணைப்புக் குழு ஒன்று நூற்றியிரண்டு மணி நாற்பத்துமூன்று நிமிடங்கள் தொடர்ந்து பாண்ட் வாசித்து உலக சாதனை நிலைநாட்டியிருந்தது.

★ ★ ★

□ உயில் எழுதியவர்களில் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஹேர்காரில் என்பவர் சாதனை புரிந்துள்ளார். மூன்று சொற்களை மட்டுமே அந்த உயில் கொண்டிருந்தது. ''எல்லாம் மனைவிக்கே'' (All to Wife) என்றே அந்த உயிலை எழுதிவிட்டு அவர் செத்துப் போனார்.

இது சுருக்கமான உயில் தான். ஆனால் மிகப் பெரிய பேப்பரில் எழுதப்பட்டிருந்தது. அதனால் மிகப் பெரிய உயிலும் கூட.

## சத்தியம்...

(X ஆம் பக்கத் தொடர்)

சத்யவிரதன் அவளுடைய காலில் விழுந்தான். ''சுவாமி! யார் வேண்டுமானாலும் என்னை விட்டுப் போகலாம். தாங்கள் போகவே கூடாது. சத்தியம் என்னிடமிருந்து பிரிந்து போய்விட்டால் அப்புறம் நான் உயிர் வாழ மாட்டேன். செல்வம் போனால் சம்பாதித்துக் கொள்ளலாம். செல்வம் இல்லாவிட்டாலும் உடல் உழைப்பால் நன்கொடை கொடுக்கலாம். வசதிகள் இல்லாவிட்டாலும் மக்கள் தாரீமீக வாழ்க்கை நடத்தினால் மனநிறைவோடு இருப்பார்கள். ஆனால் வாக்கிலும், சொல்லிலும் சத்தியம் போய் விட்டால், அப்புறம் வாழ்ந்து பயனில்லை! ஆகையால் தாங்கள் மட்டும் என்னை விட்டுப் போகவே கூடாது!'' என்று கேட்டுக் கொண்டான்.

சத்ய தேவதையும் ஒப்புக் கொண்டு அவனுடனேயே இருந்து விட்டது. மன நிம்மதியுடன் அரசன் கடலில் நீராடி விட்டுத் திரும்பினான்.

அரண்மனை வாயிலில் அவனை வரவேற்க, செல்வம், ஈகை, சௌபாக்கியம் மூன்றுமே காத்து நின்றன.

''அரசே! சத்தியம் உள்ள இடத்தில் நாங்கள் எப்படியும் வந்து விடுவோம். உன்னைச் சோதிக்கவே கடவுள் எங்களை இப்படி அனுப்பி வைத்தார். நீ நலமுடன் நீண்டநாள் வாழ்வாய்! நாங்கள் உன்னோடு எப்போதும் இருப்போம்'' என்று அவை கூறின. மன்னன் பணிவுடன் தலைவணங்கி அவர்களை ஏற்றுக் கொண்டான்.

வாழ்க்கையை ஒரு சத்திய சோதனையாக எடுத்துக் கொள்ளுங்கள். எண்ணம், வாக்கு, செயல் மூன்றிலும் அதைக் கடைப்பிடியுங்கள். சாந்தியும், சௌபாக்கியமும் தானே உங்களை வந்து அடையும்.

(பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா அருளிய குட்டிக்கதைகளிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வுயிர்க்கும் இரங்கும் அன்னை

தாயன்பு என்பது நிகரற்ற ஒன்று. காரணம் கருதாது குழந்தையிடத்து அன்பு மழையைப் பொழிபவள் தாய். இறைவன் எப்படிப் பட்டவன் என்று கூற வந்த மாணிக்கவாசக சுவாமிகள் கூட நமக்குத் தெரிந்த தாயன்பை வைத்தே விளக்குகிறார். ''தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'' என்கிறார். தாய், பிள்ளையினுடைய வளர்ச்சியில் — நன்மையில் — ஈடேற்றத்தில் கண்ணாக இருக்கிறாள். பிள்ளைக்காக என்றும் இரங்கும் சிந்தையினளாக இருக்கிறாள். இந்தத்தாய் இப்பிறவிக்கு மட்டுமே சொந்தமாகிறாள்.

## எவ்வுயிர்க்கும் இரங்கும் சக்தி

எல்லா உயிர்களுக்கும் தாயாக — எல்லா பிறவிகளுக்கும் தாயாக — என்றும் எல்லா உயிர்களுக்கும் இரங்கிக் கொண்டிருக்கிறாள் ஒரு தாய். அந்தத் தாயே உலக மாதாவாகிய சக்தி.

அந்தச் சக்தியை உமாபதி சிவாசாரியார் 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி' என்கிறார். தனது பேரின்பமாகிய நிலைமையை நிலைபெற்றுள்ள எல்லா உயிர்களும் பொருந்தும்படி அருளும் சக்தி என்கிறார்.

அந்தச் சக்தி குறித்து நாம் அனுட்டிக்கும் விரதமே நவராத்திரி விரதம்.

## நவராத்திரி

அந்த அளப்பரும்கருணை கொண்ட உலக மாதாவாகிய சக்தியை முதல் மூன்று நாளும் துர்க்கை வடிவிலும் — அடுத்த மூன்று நாளும் திருமகள் வடிவிலும் — அடுத்த மூன்று நாளும் கலைமகள் வடிவிலும் வழிபடுகிறோம்.

அந்தச் சக்தி துர்க்கை வடிவில் வீரத்தையும், திருமகள் வடிவில செல்வத்தையும், கலைமகள் வடிவில் கல்வியையும் அருளுகிறாள்.

தீமைகளை வெல்ல வீரம் தேவைப்படுகிறது. தர்மம் செய்யச் செல்வம் தேவைப்படுகிறது. தெய்வத்தையும் தெய்வ நோக்கத்தையும் தெளிந்து கொள்ளக் கல்வி தேவைப்படுகிறது.

## கல்வி, செல்வம், வீரம்

இந்த மூன்றையும் அருளுபவள் சக்தி என்பதை அபிராமிப்பட்டர் பின்வருமாறு கூறுகிறார்.

தனம்தரும் கல்வி தரும்
 ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவுந்
 தரும்
 நெஞ்சில்வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன
 எல்லாம் தரும்
 அன்பரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள்
 அபிராமி கடைக்கண்களே.

முகிலின் கரியநிறத்தைத் தரும் புஷ்பம் முடித்த கூந்தலையுடைய அபிராமிதேவியினது திருக்கடைக்கண்களானவை தம்மெய்யன்பரென்று சிறப்பித்துச் சொல்லப்படும் அடியார்களுக்கே செல்வத்தைத்தரும் — கல்வியைத் தரும் — சோர்வறியாத மனத்தைக் கொடுக்கும் — தெய்வவடிவத்தைக் கொடுக்கும் — வஞ்சமில்லாத மனைவி மக்களைக் கொடுக்கும் — நல்லன எல்லாவற்றையும் கொடுக்கும் என்கிறார்.

## இம்மை, மறுமைப் பயன்

நவராத்திரி விரதம் அனுட்டித்துச் சக்தியை வழிபடுவோர் இம்மைப் பயனாகிய செல்வம் முதலியவற்றைப் பெறுவர். இம்மைப் பயன் மட்டும் தானா பிறவியின் பயன்? மறுமைப்பயனும் இருக்கிறதே! அதுதான் வீடுபேறு.

நாம் இம்மையில் எண்ணும் எண்ணங்கள் இம்மையிற் செய்யும் செயல்கள் அனைத்தும் வீடுபெற நம்மைத் தயாராக்குபவையாக இருக்க வேண்டும். நாம் வீடு பெற நம்மைத் தயாராக்கும் நூல்கள் எவை எவை என்று தெரிந்தெடுத்து கூறுகிறார் ஒரு புலவர்.



தேவர் குறளும்
 திருநான் மறைமுடியும்
மூவர்தமிழும் முனி
 மொழியும் கோவை
திருவாசகமும் திருமூவர்
 சொல்லும்
 ஒருவாசகமென்றுணர்

இந்நூலகள் எல்லாம் எவற்றைக் கூறுகின்றன?

தெய்வத்தின் பெருங் கருணையைக் கூறுகின்றன. ஆன்மாக்களின் இயல்பைக் கூறுகின்றன. தெய்வத்தை ஆன்மா அடைய இருக்கும் தடைகளைக் கூறுகின்றன. தடைகளை வெல்லும் மார்க்கத்தைக் கூறுகின்றன.

நவராத்திரி விரதமும் ஏனைய விரதங்களும் நாம் சமய நெறி நின்று வீடு பெற உதவுகின்றன.

''அன்றறிவாம் என்னாது அறம் செய்க'' என்றார் திருவள்ளுவர். தருமஞ் செய்யத் தவணை போடக்கூடாது. உடனே தொடங்கவேண்டும்.

''நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே ஆளாய அன்பு செய்வோம்'' என்கிறது தேவாரம். எனவே தெய்வத்துக்கு ஆளாய அன்பு செய்யவும் தவணையிடக் கூடாது. உடனே தொடங்க வேண்டும்.

## வீடுபெற நில்

தாய்வெளியே செல்லும் போது குழந்தைக்கு விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்துவிட்டுச் செல்கிறாள். குழந்தை விளையாட்டுப் பொருள்களை வைத்து விளையாடுகிறது. ஆனால் அடிக்கடி படலையைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறது' தாயின் வருகையை எதிர் பார்க்கிறது. குழந்தை ஈடுபடும் செயல் விளையாட்டாக இருந்தாலும் குழந்தையின் மனம் தாயின் வருகையை எதிர்பார்ப்பதிலேயே தங்கி இருக்கிறது.

**- புலவர் ம. பார்வதிநாதசிவம் -**

அதுபோல நாமும் குடும்பம் — வாழ்வு — இவ்வுலகம் என்றெல்லாம் ஈடுபட்டாலும் மனம் உலக மாதாவின் வருகைக்காகக் காத்திருக்க வேண்டும். இதனை அபிராமிப்பட்டர் பின்வருமாறு கூறுகின்றார்.

நின்றும் இருந்தும் கிடந்தும்
 நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்
 மலர்த்தாள் எழுதா
 மறையின்
ஒன்றும் அரும் பொருளே
 உமையே இமயத்
தன்றும் பிறந்தவளே
 அழியாமுத்தி.
ஆனந்தமே,

எழுதாமறையாகிய வேதத்தின் முடிவிற் பொருந்தும் அறிதற்கரிய அர்த்தமாயுள்ளவரே, சிவபெருமானுடைய திருவுருள் மயமாயுள்ளவரே, உமாதேவி

இமயமலையிற் குழந்தை வடிவமாகச் சென்றெழுந்தருளி வளர்ந்தவரே, அடைந்தவர் திரும்பப் பிறவாத மோக்ஷானந்தமான அபிராமி தேவியே தமியேன் நிற்கும்போதும், இருக்கும்போதும், கிடக்கும் போதும் நடக்கும்போதும் தியானிப்பது தேவரீரையே. எக்காலத்தும் வழிபாடு செய்வது தேவரீருடைய மலர் போலும் திருவடியையே.

எனவே நாம் எக்கருமத்தில் ஈடுபட்டாலும் மனம் உலக மாதாவின் வருகைக்கு ஏங்கவேண்டும். உலக மாதாவின் நினைப்பில் மூழ்க வேண்டும். அதுவே வீடு பெற நிற்றலாகும்.

இரங்குவதையே இயல்பாகக் கொண்ட உலக மாதாவாகிய சக்தி வெறுக்கும் செயல்களைச் செய்பவர்களுக்கும் கருணை மழை பொழிந்து ஈடேற்றுகிறாள். தாயால் கைவிடப்படும் பிள்ளையும் உண்டா உலக மாதாவால் விடப்படும் ஆன்மாக்களும் உண்டா?

வெறுக்கும் தகைமைகள்
 செய்யினும் தம்மடியாரை
 மிக்கோர்
பொறுக்கும் தகைமை
 புதியதன்றே புது நஞ்சை
 யுண்டு
கறுக்கும் திருமிடற்றான்
 இடப்பாகம் கலந்த
 பொன்னே
மறுக்கும் தகைமைகள்
 செய்யினும்
 யானுன்னை வாழ்த்து
 வனே ★

# தென்கிழக்காசியாவை....

(1 ஆம் பக்கத் தொடர்)

கீனங்களும் பலவீனங்களும் அலட்சியங்களுமே தீ பரவக் காரணமாகியிருக்கலாம் என்று அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஆனால் தீ இங்கேதான் முதலில் பற்றியது. இன்ன ஆள்தான் தீயை முதலில் மூட்டினார் என்பது பற்றி இதுவரை எதுவுமே கண்டறியப்படவில்லை.

பயிர்ச்செய்கை நடவடிக்கைக்காக குப்பைகளைக் கொளுத்திய சுமார் 20 விவசாயிகளை எங்கோ ஒரு மூலையில் வைத்து வனத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அவர்கள் அப்பாவிகளாகவும் இருக்கலாம். தற்போது தீகொழுந்து விட்டுப் பரவி எரிந்து கொண்டிருக்கும் பிரதேசம் நூறு இருநூறு ஏக்கர்களோ, ஆயிரம் இரண்டாயிரம் ஏக்கர்களோ அல்ல.

சுமாத்திராவிலும், போர்ணியோவிலுமாகச் (கலிமந்தான்) சேர்த்து மொத்தம் ஒரு கோடியே 50 லட்சம் ஏக்கர் வனப் பிரதேசத்தை தீ விழுங்கிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல மலேசியாவின் மத்திய பகுதியில் புதிதாகப் பரவிய தீ சுமார் 2 ஆயிரம் ஹெக்ரயர் வனப் பகுதியை சாம்பராக்கிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பிரதேசம் முழுவதும் பயன் தரும் காட்டு மரங்களையும், சிறுசிறு புதர்ப் பற்றைகளையும் கொண்டது. ''பாம் ஒயில்'' என்கின்ற ஒருவகை எண்ணெயை உலகுக்கு வழங்கும் பாம் மரங்களும், பிளைவூட் ஒட்டுப் பலகைகள் என்கின்ற மரப்பலகையைத் தயாரிக்கப் பயன்படும் மரங்களும் இன்னும் பல அரிய மர இனங்களும் கூட அழிந்து கொண்டிருப்பவற்றில் அடங்கும். அத்துடன் இந்த வனப்பிரதேசங்களில் தங்கள் வாழ்விடங்களைக் கொண்டிருந்த அரிய பறவைகள், மிருகங்கள் என்பனவும் பேரழிவைச் சந்தித்துள்ளன.

லட்சக் கணக்கான ஏக்கர் பிரதேசத்தில் தீ எங்கே மூண்டது என்பதைக் கண்டுபிடிப்பது சுலபமான காரியமல்ல. எங்கோ ஒரு மூலையில் யாரோ எறிந்து விட்டுப் போன சிகரெட்துண்டு, அல்லது பயிர்ச் செய்கைக்காக நிலத்தை துப்புரவு செய்யும் போது மூட்டப்பட்ட தீ அல்லது கட்டுப்பாடற்ற காடழிப்பு முயற்சி அல்லது அரசின் செல்வாக்குப் பெற்ற மர விற்பனை நிறுவனங்கள் திட்டமிட்டுச் செய்த சதி போன்றவையே தீ பரவக் காரணமாக இருந்திருக்கலாம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பெருமளவில் மரங்களைத் தறிப்பதற்காக தீ மூட்டப்பட்டிருக்கலாம் என்றும், பெரிய மரத் தளபாட நிறுவனங்களுக்கு இடையே ஏற்பட்ட போட்டியால் அது ஏற்பட்டிருக்கலாம்என்றும் கூடச் சந்தேகிக்கப்படுகிறது.

காட்டுத் தீ பரவுவதற்கு இவற்றில் எது காரணமாக இருந்தாலும் அதற்கு இந்தோனேசிய வனத்துறைப் பாதுகாப்பு அதிகாரிகளின் அலட்சியமே காரணமாக இருக்கும் — என்று இயற்கை மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

தனது நாட்டில் மாதக்கணக்காக தீ எரிந்துகொண்டிருந்தபோது அது பற்றி இந்தோனேசிய அரசு [illegible] டிக் கொள்ளவில்லை. ஆனால் அதன் பாதிப்பு அண்டை நாடுகளுக்கும் பரவிப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தத் தொடங்கிய போதுதான் அரசு விழித்துக் கொண்டது. அவசர அவசரமாக அயல் நாடுகளிடம் மன்னிப்புக் கோரிய அதிபர் சுஹர்ட்டோ தீயைக் கட்டுப்படுத்த உதவுமாறும் அந்நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பெரும் பிரதேசத்தில் இருந்து எழும் சாம்பல் துகள் கலந்த புகை மூட்டம் வானில் கவிந்து வேகமாக வீசும் வெப்பக் காற்றினால் அண்டை நாடுகளின் வான் பிராந்தியங்களுக்கு அடித்துச் செல்லப்பட்டது. அயல் நாடான மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் வானில் கவியத் தொடங்கிய புகை மண்டலத்தை மக்கள் அவதானித்தனர். சிலருக்கு கண் எரிவு ஏற்பட்டது. வயோதிபர்களில் ஆரம்பித்து பின்னர் இளவயதினரும் இருமத் தொடங்கினர். ஆஸ்த்மா நோயாளிகள் மூச்சுவிடச் சிரமப்பட்டனர். சிலர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்ட போது சுகாதார அமைச்சகங்கள் விழித்துக்கொண்டன.

சிங்கப்பூரும், மலேசியாவும் வளியில் தூசியின் அளவை இடைவிடாது கண்காணிக்கத் தொடங்கின. வளியின் மாசுச் சுட்டெண் இன்று இத்தனை இத்தனை புள்ளிகள் என்ற விவரம் வானொலி மூலமும், தொலைக்காட்சி மூலமும் தினமும் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் வீதிகளில் மட்டுமல்ல வீடுகள், கட்ட [illegible] கள் முகமூடிகளை அணிந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டனர். மாசடைவதைக் குறைப்பதற்காக வாகனங்களைப் பயன்படுத்துவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

வளியில் மாசின் அளவு குறிப்பிட்ட வீதத்துக்கு அதிகமாக உள்ள இடங்களில் பாடசாலைகளை மூடி விடுமாறு மலேசியப் பிரதமர் மஹதீர் முஹமட் உத்தரவிட்டார். வயோதிபர்களும், நோயாளர்களும் வீதிகளில் நடமாடவேண்டாம் என்று கேட்கப்பட்டனர்.

பிள்ளைகளை வெளியே விளையாடச் செல்ல அனுமதிக்கப் பெற்றோர் அஞ்சினர்.

கணனி போன்ற நவீன எலக்ரோனிக் உபகரணங்களைக் காற்றுத் தூசியில் இருந்து பாதுகாப்பது பெரும் பிரச்சினையானது. கணனி உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் பெரிய நிறுவனம் ஒன்று தனது நாளாந்தப் பணிகளை முடக்கியது.

மலேசியாவிலும் இந்தோனேசியாவிலும் தரை மற்றும் வான் வழிப் போக்குவரத்து தடைப்பட்டது.

மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் சரவாக் (Sarawak) பகுதியில் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டது. அங்குள்ள குச்சிங் (Kuching) நகர மருத்துவமனை நோயாளர்களால் நிரம்பி வழிந்தது. விடாது இருமிக்கொண்டும், மூச்சுவிடச் சிரமப்பட்டுக் கொண்டும் நூற்றுக் கணக்கான மக்கள் ஆஸ்பத்திரிக்கு வெளியே நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

புகை மூட்டத்தின் தாக்கம் சிங்கப்பூர், மலேசியாவைக் கடந்து தாய்லாந்தின் தென் பகுதிமாவட்டங்களிலும்உணரப்பட்டுள்ளது. இந்தோனேசியாவின் வடகிழக்குப் பக்கமாக உள்ள பிலிப்பீன்ஸ் தீவுகளுக்கும் தென்மேற்கே உள்ள இந்தியாவின் நிக்கோபார் தீவுகளுக்கும் புகை மண்டலம் பரவலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்தோனேசியாவில் இருந்து வடக்குத் திசை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் புகை மண்டலம் காற்றின் திசை மாற்றத்தினால் வடமேற்குப் பக்கமாக நகருமாயின் இந்திய மற்றும் இலங்கை வான்பரப்பினுள்ளும் அது கலக்கக் கூடும். எனினும் வங்காள விரிகுடாவின் பெரும் பிரதேசத்தைத் தாண்ட வேண்டி இருப்பதால் இது உடனடியாகச் சாத்தியப்பட மாட்டாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பெரும் காட்டுத் தீயினால் ஏற்பட்டிருக்கும் உடனடிப் பாதிப்புக்கள் குறித்துப் பரபரப்பாக வெளியாகிக் கொண்டிருக்கும் செய்திகளுக்கு இடையே இதன் நீண்ட காலப் பாதிப்புக் குறித்து விடுக்கப்படும் அபாய அறிவிப்புகள் அடங்கிப் போயுள்ளன.

கட்டுப்படுத்த முடியாமற் பரவும் இந்தக் காட்டுத் தீ தனிப்பட்ட சுகாதாரப் பாதிப்புகளுக்கு அப்பால் தென் கிழக்கு ஆசியாவின் எதிர் காலப் பொருளாதார வளர்ச்சியிலும் நெருப்பை மூட்டி விட்டிருப்பதாகபொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கைக் குரல் எழுப்பியுள்ளனர்.

ஏற்கனவே மந்த கதியில் வளர்ந்து வரும் இந்தோனேசியப் பொருளாதாரத்தை இது மிகவும் பாதிக்கும். உலகளாவிய ரீதியில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த இப்பிரதேசத்தின் சூழல் மாசடைந்து விட்டது. இந்தோனேசியாவுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அமெரிக்காவும், பல ஐரோப்பிய நாடுகளும் தத்தமது நாட்டுப் பயணிகளை அறிவுறுத்தியுள்ளன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org